பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com சவரி 2026



உவமைத்தொடர் உணர்த்தும் வாழ்வியலாளர்

# ஐயா மோகன்

## நேர்காணல்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – சனவரி 2026

649

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆயிஷா சகீலா

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்கு அன்பான வணக்கம்!

புத்தம் புதிதாக மலர்ந்திருக்கும் 2026 உங்கள் அனைவரின் அபிலாஷைகள் நிறைவேறும் ஆண்டாகவும், சுபீட்சத்தைக் கொண்டு வரும் ஆண்டாகவும், அதிக மனமகிழ்ச்சியைத் தரும் ஆண்டாகவும் அமைய எனது வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும்!

இப்புதிய ஆண்டில் எல்லோரின் நல்லெண்ணங்களும் ஈடேற, சுறுசுறுப்பாய் உழைப்பதாக உறுதி பூணுவோம். அத்துடன் சகமனிதரோடு நேசம் கொண்டு மனிதம் தழைத்தோங்கச் செய்வோம். இவ்வுலகில் ஒவ்வோர் உயிரும் விலைமதிப்பை நிர்ணயிக்க முடியாத அளவு உயர்வானவை என்பதை உணர்ந்து, எல்லோரும் இன்புற்றிருக்க நம்மாலான முயற்சிகளை மேற்கொள்வோம்.

தமிழ் வளர்க்கும் எனது இலட்சியமும் இறையருளுடனும், உங்களனைவரின் ஆசிர்வாதத்துடனும் இனிதே தொடரும்.

உங்களுக்காக பல சுவையான அம்சங்களை புத்தாண்டுப் பரிசாகக் கொண்டு வந்துள்ளோம். வாசித்துக் கருத்துக்களைப் பகிருங்கள்! உங்கள் உன்னதமான கருத்துக்கள் எங்களுக்கு வளம் சேர்க்கும் உரமாகட்டும்!

வரப்போகும் பொங்கலுடன் அனைவர் நெஞ்சங்களும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் பொங்கட்டும்! கொண்டாடும் அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்!



என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# கல்வியின் கட்டாயம்



இறைவனின் படைப்பில் மனித குலத்திற்கே உரிய பல பண்புகளில் கல்வியறிவும் ஒன்று.

கல்வியறிவு என்பது படித்தல், எழுதுதல் மட்டுமல்லாமல் பற்பல புதிய விஷயங்களை அறிந்து கொள்ளல், நமக்குத் தெரிந்ததை பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல் முதலியவைகளும் அடங்கும்.

மானிட உள்ளத்தில் கல்வியானது தாலாட்டில் இருந்தே தொடங்குகிறது.

ஒரு தாய் தான் கல்வி கற்க முடியாத ஆதங்கத்தை பின்வரும் பாடலால் தன் குழந்தைக்கு தாலாட்டின் போது வெளிப் படுத்துகிறார்.

'அஞ்சு வயசில் நான்- கண்மணியே! அரிச்சுவடிய படிச்சேனம்மா! பத்து வயசுக்குள்ளேயே நான் படிப்பெல்லாம் முடிச்சேனம்மா!'

தான் படிக்காவிட்டாலும் தன் கணவனும், அவள் சகோதரனும் படித்ததை குறிப்பதற்காக அந்தக் குழந்தையிடம் 'சாய்ந்து கணக்கு எழுதுவார் -கண்ணே!! சமத்துள்ள உன் தகப்பன்!! குந்தி கணக்கு எழுதும்- கண்ணே!! கோபாலன் உன் மாமன்!! என்பாள்.அந்தக் குழந்தை படிக்க வேண்டும் என்பதற்கு 'நாலெழுத்து நீ படிச்சு நல்லபடியா நடக்கணும் கண்ணே!!,' என்றாளாம்.

பாடசாலைக்கு போக மறுக்கும் குழந்தையை அவளது தந்தை 'தலைவாரிப் பூச்சூடி உன்னை பாடசாலைக்கு போ என்று சொன்னாள் உன் அன்னை,' என்று சமாதானம் கூறி குழந்தையை பள்ளிக்குச் செல்ல சொல்கிறார்.

எண்களைப் பயிற்றுவிக்கும் போதும் கூட 'ஒரு குடம் தண்ணீர் ஊத்தி ஒரு பூ பூத்தது; ரெண்டு குடம் தண்ணி ஊத்தி ரெண்டு பூ பூத்தது,' என்று பாடலினால் விளக்கினர்.

ஔவையாரும் 'இளமையில் கல்' என்றார்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பதும் நாம் அறிந்ததே. இளமையில் கற்கப்படும் கல்வி பசு மரத்தில் ஆணி அடித்தால் எவ்வாறு சுலபமாக முடியுமோ

அவ்வாறே கல்வியும் மனதில் நன்றாகப் பதியும். அதே சமயத்தில்,

இளமையில் கல்வியை புறக்கணிப்பவன் இறந்தகாலத்தை இழந்தவன் ஆகிறான். எதிர்காலத்தையும் இழக்கிறான். இதனையே திருவள்ளுவரும் 'கல்லாமை' என்னும் அதிகாரத்தை படைத்து கல்வியறியாமையின் விளைவை விளக்குகிறார்.

அறியாமைதான் தீவினையின் மூலவேர். மகாராஷ்டிர மாநிலத்தின் புகழ்பெற்ற ராஷ்டிரசந்த் துகடோஜி மஹராஜ் தன் மராட்டி நூலான 'கிராம் கீதா'வில், 'கல்வி அளிக்க வேண்டியது பெற்றோரின் கடமை. பெற்றோரின் அறியாமையால் பிள்ளைகள் அவதியுற கூடாது,' என்றார்.

சில சமயத்தில் பெற்றோர் வலியுறுத்தியும் சில பிள்ளைகள் கல்வியை கற்க தயங்குவர். அவ்வாறான பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்கும் விதமாக

'கற்கை நன்றே கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே,'- என்று கூறி பிள்ளைகள் நல்ல ஆசிரியர்களை நாடியும் தேடியும், அவர்களை அணுகியும் தனக்கு கல்வி அளிக்க வேண்டும் என வேண்டிக் கொள்ள வேண்டும் எனபது மேற்கூறிய சொற்றொடர் விளங்குகிறது.

கல்வி அனைத்திலும் உயர்ந்தது. ஏழ்மை பிடியில் வாழ்ந்த மகாகவி பாரதியாரை நாம் இன்றும் நினைவு கொள்கிறோம். அவர்தம் நூல்களையும் பாடல்களையும் நினைவு கூறுகின்றோம். அதற்கெல்லாம் காரணம் அவர் கற்ற கல்வியால் தான் இப்போதும் நிலைத்து நிற்கிறார்.

ஏழ்மையின் கோரத்தை அனுபவித்தவராய் கல்வியின் சிறப்பை புரிந்தவராய் 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம்;

பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்,' என்று கூறுகிறார்.

ஏழைகளின் வாழ்வை முன்னேற்ற அவர்களுக்கு கல்வியறிவு தர வேண்டும் என்பதை 'ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என்ற வரியால் கூறுகிறார், நம் மகாகவி. துகடோஜி மஹாராஜ் 'பராமரிக்கப்படும் பள்ளிகள் உள்ள கிராமங்கள் சொர்க்கத்திற்கு சமம்,' என்கிறார்.

இனி பெண்களுக்கும் கல்வி வேண்டும் என்பதை வலியுறுத்த பாரதியார் பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்றார். ஒரு ஆண் படித்தால் அவன் ஒருவன் தான் முன்னேறுவான். ஒரு பெண் படித்தால் ஒரு குடும்பமே முன்னேறும். அவ்வாறு குடும்பங்கள் முன்னேறினால் சமுதாயம் முன்னேறும். இதனை உணர்ந்த மகாராஷ்டிர மாநிலத்தின் புரட்சியாளராய் இருந்த ஜோதிராவ் ஃபூலே தன் மனைவி சாவித்திரிபாய் ஃபூலேவிற்கு கல்விப் பயில உற்சாகப்படுத்தி அவரை முதல் பெண் ஆசிரியர் ஆக்கினார்.

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு அவன் கற்ற கல்வியே அவனுக்கு புகழை தேடி தருகிறது.

மகாத்மா காந்தியடிகள் 'வாழ்க்கைக்காக கல்வி, வாழ்க்கை மூலம் கல்வி, வாழ்க்கை முழுவதும் கல்வி,' என்கிறார் பாரதியோ 'நீதி உயர்ந்த மதி கல்வி' என்றும் துகடோஜி மஹாராஜோ 'வாழ்வியலை கற்றுக்கொடுக்கும் கல்வி ஒரு போதும் அடுத்தவரிடம் கையேந்த வைக்காது,' என்றும் கூறுகின்றனர்.

இவ்வாறு இன்றியமையாத கல்வியானது வியார நோக்கில் சிக்கி தவிப்பதை பார்க்கும் அவலமும் இன்று நிலவுகிறது.

கட்டாயமாக கல்வி சமுதாயத்தின் கடைசி குடும்பம் வரை எடுத்துச் செல்ல வேண்டிய நேரமிது.

ஜெயஸ்ரீ எம்.சாரி,

**சென்னை.**



# இரத்த சோகை

மானிட உடலில் இரும்புச் சத்துக் குறைபாட்டால் ஏற்படுவது இரத்த சோகை. உடல் முழுவதும் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்லும் ஆரோக்கியமாசிவப்பு இரத்த அணுக்கள் குறைவாக இருந்தால் உருவாகும் இந்த இரத்தசோகை நோய்.

இதன் அறிகுறிகளாக இருப்பவை உடல் சோர்வு பலவீனம் மூச்சுத்திணறல், கைகால் வலி, காது இரைச்சல், அடிக்கடி கிருமித் தொற்று ஏற்படுவது, இதயப் பாதிப்பு போன்றவையே.

**இதன் வகைகள்**

1. பிறவியிலேயே இருப்பது
2. படிப்படியாக உருவாகி வளர்வது

**காரணங்கள்**

இரும்புச்சத்துக் குறைவு உணவுகள் உணவு எடுக்க முடியாத வறுமை. பட்டினி, குடல் நோய்கள், கல்லீரல் பிரச்சினை, தைராய்டு கோளாறு, சிறுநீரக வியாதிகள், புற்றுநோய்கள்

**தினசரி தேவை ....**

**வளரிளம் பருவம்**

11 மி.கி .... ஆண்

15 மி.கி.....பெண்

**பெரியவர்கள்**

8 மி.கி......ஆண்

18 மி.கி.....பெண்

**கர்ப்பிணிகள்**

27 மி.கி........தினமும்

**கண்டுபிடிக்கும் முறை**

இரத்த பரிசோதனைகள் செய்ய வேண்டும்

1. Hb பரிசோதனை - இரத்த சிகப்பு அணுவின் பெரும்பங்கு இது
2. சிகப்பு அணுக்கள் எண்ணிக்கை
3. முழு இரத்த எண்ணிக்கை ( cbc )
4. இரத்த தடவல் முறை ( smear) - நுண்ணோக்கி மூலம் அளவு வடிவம் பார்ப்பது
5. ரெட்டிகுளோசைட் எண்ணிக்கை சிகப்பு அணுக்களின் வளராத அணுக்கள் இவை
6. மிகி கீழே Hb இருந்தால் மோசமான இரத்தசோகை - இது தான் மிகவும் கவனித்து சரிசெய்ய வேண்டியது

**இரத்த சோகை சரிசெய்ய........**

இரும்பு சத்து நிறைந்த உணவுகள், இரும்பு சத்து மாத்திரைகள், ஊசிகள், மோசமான நிலையில் இரத்தம் ஏற்ற வேண்டும்.

**இரும்பு சத்து உணவுகள்**

**அசைவம் .......**

இறைச்சி..... கோழி, ஆடு, மாடு, கடல் உணவுகள், கல்லீரல், மண்ணீரல்



**சைவம்**

காய்கறிகள். எந்த காயை அரிந்தால் கருப்பாக இருக்குமோ அவற்றை உண்ண வேண்டும்.

வாழைக்காய், வாழைத் தண்டு, வாழைப்பூ, கத்திரிக்காய், சுண்டக்காய் போன்றவை.

பச்சை இலை, காய்கறிகள், கீரை வகைகள், முருங்கைக்கீரை, கரிசலாங் கண்ணி கீரை, பொன்னாங்கண்ணி கீரை முளைக்கீரை, அரைக்கீரை, அகத்திக்கீரை போன்றவை

**பழங்கள்........**

ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி, பெர்ரி பழங்கள், கிவிப்பழம்,

**உலர்ந்த பழங்கள்**

பேரீச்சம் பழம், அத்திப்பழம், கொட்டைகள், விதைகள் போன்றவை

உணவு சாப்பிட்டதும் காபி டீ ஒயின் போன்றவை குடித்தால் இரும்பு சத்து உறிஞ்சப்படுவதை தடுக்கும்.

மீண்டும் சந்திப்போம் வேறு ஒரு தலைப்பில்

உங்கள் மருத்துவர்

**ந. சந்திர மோகன்**

# மரணம்

மூன்று நபர்களுக்கு மரண தண்டனை நிர்ணயிக்கப்பட்டது .

மூவரும் தூக்கு மேடைக்கு வரவழைக்கப்பட்டனர்.

(1) - மதத்தலைவர்

(2) - வழக்கறிஞர்

(3) - இயற்பியலாளர்

முதலில் மதத்தலைவர் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது.

'கடைசியாக ஏதாவது சொல்ல வருகிறீர்களா?' என வினவப்பட்டது.

ஆண்டவன்! ஆண்டவன்! ஆண்டவன் அவனே என்னை காப்பாற்றுவான் என்றார்.

மேடை இழுக்கப்பட்டது,

மதத்தலைவரின் கழுத்தை நெருங்கிய போது சட்டென்று கயிறு நின்றுவிட்டது. மக்கள் அதிசயத்தோடு பார்த்தனர்.

அவரை விட்டுவிடுங்கள்!

ஆண்டவன் அவரை காப்பாற்றி விட்டான். என்றனர்.

மதத்தலைவர் தப்பிவிட்டார்.

அடுத்ததாக வழக்கறிஞர், அழைத்து வரப்பட்டார்.

அவர் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது.

'கடைசியாக ஏதாவது சொல்ல வருகிறீர்களா?' என வினவப்பட்டது.

'நீதி! நீதி! நீதியே வெல்லும்' என்றார்.

மேடை இழுக்கப்பட்டது, வழக்கறிஞரின் கழுத்தை நெருங்கிய போது சட்டென்று கயிறு நின்றுவிட்டது.

மக்கள் அதிசயத்தோடு பார்த்தனர். அவரை விட்டுவிடுங்கள்!

நீதி அவரை காப்பாற்றிவிட்டது. என்றனர்.

வழக்கறிஞர் தப்பிவிட்டார்.

அடுத்ததாக இயற்பியலாளர் அழைத்து வரப்பட்டார்.

அவர் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது. 'கடைசியாக ஏதாவது சொல்லவருகிறீர்களா?' என வினவப்பட்டது.

எனக்கு ஆண்டவன் பற்றியும் தெரியாது, நீதி பற்றியும் தெரியாது.

ஆனால் அங்கே தூக்கு மேடை கயிற்றில் ஒரு முடிச்சு இருக்கிறது.

அதனால்தான் கயிறு கழுத்தை பதம் பார்க்கவில்லை என்பது எனக்குத் தெரியும்' என்றார்.

உடனே தூக்குமேடையை பரிசீலித்தனர். அங்கே அந்த கோளாறு இருந்தது. அதனை சரிசெய்து பின்னர் இயற்பியலாளர் தூக்கில் ஏற்றப்பட்டு தலையும் துண்டிக்கப்பட்டது.

நீதி:-

--------

சில சந்தர்ப்பங்களில் வாய் மூடி இருக்க பழகிக்கொள்ளுங்கள்!

தெரிந்த உண்மைகளையெல்லாம் உளறிக்கொட்டுவதால் உங்கள் கழுத்துக்கே கூட ஆபத்தாகலாம்!!

சிலவேளை முட்டாளாக இருப்பதுதான்

புத்திசாலித்தனமானது!

# சமகால உள நெருக்கடிகள்...



இன்றைய இந்த நவீன விஞ்ஞான உலகின் உத்வேகமான மாற்றத்தோடு உள்ளங்களை இணைத்துப் பயணிப்பதென்பது பெரும் சவாலாகவே இருந்து வருகின்றது. தொடரும் முன்னேற்றங்களுக்குத் தக்கவாறே இடர்களும், அனர்த்தங்களும், நவீன தொழிநுட்பத்தினூடாக பழக்கப்பட்ட வாழ்வொழுங்கு எங்கேயோ எம்மை அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது என்று உள்மனம் ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறது.

எமது கரங்களில் தவழும் ஸ்மார்ட் தொலைபேசிகள் பாவனை கூட ஓர் போதையாக மாறியுள்ளதனை நாம் யாவரும் அறிவோம். ஓரிரு நிமிடங்கள் கூட அதனை கைவிட்டுவிட்டு எம்மால் இருக்க முடியாது ஓர் தொழில்நுட்ப அடிமைத்தனமான சூழலுக்குள் தள்ளப்பட்டு இருக்கிறோம். அவற்றோடு கூடிய வேகமான மாறுதல்கள் கல்வியிலும், சமூக வாழ்விலும், சட்டதிட்டங்கள், விதிகள், ஒழுங்குகளிலும் ஏற்படும் எதேச்சையான பல மாற்றங்கள் எமது உள்ளங்களைச்சென்றடைவதற்கு முன்பாகவே திடீரென ஏற்படும் காலநிலை மாற்றங்கள், சூழலியல் மாற்றங்கள் மனித வாழ்வை பூகோள ரீதியாக நாளுக்கு நாள் அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது.இதனால் பேரழிவுகள் தரும் தாக்கங்களை விட மனதளவில் ஏற்படும் மீள முடியாத திண்டாட்டங்கள் உலக வாழ்வில் மனித நடைமுறை வாழ்வைப் பாதித்து முடக்கிவிட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே, இத்தகைய நிலையில் இருந்து மனித சமூகத்தைப் பாதுகாப்பதே இன்றைய நவீன சவாலாக தொடர்கிறது. ஏனெனில் இவ்விடயம் ஒட்டுமொத்த முன்னேற்றங் களையும், வளர்ச்சிகளையும், மகிழ்ச்சி கரமான வாழ்வொழுங்கையும் பாழாக்கிவிடக்கூடிய வல்லமை படைத்ததாகும்.எனவே,இன்றைய கல்வியியல் தேவைகளில், மாற்றங்களில் பிரயோக அடிப்படையிலான நடைமுறைப் படுத்தலுடன் கூடிய உளவியல் ரீதியாக உள்ளங்களை தயார்படுத்தல் என்பதே கவனத் திற்கு கொண்டுவரப்பட வேண்டிய மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். இது விடயத்தில் ஒவ்வொரு அரசும் தனித்தனியான, பிரத்தியேகமான வயதுகளை அடிப்படையாகக் கொண்ட உளவளத்துறைக்கான தனியலகு களை ஆரம்பிப்பதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வித்திட முடியும் என்பதே ஆழமான நம்பிக்கையாகும்.

சேஹு மொஹம்மது பெனாஸிரா

# புத்தாண்டு வாழ்த்தும்

அமின்

.

வருகவே புத்தாண்டு
வான்போலச் செல்வம்
தருகவே இந்த
தரணி - பெருகவே
முற்றும் செழிக்கவே
முன்னேற்றம் காணவே
பற்றும் உயரவே
பார்.

.

ஏடி

.

பொங்கல் திருநாளே
பூவாகப் பூத்துவரும்
எங்கள் திருநாளே
ஏர்பிடிக்கும் - எங்கள்மண்
நாற்றிசையும் ஓங்கிநின்று
நாளும் உணவளித்து
ஏற்றம்கா ணட்டும்
இனி.

.

அமின்

.

போனதெல்லாம் போகட்டும்
பொய்யோடும் மெய்யோடும்
ஆனதெல்லாம் ஆகட்டும்
ஆண்டேநீ - தேனன்ன
இன்று முதலினிப்பை
ஈந்து மகிழ்வூட்ட
என்றும் துணையாவாய்
இங்கு.

ஏடி

.

அரும்பின் மணமும்
அகமெல்லாம் பூத்தக்
கரும்பின் இனுப்பும்
களிப்பும் - வரும்வண்ணம்
ஐம்பூதம் எங்கள்
அனைத்தையுமே காத்துநின்று
வையம் செழிக்கட்டும்
வாழ்ந்து.

.

அமின்

.

இல்லார்க்கு வாழ்வும்
இருப்போர்க்கு நற்குணமும்
பொல்லார்க்கு அழிவும்
பொருவில்லா - கல்வியும்
எல்லார்க்கும் வாய்க்க
இனியநற் புத்தாண்டில்
பல்லாண்டு வாழ்த்துகிறேன்
பார்த்து.

.

ஏடி

.

செந்தமிழர் வாழ்வு
செழித்தோங்க; நாளெல்லாம்
அந்தமாதி ரெண்டும்
அருளோங்க - வந்திருக்கும்
செண்டான இந்தச்
சிறப்புத் திருநாளைக்
கொண்டாட வாழ்த்துகிறேன்
கூர்ந்து.

# பொங்கல் வாழ்த்தும்

அமின்

.

வாசிப்(பு) அதிகரிக்க;
வாழ்வில் அனைவருடன்
நேசிப்(பு) அதிகரிக்க
நில்லாமல் - மாசில்லா
மக்கள் உருவாக
மாறிவரும் புத்தாண்டே
திக்கில் உணர்த்தாய்த்
திளைத்து.

.

ஏடி

.

கொண்டாட மட்டும்
குவியாமல் இப்பொங்கல்
செண்டாகி வாசம்
செழித்தோங்கக் - கண்களில்
முல்லைச் சிரிப்பும்
முகத்தில் இறையருளும்
எல்லைக் கடக்கட்டும்
இங்கு.

.

அமின்

.

சாதி ஒழியட்டும்
சத்தியங்கள் தான்பூத்து
சோதி எரியட்டும்
சொர்க்கமிந்த - மேதினியில்
நம்மால் வளர்கவென
நானிந்தப் புத்தாண்டில்
செம்மொழியால் வாழ்த்துகிறேன்
சேர்த்து.

ஏடி

.

மேழியர்கள் வாழ்வில்
மிகுந்த பொருட்பெருகி
ஆழியென வாகி
அனைவரின் - நாழியெலாம்
மங்கலம் மட்டும்
மலர மனமுவந்திப்
பொங்கலை வாழ்த்துகிறேன்
பூத்து.

.

அமின்

.

எல்லாரும் வாழ
இயற்கை வளங்களைநாம்
கொல்லாமல் வாழவைக்கக்
கொண்டாடி - முல்லைமணம்
அன்னவரும் புத்தாண்டை
அற்புதமாய் மாற்றுதற்கு
முன்னிருப்போம் நாளும்
முளைத்து.

.

ஏடி

.

சேற்று நிலம்விளைய
செந்நெல் கதிர்மலர
ஆற்றுநீர்ப் பாய்ச்சல்
அதில்சேர - ஈற்றுவரை
ஊரார் பசிபோக்கும்
ஒப்பில்லா பொங்கலினை
தீராமல் வாழ்திடுவோம்
தேர்ந்து.

அமின்

.

ஒற்றுமை ஓங்க
ஒருவனே தேவனெனும்
பற்றுள்ளம் நாளும்
பயின்றுவர - கற்றமொழி
என்னவா னாலும்
எழுத்தாளர் தான்பெருக
இன்பம்தா புத்தாண்டே
இங்கு.

.

ஏடி

.

ஏருக்கு இணைய்
எதுவுமே இல்லையென
ஊருக்கு நாளும்
உணர்வுபெற - நீருக்கும்
காற்றுநிலம் தீவானம்
காணும் இறையாக
போற்றுகிற பொங்கலிது
போ.

அமின்

.

இல்லார்கள் என்னும்
இடர்கள் விலகிவிட
செல்வர்கள் என்று
செழித்துநிற்க - நல்லமனம்
ஆண்டவனைப் போல
அனைவருக்கும் ஈயப்புத்
தாண்டேவா இங்கே
தனித்து.

.

ஏடி

.

புத்தாடைக் குள்ளும்
பொருவில் உழைப்புளதாய்ச்
சித்தாடை பூண்டவர்கள்
சிந்திக்கப் - புத்தாண்டில்
எண்ணமெலாம் மாறி
இதயத்தில் அன்புகொண்டு
வண்ணமாய் மாற்றுதற்கு
வா.



ஏடி

.

பொங்கலோ பொங்கலெனப்
 பூக்கும் ஒலிக்கிணையாய்
எங்குமே ஓசைகள்
 இல்லையென - இங்கிருக்கும்
எல்லார் மனமும்
 இனிமேல் நினைந்துருக
இல்லாண்டே வாராய்
 இனித்து.

.

அமின்

.

வையத்தில் நோய்களினி
 வாரா திருப்பதற்கும்
மெய்யெல்லாம் ஆரோக்யம்
 மீள்வதற்கும் - உய்க்கும்
அனைத்தும்இப் புத்தாண்டில்
 ஆனந்தம் தந்து
நினைந்துருக வைக்கட்டும்
 நின்று.

.

ஏடி

.

ஆழியலை போல
 அனைத்துநிலம் நீர்பெருகி
மேழியலை விசி
 மிளிர்வதற்கு - வாழியவே
என்றிந்தப் புத்தாண்டை
 யானும் மகிழ்வோடு
இன்புற்று வாழ்த்துகிறேன்
 இன்று.

.

ஏடி

.

என்றும் விவசாயம்
 எல்லாம் விவசாயம்
நன்றாம் விவசாயம்
 நாளுமெனக் - குன்றாத
எண்ணம் மலர
 இனியிப் பொங்கலினை
பண்ணால் புகழ்கின்றேன்
 பார்த்து.



# வலியால் நனைந்த விழி

H.D.H பஹ்றா, Colombo

அன்று வெள்ளிக்கிழமை ஸுபஹ் தொழுதுவிட்டு மரியம் அடுப்பை பற்ற வைக்க விறகு எடுக்க வெளியே வந்தாள்.

அனைத்தும் இரவு பெய்த மழையில் நனைந்து இருந்தன.

ஐயோ இப்ப என்ன பண்ணுவது என தனக்குத் தானே கேள்வி கேட்டவளாக உள்ளே வந்தாள்.

கடதாசித்துண்டுகளை எடுத்து அடுப்பை பற்ற வைத்தாள்.

நீண்ட நேரத்தின் பின் நீரும் கொதிக்க தேநீர் தயாரித்தாள்.

தூங்கிக் கொண்டிருந்த மகனின் தலையைக் கோதியவளாக மகன் ரிசாத் எழுந்திருங்க ராஜா என எழுப்பாட்டினாள்.

அவனும் சோம்பலை நீக்கிக்கொண்டே எழுந்திருக்க தேநீரைக் கொடுத்தாள்.

என்ன உம்மா வெறும் தேநீர் தானா?

தொடர்ந்து குடிச்சி குடிச்சி முடியல

பரவால்ல தாங்க என்று குடித்து முடித்தான்.

கண்கள் ஈரமாக தாய் என்ன பன்றது ராஜா ஒங்கட வாப்பா இறந்த பிறகு நாங்க ரெண்டு பேரும் அனுபவிக்காத கஷ்டங்களா மகன்

எங்கட குடும்பமும் எங்கள தட்டி விட்டுட்டாங்களே...

பணமும் பதவியும் இருந்தா மட்டும் தான் அனைவரும் சேர்ந்து நடப்பாங்க இல்லையா யாருமே கண்டுக்க கூட மாட்டாங்க..

உங்க படிப்புல தான் எங்கட எதிர்காலமே இருக்கு ராஜா..

நீங்க போய் குளிச்சிட்டு தொழுதுட்டு ரெடியாகுங்க.



ஸ்கூல் போக..

சரி உம்மா என்று பாடசாலை செல்ல ஆயத்தமாகினான்.

எட்டாம் தரத்திலே கற்றாலும் தாயின் கஷ்டங்களைப் புரிந்து நடந்தான்.

இவ்வாறு ஒவ்வொரு நாட்களும் நகர்ந்து சென்றது.

மரியமும் வீடுகளுக்குச் சென்று வீட்டு வேலைகளைச் செய்து கொடுத்து சிறு வருமானம் பெற்றுக் கொண்டாள்.

அதிலிருந்து வரும் பணத்திலே மகனுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வாங்குவாள்.

மகனுக்கு உணவுகளை செய்து கொடுத்து விட்டு நிறைய நாள் அவள் வயிற்றை தண்ணீரால் நிரப்பினாள்.

இவ்வாறே நாட்களும் நகர ரிஷாத்தும் நன்றாக படித்து வந்தான்.

சாதரண தரத்தில் சிறந்த சித்திகளைப் பெற்றான்.

உயர் தரத்திற்காக சிறந்த பாடசாலையில் அனுமதி கிடைத்தது.

உயர் தரம் கற்றிட பாடசாலை சென்றான்.

அங்கு நன்றாக படித்து வந்தான்.

காலங்கள் சென்றன.

ரஷாதிடம் பல மாற்றங்கள் தென்பட்டன.

தாயிடம் எறிந்து விழுவது. தாய்

# கறி மிளகாய் புளியானம்

தேவையான பொருட்கள்

கறி மிளகாய் - 6
எழுமிச்சைப்பழம் - 1
எண்ணெய் - 1/2 போத்தல்
மஞ்சள் - 1/2 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
மிளகு - 1/2 தேக்கரண்டி
சிறிய வெங்காயம் - 1
தக்காளில்1
தேங்காய்ப்பால் ல் கட்டிப்பால்
இஞ்சி
வெள்ளைப்பூண்டு
கறிவேப்பிலை

செய்முறை.

முதலில் கறிமிளகாயை கழுவி கிழம் விட்டு வெட்ட வேண்டும். அதனை உப்பு, மஞ்சள் சேர்த்து பிரட்டி வைக்க வேண்டும்.

பிறகு அதனை பொறித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

கட்டிப்பாலை ஒரு சட்டியில் இட்டு அதிலே நறுக்கிய வெங்காயம், தக்காளி, இஞ்சி, வெள்ளைப்பூண்டு, எழுமிச்சை சாறு சேர்க்க வேண்டும்.

பின்னர் தேவையான அளவு உப்பு, மஞ்சள், மிளகு சேர்த்து பாலை நன்றாக கொதிக்க விட வேண்டும். பின்னர் அதிலே கறிமிளகாயை இட்டு அடுப்பிலிருந்து இறக்க வேண்டும்.

சுவையான கறி மிளகாய் புளியானம் தயாராகி விட்டது.

குறிப்பு ,,, காய்ச்சல் காலங்களில் உணவு உண்ண இது சிறந்ததாக அமையும்.

' நீங்களும் இன்றே செய்து பாருங்கள்

சொல்லை மதிக்காது நடப்பது என பல மாற்றங்கள் உருவெடுத்தது.

வயதின் கோளாறு என தாயும் விட்டுப் பிடித்தாள்.

நாட்களும் நகர்ந்தன.

உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின.

எதிர்பார்க்கவில்லை அந்த தாய்.

ஆம் ரிஷாத் அனைத்து பாடத்திலுமே சித்தி பெறவில்லை.

மரியமால் நம்ப முடியவில்லை.

கண்ணீர் ஆறாக ஓடியது.

ரிஷாதோ ஏதும் நடக்காதது போல இருந்தான்.

மகனைக் கண்காணிக்கச் சென்றாள்.

அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அவளை தாக்கியது.

இதயம் கனமானது.

வார்த்தைகள் அடைப்பட்டு நின்றது.

சிறந்த பாடசாலை தான் கிடைத்தது.

சிறந்த நண்பர்கள் அல்ல அனைவரும் தீய பாவனைகளை பாவிப்பவர்கள்.

இன்று ரிஷாதின் நிலைமையும் அதுதான்.

வீட்டுக்கு வந்த மகனிடம் தாய் பல கேள்விகளைக் கேட்க அவன் தகாத வார்த்தைகளால் அவளது மனதை சுட்டெரித்தான். தாங்க இயலாத மரியம் கண்ணீர் மழையிலே நனைந்தாள்.

தனிமையை உணர்ந்தாள்.

கணவனை இழந்தாள். விதவைக் கோலம் பூண்டாள்.

வேலைக்காரி என்ற பட்டம் பெற்றாள்.

மகனை வளர்த்திட படாத பாடு பட்டாள்.

தீய நட்பின் சதி செய்த விதி இன்று அவள் தனிமையோடு நின்றிருந்தாள்.

ஐந்தாறு நாட்களுக்குப் பின் வீட்டினுள் நுழைந்தான் ரிஷாத்

கதவு சாத்தி இருந்தது.

உள்ளே இருட்டறையாக இருந்தது.
மின்குமிழை ஒளிரவிட்டான்.

தாயின் அறையை எட்டிப் பார்த்தான்.

தாய் எனும் விளக்கு அணைந்து கிடந்தது.

கத்தினான் கதறினான் ஏதும் மாறவில்லை.

மரியமின் மறைவு ரிஷாதை நல்லவனாக மாற்றியது.

அதனை அனுபவித்திட அங்கு அவள் இல்லை.

இருக்கும் போதே அன்பைப் பொழிவோம்.

இழந்தது மீண்டும் உயிர் பெறாது.

முற்றும்.

# கொள்ளை இரகசியப்பூக்கள்!!

நீ
அழகு என்று சொல்கையில்
முளைத்து விடுமெனக்கு
அன்பெனும் கொம்பு

நீ
அழகு தாண்டி எனையாராதிக்கையில்
அங்கெழுவது கர்வமல்ல
பேரன்பு

நீ
மெய்யன்பு கொண்டு
ஆர்ப்பரித்துச்சூழ்கையில்
நான்
பிரளயப்பேரின்பத்துள்
நுழையுமெறும்பு

நீ
காதலுக்கு மேலாடி மேலாடி
கொள்ளை இரகசியப்பூக்கள்
கொய்கையில்
தள்ளாடித் தலைச்சுற்றுமென்
மென்னன்பு

நீ
இத்தனை காலமும்
எங்கிருந்தாயென ஏங்கி
ஏகமும் மோகமாகிப் பனிப்பளிங்கில்
படர்ந்து நடுங்கும் வேளையில்
அத்தனை வெளிப்பாடு
வேண்டாமென இழையுமென்
பேரன்பு

விட்டுவிடாதே என்ற
மனவேட்கையின் வெப்பத்தில்
நானே மரித்து உயிர்க்கிறேன்
பெண்ணென்ற பேதமை
தொலைக்கிறேன்
மூளையுரைப்பதைக்
கேட்பதாயில்லையிவள்

சிற்றூடலில் கட்டுத்தறியறுத்து
சடைத்து வனாந்தரமாகும்
பேரன்பில் தளர்த்தவே
வேண்டாமென்று பதைக்குமென்னெஞ்சம்
அறியாய் நீ

யாதொரு தேவையில்லை
யாதொரு நிர்ப்பந்தமுமில்லை
தானாக வந்தது போலவே
தொடர்ந்து வா
என் வானம் நித்தம் நித்தம்
பூத்து
நம் பூமி வசந்தத்தில்
திளைத்திருப்பதற்கு!!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர் - இலங்கை



# உளி பேசும் மொழி




**நெல்லை க. சோமசுந்தரி**

கவிஞர். எழுத்தாளர் தொல்லியல் ஆர்வலர்
சென்னை, தமிழ்நாடு


**34**



ஆதி அந்தமற்று தீப ஒளியாய் ஒளிரும் அண்ணாமலையாரின் ஆலயத்தில் வருடந்தோறும் ஒவ்வொரு மாதமும் சித்திரைத் தொடங்கி பங்குனி வரை பல விழாக்கள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இவ்விழாக்களில் பங்குனித் திருவிழா, தை விழா, மார்கழி விழா மற்றும் திருக்கார்த்திகை விழாக்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இவற்றுள் கார்த்திகை மாதம் நடக்கும் திருக்கார்த்திகை விழாவானது அனைத்திலும் தனித்துவமானது. இவ்விழாவானது பதிமூன்று நாட்கள் வெகு விமர்ச்சியாக நடைபெறுகிறது. இதில் முதல் மூன்று நாட்கள் துர்க்கை கோவிலிலும், மீதமுள்ள பத்து நாட்கள் அண்ணாமலையாரின் ஆலயத்திலும் கொண்டாடப்படுகிறது. இத்தீப விழாவின் தொடக்கமானது கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அந்நாளில், அண்ணாமலையாரின் ஆலயத்தின் ஐந்து வழிபாட்டுத் தெய்வங்களான அண்ணாமலையார், உண்ணாமுலை அம்மன், விநாயகர், முருகன் மற்றும் சண்டிகேசுவரர் கொடி மரத்தின் அருகில் எழுந்தருளுகின்றனர்.

இந்த பத்து நாட்களும் உற்சவமூர்த்திகளான சந்திரசேகர், விநாயகர், பிச்சாடனார், உண்ணாமுலையம்மன், முருகன், மற்றும் சண்டிகேசுவரர், ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான விமானம் மற்றும் வாகனங்களில் எழுந்தருளுகின்றனர். இதில் ஏழாம் நாள் திருவிழாவானது, உற்சவமூர்த்திகளைத் தேர்களில் எழுந்தருளிச் செய்யப்பட்டு திருவீதி உலா வரச் செய்யப்படுகின்றன. இங்ஙனம் எழுந்தருளும் உற்சவமூர்த்திகள் உலோகங்களால் படைக்கப்பட்டுள்ளது. ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் கற்களைக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. அச்சிற்பங்கள் அனைத்தும் அதே இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையால் அவ்விடத்திலேயே நிலைத்திருக்கும். அதில் முதன்மையான தெய்வத்தினை அவ்வாலயத்தின் மூலவர் என்று அழைப்பது மரபு. அதே வேளையில் அந்த மூலவருக்கு இணையாக அதன் பிரதி பிம்பமாக ஒவ்வொரு ஆலயத்திலும் உற்சவர் தனியாக அமைக்கப்பட்டு திருவிழாக் காலங்களில் ஆலயத்தைச் சுற்றியுள்ள திருவீதிகளில் வெவ்வேறு வகையான கலைநயமிக்க மரத்தினால் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் தேர்களில் வலம் வந்து அனைத்து விதமான மானிடர்களுக்கு மட்டுமின்றி அனைத்து உயிரினங்களுக்கும் காட்சி தந்து அருள்பாலிக்கின்றனர்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற உற்சவ மூர்த்திகளின் சிற்பங்களானது உலோகங்களின் கலவையால் உருவாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட

அர்த்தநாரீஸ்வரர்



சிற்பங்களானது படிமச் சிற்பங்கள் என்ற அழைக்கப்படுகிறது. இவ்வகைச் சிற்பங்கள் பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களால் இந்த படைப்புகளை வார்த்தெடுக்கும் கலையானது பண்டைய காலத்தில் உருவாகியிருப்பினும், பல்லவர் காலத்தில் பெரியதாகத் தொடங்கப்பட்டு, பிற்காலச் சோழர்களால் முன்னெடுக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள பல ஆலயங்களில் உற்சவமூர்த்திகள்

சோமாஸ் கந்தர்



செம்பினாலும், பஞ்சலோகத்தினாலும் (பொன், வெள்ளி, செம்பு, ஈயம் , பித்தளை அல்லது அலுமினியம்) உருவாக்கப்பட்டது. இவ்வகை சிற்பங்களானது செப்புத் திருமேனிகள் என்று அழைக்கப்படுகிறது.

அவ்வழியே அண்ணாமலையாரின் ஆலயத்திலும் பல செப்புத் திருமேனிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அண்ணாமலையாரும், உண்ணாமுலையம்மனும், பால முருகனுடன் குடும்ப சகிதமாக எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர் செப்புத்திருமேனியானது உற்சவமூர்த்திகளில் சிறப்பு வாய்ந்தது. இந்தச் செப்புத் திருமேனியில் அண்ணாமலையார் இடது காலை மடக்கி வலது காலை கீழே தொங்கவிட்டு, இடதுபுறம் அமைந்துள்ள ஒரு கையில் துள்ளி ஓடும் மானினை பிடித்துக் கொண்டும் மற்றொரு கையில் அபய முத்திரையுடனும், வலது புறம் உள்ள ஒரு கையில் மழு ஏந்தியும், மற்றொரு கையானது பக்தர்களுக்கு ஆசி வழங்குவது போன்றும் வடிக்கப்பட்டுள்ளது. மேலும் இரு செவி மடல்களில் வளையங்களும், கழுத்தினில் மாலைகள் அணிந்து மார்போடு ஒட்டியபடி அமைக்கப்பட்டுள்ள பூணூல் போன்ற மாலையும் மிகத் துல்லியமாகத் தெரியும் வகையில் சரியாக வார்க்கப்பட்டுள்ளது.

மேலும் அண்ணாமலையாரின்







மலையில் மகா தீபம்

இரு கால்களிலும் தண்டை அணிவிக்கப்பட்டுள்ளதினை போன்று அமைக்கப்பட்டுள்ளது. அவை மட்டுமின்றி அரைக்கச்சையில் புலித்தோல் அணிந்தபடி அமர்ந்திருக்கும் நிலையானது கலைஞனின் கைவண்ணத்தைப் பறைசாற்றுகிறது. அண்ணாமலையாரின் அருகில் ஒருக்களித்து அமர்ந்த நிலையில் உண்ணாமலையம்மன் காட்சியளிக்கிறார். அம்மனின் இருக் கரங்களிலும் அபயமுத்திரையுடன் அன்பர்களுக்கு அருள்பாலிக்கிறார். மேலும் கழுத்தில் மணிமாலை அணிந்தும் கை மற்றும் கால்களில் வளையங்கள் பூட்டியும் வடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவருக்குமிடையே முருகனது சிலையானது பால வடிவில் மிகச் சிறியதாக மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கும் சிறு குழந்தையைப் போன்று கொண்டாடும் நிலையில் நின்றபடி காட்சி தருகிறார். அந்த மகிழ்ச்சியினை வெளிப்படுத்தும் விதமாக நின்ற நிலையில் பாலமுருகனது இரண்டு கால்களும் சற்று மடங்கியிருப்பதைப் போன்று வார்க்கப்பட்டுள்ளது.

அண்ணாமலையாரின் குடும்பமாக, முழுமையாகக் காட்சி தரும் சோமாஸ்கந்தர் சிலையின் சிறப்புகள் அனைத்தும் பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் அவை வெளிப்படுத்தும் உணர்வுகளை மற்றும் அமர்ந்திருக்கும் நிலையை நம்மால் எளிதில் பார்த்த உடனேயே உணரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. என்பதே அந்த சிற்பங்களை உருவாக்கிய சிற்பிகளின் கலைத்திறனையும், அவர்களுக்கு அக்கலையின் மீது இருந்த ஆர்வமும் மற்றும் நுட்பமானது நமக்கு நன்கு வெளிப்படுகிறது. இது போன்று நுட்பமான மற்றும் சிக்கலான வடிவமைப்புகளை உருவாக்குவதற்கு பண்டைய காலந்தொட்டு ‘உருக்கி வார்த்து வடிவமைத்தல்‘ என்ற முறையானது பின்பற்றப்படுகிறது.

இம்முறையில் . இயற்கையான

மெழுகினைக் கொண்டு தேவையான உருவச் சிலையானது தயார் செய்யப்படுகிறது. இந்த மெழுகானது ஆச்சால் மரத்தினின்று எடுக்கப்பட்ட பிசின் மற்றும் தேனடையிலிருந்து எடுக்கப்படும் மெழுகு போன்ற திரவமும் கலந்து தயாரிக்கப்படுகிறது. இந்த மெழுகினில் உருவாக்கப்பட்ட சிற்பமானது களிமண்ணால் செய்யப்பட்ட படிமத்தினுள் மெழுகு சிலையைப் பொருத்திய பின் அக்களிமண் அமைப்பினை வெப்பப்படுத்தும் போது மெழுகு உருகி சிற்பத்திற்கான அச்சானது கிடைக்கப்பெறுகிறது. இப்பொழுது தேவையான உலோகத்தை உருக்கி அந்த அச்சில் வார்த்ததை எடுத்துக் கை வேலைப்பாட்டுடன் சிற்பமானது மேலும் மெருகூட்டப்படுகிறது. இந்த தொழில்நுட்பமானது ஆயிரம் வருடங்களுக்கும் மேலாக இன்றும் பின்பற்றப்படுவது ஒருபுறம் ஆச்சரியமாய் இருப்பினும் நாம் பார்த்த அண்ணாமலையாரின் ஆலய உற்சவமூர்த்திகள் அனைத்தும் மிகுந்த மெனக்கெடல்களுடன் நுட்பமாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை இதன் மூலம் நாம் அறியலாம்.

இங்ஙனம் கார்த்திகை தீபத்திருவிழாவானது அண்ணாமலையாரின் ஆலயத்தில் ஒன்பது நாட்களும், ஒவ்வொரு உற்சவ மூர்த்திகள் காலையிலும் மாலையிலும் உலா வீதி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். திருக்கார்த்திகை தீபத் திருநாளின் பத்தாம் நாள் அதிகாலையில் அண்ணாமலையார் கருவறை எதிரில் நடைபெறும் நிகழ்ச்சிக்குப் பரணி தீபம் ஏற்றுதல் என்று பெயர். 'ஏகன் அனேகன் அனேகன் ஏகன்' எனும் தத்துவத்தை விளக்கும் வகையிலும், இறைவன் ஒருவனே என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்தும் பொருட்டாகவும், ஐந்து மடக்குகளில் நெய் தீபம் ஏற்றப்படுகிறது. பின் அந்த தீபத்தை எடுத்துச் சென்று கோயில் உள்ள விநாயகர், அம்மன், முருகர் உள்ள அனைத்து சன்னதிகளுக்கும் தீபங்கள் ஏற்றப்படுகின்றன. சந்திர கோல் பரணி நட்சத்திரத்தில் நிற்கும் காலத்தில் ஏற்றப்படுவதால் இது பரணி தீபம் என அழைக்கப்படுகிறது.

திருவண்ணாமலையில் மாலையில் மலை மீது மகா தீபம் ஏற்றப்படும் முன்பு பஞ்ச மூர்த்திகளான அண்ணாமலையார், உண்ணாமுலையம்மன், விநாயகர், முருகன், சண்டிகேஸ்வர் ஆகிய சிற்பங்கள் அலங்கரிக்கப்பட்டு தீபக் காட்சி மண்டபம் எனப்படும் பதினாறு கால் மண்டபத்தின் அருகில் கொடி மரத்தின் எதிரில் எழுந்தருளச் செய்யப்படுகிறது. பின், பஞ்சமூர்த்திகளின் முன்பாக ஏறத்தாழ 2268 அடி உயரம் கொண்ட மலை மீது மகா தீபம் ஏற்றப்படுவதற்கு முன் , ஆண்டுக்கு ஒருமுறை சில நிமிடங்கள் மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரரின் ஆனந்த தாண்டவம் ஆடியபடி மூன்றாம் பிரகாரத்தில் அற்புதமாகக் காட்சி தருகிறார். இந்நிகழ்வு சரியாக ஐந்து மணி ஐம்பது நிமிடங்கள் அளவில் நடைபெறுகிறது. பிறகு மிகச் , சரியாக மாலை ஆறு மணி அளவில் அருணாசல மலையின் உச்சியில் பிரமாண்டமான மகா தீபம் ஏற்றப்பட்டு, உலக மக்களுக்கு எம்பெருமானாகிய சிவன் ஜோதி வடிவில் காட்சி தருகிறார். இது ஒளிவடிவாய் எழுந்து ஈசன் உலகோரைக் காக்கும் தத்துவத்தைத் திருவண்ணாமலை கார்த்திகைத் திருவிழாவானது நமக்குப் பிரதிபலிக்கிறது.

மேலும், அண்ணாமலையார் ஆலயத்தின் சிறப்புகளை அறிய, உளியின் மொழியின் வரவிருக்கும் 2026 ஆங்கிலப்புத்தாண்டு வாழ்த்துக்களுடன், தொடர்ந்து இணைந்திருங்கள்

**உளியின் மொழி தொடரும்**



# வெள்ளம் பதித்த சுவடுகள்...

வெள்ளி மேடையை அழகாக்க
வெண் காகிதத்தில் பதிந்த
வரிகளை நானு மிங்கு
வாசிக்கிறேன் கனத்த மனம்கொண்டு ....

வீசியது டித்வா புயல்
விரண்டு ஓடியது மக்கள்
வீதி யெங்கும் சகதி
வீட்டற்று மக்கள் அகதி ....

விடிய விடிய பெய்த
விடா மழையில் அழிந்த
வசதி படைத்தவனின் மாளிகையும்
வறுமை ஏழையின் குடிசையும் ....

வெள்ளமும் பெருக் கெடுத்தது
வகை தொகையின்றி அழிந்தது
வன விலங்கோ மரமீது
வாழ்க்கை போராட்டம் கண்டது ....

வானம் கோபம் கொண்டது
வான் கதவுகளும் திறந்தது
வற்றிய ஆறுகளும் நிரம்பியது
வயல்களும் முற்றாய் சேதமானது ....

வழிந்தோடிய அருவியும் எழுந்து
வீடு காடெல்லாம் அழித்தது
வீணாய் பணம் செலவழித்து
வாங்கிய பொருளும் தொலைந்தது ....

வசதி நிரந்தரம் அற்றது
வரிசை கட்டி நின்றவர்களது
வயிற்றுப் பசி உணர்த்தியது
வீராப்பும் பெருமையும் ஒழிந்தது ....

வக்கிர புத்திகளும் நீங்கியது
விரோதியையும் நண்ப னாக்கியது
விதி மாற்ற முடியாதென்று
வாழ்க்கை பாடம் உணர்த்தியது ....

**சப்ரான் நஜீர்**



# அன்பின் ஒளி

அன்னை அன்பின் ஒளி
அகவையில் ஆரம்பம்

தந்தை அன்பின் ஒளி
தலை நிமிர்கையில்
ஆரம்பம்

சகோதரர்கள் அன்பின் ஒளி
சமத்துவத்தில் ஆரம்பம்

உறவினர்கள் அன்பின் ஒளி
உதவியில் ஆரம்பம்

அயலவர்கள் அன்பின் ஒளி
அனுசரிப்பில் ஆரம்பம்

நண்பர்கள் அன்பின் ஒளி
நற்பண்புகளில் ஆரம்பம்

காதலர்கள் அன்பின் ஒளி
காதலில் ஆரம்பம்

ஆசான்கள் அன்பின் ஒளி
ஆற்றுப்படுத்தலில் ஆரம்பம்

குழந்தைகள் அன்பின் ஒளி
குறும்புகளில் ஆரம்பம்

சிறுவர்கள் அன்பின் ஒளி
சிநேகங்களில் ஆரம்பம்

முதியோர் அன்பின் ஒளி
முதிர்ச்சியில் ஆரம்பம்

தலைவர்கள் அன்பின் ஒளி
தைரியத்தில் ஆரம்பம்

அகிலம் ஆளும் அன்பை
அனைவர் மனமும் வெல்ல
அருளாளன் துணை வேண்டும்
அடியார்களாய் நலம் புரிவோம்.


## ஹாஸ்மியா தாஹா
(பேனா முனைக் காதலி)
அனுராதபுரம் - கலாவெவ
இலங்கை,


## அவள் அறிவாளா?

அவளிடம் நான்
மன்னிப்பு கேட்பது
தவறுக்காக அல்ல...
என்னைவிட்டு அவள்
விலகாமல் இருப்பதற்காக...
என்பதை அறிவாளா?

## அழுகிறேன்



நான்
அழுதுகொண்டே
இருக்கிறேன்..
விழிசிந்தும் கண்ணீரை
துடைக்க முயலாதீர்கள்
என்
மனத்தீ அணைய வேண்டும்
அழுத்தங்கள் விலக வேண்டும்
அதற்காக அழுகிறேன்

– கருமலைப் பழம் நீ

# மரணமும் கைப்பேசியும்

மின்சாரம் ஓடும் சிறு பெட்டி,
மனங்கள் கட்டிப் பிணைக்கும் வலை,
மொழி மறந்த மௌன மனிதன்,
இதயம் விட்டு திரை நோக்கும் நிழல்.

சொல்லப் போனால் உயிர்க்குச் சொந்தம்,
சொல்ல முடியாது மரணப் பயணம்;
அழைப்பு வந்தால் ஓடுவான் உடனே,
ஆனால் மரண அழைப்பில் மவுனம்.

துயரத்தில் கூட படம் எடுக்கிறான்,
துயில் நேரத்திலும் திரை தடவுகிறான்;
சொர்க்கம் எங்கே? நரகம் எங்கே?
விரல் வழியே வாழ்க்கை போகிறதே!

கடவுள் குரல் கேட்காத காதுகள்,
ரிங்டோனில் மட்டும்
விழித்துக்கொள்கின்றன;
மனிதம் உறங்கும் இரவில் கூட,
மொபைல் மட்டும் விழித்துக்
கொண்டிருக்கிறது.

மரணம் வந்து ல்ஆஃப்ல் செய்துவிட்டால்,
இந்த உலகம் ல்சைலன்ட்ல் ஆகிவிடும்;
அப்போது யாரும் 'ரீசார்ஜ்' செய்ய முடியாது ல்
நித்திய அமைதி தான் கடைசி
ல்நெட்வொர்க்ல்!

அஸ்மியா நிஸாம்
அக்குறணை

# உன்னை ஏன்? நான் விரும்ப வேண்டும்

நீ அருகில் இல்லாதது தானா
நீ அரும்பென உள்ளது தானா
நீ அழகில் அழகானது தானா
நீ அன்பில் மழையானது தானா
உன் அடக்கம் மொழியானது தானா
உன் அறிவு ஒளியானது தானா
என் இடறை பிடிப்பது தானா
என் இல்லற பாய் மடிப்பது தானா
என் உலகை படிப்பது தானா
உன் உலகை நீ மடித்தது தானா
உன் சிறகில் நீ பறக்காதது தானா
உன் சிந்தையில் என்னை
மறக்காதது தானா
எனக்கு இரு உயிர் கொடுத்தது தானா
உன் உயிரை உதிரி எடுத்தது தானா
வீடு காத்தது தானா
விட்டுப் போகும் போது
விழி நீர் துடைத்து தானே
கடைசிக் காட்டில்
என்னை சேத்தது தானா

எதுவென்று தெரியவில்லை தானே
எல்லாம் உன்னை விரும்புது தானே…
மனைவி என்றதனாலே
ஒரு வரியில் முடித்திடலாமா..?

ம.சேரன்
வாலாந்தூர்

# விதி வலியது

“இந்தாங்க உம்மும்மா, வாப்பா கொடுத்துட்டு வர சொன்னாங்க”

‘‘ஆ....ஏன்ட தங்கம், வாங்க வாங்க, வாப்பா தந்தாங்களா? சரி கொடுங்க...ஆமா... நீங்க சாப்பிட்டிங்களா?”

‘‘ம்ம்...நாங்க இப்போ தான் பிரியாணி சாப்பிட்டோம்... சரி நான் போறன் உம்மும்மா... வாப்பா தேடுவாங்க’’என்று சிட்டாய்ப் பறந்த தனது பேத்தி லியாவை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தார் பாத்திமா.

“ஒரு அஞ்சு நிமிஷம் என்னோட உக்காந்து பேசுறதுக்கு இந்தப் புள்ளைக்கு நேரமில்லையே... ஹ்ம்... எல்லாம் அவ உம்மாவ சொல்லனும்... அவளுக்கே என்னைய வந்து பாக்குறதுக்கு மனசு வர மாட்டேங்குது... இதுல புள்ளைய எங்க அனுப்புறது?’’ என பெருமூச்சு விட்டவாறே சாப்பிட அமர்ந்தார். “என்ன இது, சாப்பாட்டுல பழைய வாசம் அடிக்குது, ஒருவேள பிரியாணி பழசாகிட்டா?” என்று தனக்குள்ளே பேசிக் கொண்டு சாப்பாட்டைத் திறந்து பார்த்த பாத்திமாவிற்கு கண்கள் குளமாகின. அங்கே பார்சலில் பிரியாணிக்குப் பதிலாக பழைய சோறு சிரித்துக் கொண்டிருந்தது

கண்ணீரைத் துடைத்தவாறே தண்ணீரை எடுத்து மடமடவென அருந்திக் கொண்டிருக்கும் போது, “மாமி....மாமி...”



என்று ஒரு குரல் எதிரொலிக்கவே, "வாங்க தம்பி, என்ன இவ்வளவு அவசரமா வாறிங்க? என்ன விஷயம்?"

"எல்லாம் வழம தான் மாமி.... உங்க அருமை மகளோட குணம் தெரிஞ்சும் அவட்ட உங்களுக்கு சாப்பாடு கொடுத்து விட சொன்னது என் தப்பு தான். அத நானே எடுத்துட்டு வந்து கொடுத்திருக்கனும்....சே... நானும் அவசர வேலையா வெளிய பொயிட்டு வந்து பாக்குறன் உங்களுக்கு எடுத்து வச்ச சாப்பாடு அப்படியே இருக்கு... அப்பறம் தான் அவ பழைய சோறு கொடுத்து விட்டது தெரிஞ்சது. இந்தாங்க மாமி இதுல பிரியாணி இருக்கு சாப்பிடுங்க"

"இத எதுக்கு மகன் நீங்க எடுத்துட்டு வந்திங்க? எனக்கு பசியுமில்ல"

"அவ மாற மாட்டா மாமி... நீங்க மிச்சம் வைக்காம சாப்பிடுங்க. நான் வரேன்" என்று கிளம்பினான் அவரது மருமகன் சாதிக். மருமகனை எண்ணி பூரிப்பதா, இல்லை மகளை எண்ணி வேதனைப்படுவதா என பெற்ற உள்ளம் புரியாமல் தவித்தது.

பாத்திமா அறுபது வயது நிரம்பிய மூதாட்டி. எப்போதும் சிரித்த முகத்துடன் வலம் வரும் அவருக்கு, கஷ்டம் என்பதே தெரியாமல் கண்ணுக்கு இமையாகப் பாதுகாத்து வந்தார் அவரது கணவன் மஜீத். மஜீதிற்கு பரம்பரை சொத்துக்கள் ஏராளம். என்றாலும் ஆடம்பரம் என்ற ஒன்று இல்லாமல் இறைவனைப் பணிந்து நடப்பதில் அவர் என்றுமே முதலிடம் தான். இதனால் குடும்பத்திலும் செல்வத்திலும் இறைவனது அருள் நிறைந்திருந்தது. மஜீதின் தொழில் நடவடிக்கைகளில் பாத்திமா என்றுமே அவருக்கு பக்க பலமாக இருந்து வந்தார்.

இருவருக்கும் ஆண் - பெண் என அழகிய இரு வாரிசுகள் பிறந்து வளர்ந்தன. பெண் பிள்ளையான ஆராவிற்குத் திருமணம் பேசிய கையோடு மஜீதும் இறைவனடி சேர்ந்தார். தன் வாழ்நாளில் அவர் அதிகம் பேசிய வார்த்தையாக ல்பாத்திமா.... புள்ளைகள்ட விஷயத்துல நீதமா நடந்துக்கோ... அல்லாஹ்வப் பயந்துக்கொல் என்பதே காணப்பட, பாத்திமாவும் அதனையே தனது தாரக மந்திரமாக ஏற்று செயற்படலானார்.

அதுவரை காலமும் மகிழ்ச்சியில் திளைத்திருந்த பாத்திமாவின் குடும்பம் கணவனது மரணத்தின் பின்னர் தலைகீழாய் மாறத் தொடங்கியது. ஒருநாள்...

"உம்மா! உங்க கிட்டக் கொஞ்சம் பேசனும்"

"என்ன ஆரா, வந்ததும் வராததுமா பேசனும்னு சொல்ற? உன் முகம் வேற சரி இல்லையே... என்னாச்சு?"

"உம்மா... நீங்க தம்பிக்கு எங்கட கடக்காணிய எழுதிக் கொடுத்திங்களா?"
''ஆமா.. அதுல உனக்கென்னம்மா பிரச்சினை?"

"என்ன பிரச்சினையா? அது சரி... உங்களுக்கு உங்க புள்ள தான முக்கியம். என்னையப் பத்தி எப்பவாச்சும் யோசிச்சுப் பாத்திருக்கிங்களா? என் புருசன் ஒரு துணிக்கட ஆரம்பிக்கப் போறாருன்னு இடம் தேடிட்டு இருக்கோம். அதனால அந்தக் காணிய கொடுங்கன்னு எத்தன தடவ உங்க கிட்ட கேட்டிருக்கன். சும்மா தர ஏலாட்டி வாடகைக்காச்சும் கொடுங்கன்னு சொன்னன் தான? இப்போ சத்தமே இல்லாம அவன் பேருக்கு எழுதி வச்சிருக்கிங்க... ஆ..."

"நல்லா இருக்கு ஆரா நீ பேசுறது... எல்லாம் தெரிஞ்சும் புரியாத மாதிரி என் கிட்டக் கேக்குற? உன் கல்யாணத்துக்கு உனக்கு சேத்த வச்ச சொத்தெல்லாம் போதாதுன்னு அவனுக்கு சேத்து வச்சதும்

வேணும், இல்லேன்னா கல்யாண மேடைல உக்கார மாட்டன்னு எவ்வளவு திமிரா பேசி அடம்பிடிச்சுக்கு நின்ன? மாப்பிள்ள வீட்டாக்க நம்ம பொண்ண தப்பா பேசிரக் கூடாதேன்னு அவன் பெரிய மனசோட எனக்கு எதுவுமே வேணாம்... தாத்தா சந்தோஷமா இருந்தா அது போதும், மாப்பிள்ள ரொம்ப நல்லவரு, நம்ம வாப்பா பாத்து முடிவாக்குன இடம் தட்டிப் போகக் கூடாதுன்னு எல்லாத்தையும் உனக்கு விட்டுக் கொடுத்துட்டு இப்போ எதுவுமே இல்லாம அங்கேயும் இங்கேயும் அலைஞ்சு திரியிறான். இதெல்லாம் உன் கண்ணுக்கு விளங்குற இல்லையா?"

''நான் என்ன ஊர், உலகத்துல இல்லாத காரியமா செஞ்சிட்டன். ஒரே ஒரு பொம்புளப் புள்ளன்டா எல்லாரும் அவளுக்குத் தான் மொத்த சொத்தையும் எழுதிக் கொடுப்பாங்க... என் ஃப்ரண்ட் சனா எவ்வளவு கஷ்டப்பட்டவ... அவளுக்கே அவங்கட வீட்டாக்க கார் எல்லாம் வாங்கிக் கொடுத்து கல்யாணம் முடிச்சு வச்சாங்க... ஹ்ம்... அவளுக்கே அப்டின்னா... நான் யாரு... கோடீஸ்வரி... எனக்கு செய்றதுல உங்களுக்கு என்ன குறையப் போகுது? நான் சந்தோஷமா இருக்கத் தான வாப்பா இவ்வளவு சொத்தையும் சேத்தாரு"

"யா அல்லாஹ்! இதெல்லாம் கேக்க கூடாதுன்னு தான் அந்த மனுஷன நேரத்தோட எடுத்தியா? நாக்கு நரம்பில்லாததுன்னு எப்படியெல்லாம் பேசுறா இந்தப் பொண்ணு? அம்மாடி ஆரா... புள்ளைகள் சந்தோசமா இருக்கனும்னு தான் பெத்தவங்க சொத்து சேத்து வைக்கிறது... ஆனா எங்களுக்கு நீ மட்டும் புள்ள இல்ல.. அவனும் தான்.. உன்ன விட ரெண்டு பங்கு கூடத் தான் அவனுக்கு கொடுக்கனும்... இங்க எல்லாத்தையும் நீயே வாரியெடுத்துட்ட... இருக்குற மிச்சத்தையாச்சும் அவனுக்கு கொடுக்க விடுமா.... உங்க வாப்பா இருந்திருந்தா நீ பண்ற அநியாயத்துக்கெல்லாம் உன்ன வெளுத்து வாங்கிருப்பாரு"

"இது நல்ல கதையா இருக்கேமா... எனக்கு எப்படி நம்ம வீட்ல சொத்து தந்திங்களோ அதே மாதிரி தம்பிக்கும் அவன் கல்யாணம் முடிக்கப் போற வீட்ல கொடுப்பாங்க தான. அத வாங்கிட்டு அவன் சந்தோசமா இருக்கலாமே... அத விட்டுட்டு நான் மஹருக்குத் தான் முடிப்பன், பொண்ணு மட்டும் கொடுத்தாப் போதும்னு வீர வசனம் பேசி கல்யாணம் முடிச்சவன் இப்போ அவனே உழைச்சு அவன் பொண்டாட்டியக் காப்பாத்த வேண்டியது தானே? எதுக்கு உங்க கிட்ட கெஞ்சனும்?"

''அவன் ஒன்னும் உன் புருசன் மாதிரி பொண்டாட்டி பேச்சுக்கு தலை குனிஞ்சு போற ஆள் இல்ல ஆரா... அல்லாஹ்ட பாதைல எது சரியோ அத சரியா செய்றவன்... அவனுக்கும் சீதனம் வாங்கத் தெரியாம இல்ல. தான் உழைச்ச காசுல தான் தன்னோட குடும்ப வண்டி ஓடனும்னு வைராக்கியத்துல தான் இவ்வளவு கஷ்டப்பட்டுட்டு இருக்கான்."

"அந்த வைராக்கியம் இருக்குறவன் எதுக்காக உம்மா உங்க கிட்ட பிச்சை எடுக்கனும்? அவனே உழைச்சு குடும்பத்தப் பாத்துக்க வேண்டியது தானே?"

"அவன் ஒன்னும் உன்ன மாதிரி இருக்குறத புடுங்கித் தின்னு ஏப்பம் விடுறவன் கிடையாது... இந்த கடைய அவன் கேக்கவும் இல்ல... அத மீறி அவன் கேட்டாலும் இது பிச்சை இல்ல, அவனோட உரிமை... நீ கேக்குறத விட தாராளமாவே கேக்குற உரிமை அவனுக்கு இருக்கு"

‘‘என்னமோ அவன மட்டுமே பெத்தெடுத்த மாதிரி அவனுக்கே எல்லாத்துலையும் சப்போர்ட் பண்ணிட்டு இருக்கிங்க? அப்போ அவனப் படிக்க வச்ச மாதிரி என்னையும் படிக்க வச்சிருக்கலாமே?’’

“உன்ன யாரு படிக்க வேண்டாம்னு சொன்னாங்க... படிப்பு வரலன்னு நீயாத் தான நின்ன! இப்போ அதுலையும் எங்கள குறை சொல்ல வரியா?’’ என அந்த நேரத்திலும் தன் மகளின் வெகுளித் தனத்தை நினைத்து சிரித்தார் பாத்திமா.

“சரி... சரி... அத விடுங்க... இப்போ அவனுக்கு அந்தக் காணியக் கொடுத்தா, எனக்கு நீங்க இருக்குற இந்த வீட்ட எழுதித் தாங்க. எனக்கும் பொம்புளப் புள்ள இருக்கு... அதுக்கும் கல்யாணம் பண்ணா வீடு கொடுக்கனுமே!’’

“உன் பிள்ளைக்கு நீ தான் வீடு கொடுக்கனும்... உனக்கும் கொடுத்து உன் பிள்ளைக்கும் கொடுக்குற அளவுக்கு எங்களுக்கு வசதி இல்லமா... உனக்குத் தந்த சொத்தெல்லாம் நீ ஒழுங்கா சேத்து வச்சிருந்தா காலாகாலத்துக்கும் உக்காந்து திங்கிற அளவுக்கு உங்க கிட்ட வசதி இருந்திருக்கும்... உன்னோட பேராசையும் ஆடம்பரமும் அதையும் அழிச்சிட்டு... என் பிள்ளை அவ்வளவு கஷ்டப்பட்டு படிச்சு ஃபெஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணியும் இந்த பாழாப் போன அரசாங்காத்தால மூனு வருசமா வேலை இல்லாம அலைஞ்சு திரிஞ்சு இப்போ கூலி வேலை செஞ்சு தடுமாறுரான்... நீ அவன உன் தம்பியாப் பாக்காட்டியும் ஒரு மனுசனா மதிச்சு நடந்திருந்தா இன்னைக்கு அவன் இவ்வளவு கஷ்டப்படத் தேவைலயே’’

“எல்லாத்துக்கும் நான் தான் காரணம் மாதிரி பேசாதிங்க உம்மா... அவன்ட தலைல அப்படி எழுதிருக்கு. அதுக்கு நான் என்ன பண்ண முடியும்? ஆனா ஒன்னுமா

# கனவின் யாசகி!

கனவின் நிழலில் அவதியற்ற தூக்கம்
புலங்கள் படர கண் அயர்த்தேன்
மனதிற்கு பிடித்த புதுமை உலகம்
அதில் பல சுவையான மனிதர்கள்

அவர்களுக்கு பால் போன்ற முகம்
தீது துறந்த சீரான உள்ளம்
பிறர் மீது நெகிழ்ச்சி உள்ளவர்கள்
யாவரும் சமம் என்ற உலகியல்

களங்கம் அற்ற உயர்ந்த செயல்கள்
நிந்தை இல்லா வாய்ச் சொற்கள்
மனிதம் வீழாது காத்திடும் குணங்கள்
தொடரும் சிறந்த சமூக ஒழுக்கங்கள்

மனம் துவண்டாலும் சிக்கல் இல்லை
இங்கே ஆறுதலுக்கு பஞ்சம் இல்லை
வாழ்வில் வீழ்ந்தாலும் கவலை இல்லை
தூக்கி விட கைகள் உண்டு

வழிக்காட்ட பல சுவடுகள் இருந்தும்
முயற்ச்சிக்கு ஓய்வு கிடைத்ததே இல்லை
வெற்றிகளும் ஏராளம் சாதனைகளே அதிகம்
தோற்கை இருந்தும் தோற்றவர்கள் இல்லை

அச்சம் அற்ற வாழ்நாள் பயணம்
அமைதி தழுவிய அற்புத பூமி
தவிக்கும் உறவிற்கு துளிர்த்த வரம்
கண்ட கனவிற்கு யாசகி நானே

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம் இலங்கை.

அவனுக்கு கடையக் கொடுத்ததுக்கு எனக்கு இந்த வீடு வேணும்... இல்லேன்னா உங்களுக்கும் எனக்கும் இனி எந்த தொடர்பும் இல்ல" என்று கூறியவாறு வீட்டை விட்டு வெளியேறினாள் ஆரா.

அதன்பின் அவளும் அங்கு வருவதில்லை. கணவனையும் குழந்தையையும் கூட அனுப்ப மறுத்தாள். ஆனால் ஒவ்வொரு நாளும் அவளது கணவனும் குழந்தையும் பாத்திமாவை சந்தித்துக் கொண்டே இருந்தனர். "என்னங்க, அந்த பொம்புளையோட எனக்கு எந்தத் தொடர்புமில்லன்னு சொல்லியும் நீங்க எதுக்காக லியாவையும் கூட்டிட்டு தினமும் அங்க போயிட்டு வர்றிங்க? அப்படின்னா என் பேச்சுக்கு எந்த மதிப்பும் கொடுக்கக் கூடாதுன்னு தான அர்த்தம்?"

"இதோ பாரு ஆரா... பிரச்சினை உனக்கும் உங்க உம்மாவுக்கும் தான்... இடையில என்னையோ என் பிள்ளையையோ இந்த பாவத்துல கோர்த்து விட்ற வேலை வச்சுக்காத... நீ சொல்ற எல்லாத்துக்கும் நான் தலையாட்டுனதால தான் நீ இப்போ இந்தளவுக்கு வந்து நிக்குற? அப்பவே இரண்டு அறை விட்டிருந்தா இந்நேரம் உங்க உம்மாவாச்சும் நிம்மதியா இருந்திருப்பாங்க.... எதுக்காகடி இப்படி பணம், பணம்னு அலையுற? கல்யாணத்தன்னைக்கும் இப்படித் தான் அவ்வளவு சொத்தையும் வாரி சுருட்டிக்கு வந்து நின்ன... உன்னால எல்லாரும் என்னையத் தப்பா பேசுனதக் கேட்டும் வாய மூடிட்டு இருந்ததுக்கு நல்ல மரியாதை செஞ்சிட்டமா.... இதோட உன் விளையாட்டலாம் நிறுத்திக்கோ.... இனி எதாச்சும் தப்பு பண்ணா நான் மனுசனாவே இருக்க மாட்டன்...." என்று அவளை எச்சரித்தான் சாதிக்.

அதுவரை காலமும் தன்னை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேசாத தன் கணவனுடைய கோபத்தை முதன்முறையாகப் பார்த்த ஆரா அதன்பின் அவனிடம் எந்த வாதமும் செய்யவில்லை. ல்மாமி, ஆரா அப்படி நடந்ததுக்காக உங்க கிட்ட நான் மன்னிப்புக் கேட்டுக்கிறன்... அவ ஏன் தான் இப்படி இருக்காளோ எனக்கென்டா விளங்குதில்லல்

"இதுக்காக நீங்க ஏன் மகன் மன்னிப்பு கேட்டுட்டு இருக்கிங்க? எனக்கு இதெல்லாம் பழகிப் போன ஒரு விஷயம்... கல்யாணத்தன்னைக்கு ஆரம்பிச்ச அவளோட இந்தப் பேராசைப் புத்தி தினம் தினம் கூடிட்டுப் போகுதே தவிர இன்னும் குறைஞ்சபாடில்லையே... இதெல்லாம் ஒருநாளைக்கு மாறும் மகன்...நம்புவோம்... இதுக்காக நீங்க அவளோட சண்டை போடாதிங்க மகன்"

"என்னமோ மாமி... உங்களுக்கு இப்படி ஒரு புள்ளையான்னு யோசிக்கவே சகிக்கல... நான் வரேன்" என்று கவலை தேய்ந்த முகத்துடன் அங்கிருந்து வெளியேறினான் சாதிக். "யா அல்லாஹ்! என் புள்ளைட இந்த பேராசைக் குணத்த நீ தான் திருத்திக் கொடுக்கனும். அவ என்னோட சந்தோசமா இருக்காட்டியும் பரவால்ல... அவளுக்குன்னு ஒரு பொம்புளப் புள்ள இருக்கு... அதுவும் அவள மாதிரியே வளந்து பெத்த தாயைக் கஷ்டப்படுத்தக் கூடாது நாயனே! நீ தான் எல்லாத்தையும் மாத்திக் கொடுக்கனும்... நான் உன்னைய மட்டும் தான் முழுசா நம்பியிருக்கன்" என பாத்திமா இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருக்க, இங்கு ஆராவோ, "தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் இருக்கிறது" என்று லியாவிற்கு பாடம் நடாத்திக் கொண்டிருந்தாள்.

**சதீகா ரஸ்லி**
**புத்தளம்**

## ஒளித்து வைக்கிறது குளம்

வானக் கூரையின் கீழ்
வழிந்திட்ட நீர்ப்பரப்பில்
எழுந்திடும் புதருக்குள்
எப்போதும் காணக் கிடைக்கிறது
பறவையின் கூடு.
இடிந்த சுவரோடும்
உடைந்த படிகளோடும்
வழுக்கும் பாசிகளோடும்
ஊருக்கு ஒதுக்குப்புறமாய்
வீற்றிருக்கும் குளத்தில்
எப்போதாவது தென்படும் நீர்.
இருக்கும் வரை
எட்டிப் பார்க்காத
மதிப்பும் மரியாதையும்
குளத்தில் மூழ்கி
பிண்டம் கரைத்திட
பெருகிவரும் கண்ணீரென.
காணக் கிடைக்கும் மீனையும்
கல்லெறிந்தே பிடித்து
காயும் பாறைக்குள்
வேக வைத்த கூட்டத்திலும்
பொரிகடலை வீசும்
கரங்களும் உள்ளன.
விதிவசமோ சதி வசமோ
ஏந்திக் கொள்கிறது குளம்
எப்போதாவது தற்கொலையை.
நிலவைத் தாலாட்டி
வெயிலை உறங்க வைத்து
வந்துவிழும் கூழாங்கல்லையும்
ஒளித்து வைக்கிறது குளம்.
கடக்கும்போது
கவனித்துக் கொள்ளுங்கள்
கால் நனைக்கையில்
நெஞ்சில் நிறுத்துங்கள்
எல்லோருக்குமான சமத்துவத்தை
அலையடிக்கும் குளம்
ஏற்று நிற்பதை.

இளையவன் சிவா



# யார் ஏழை?

ஒரு பணக்கார அப்பா, அவர் குழந்தைகளை கிராமத்தை சுற்றி காட்ட அழைத்துச் சென்றார். இரண்டு நாள் ஒரு குடிசையில் ஏழை விவசாயிகள் கூட இருந்தாங்க. திரும்ப வரும் போது, அப்பா கேட்டார்,

ஏழை எப்படி இருக்காங்கன்னு பார்த்தியா?... இப்ப என்ன சொல்றே? மகன் சொன்னான் ஆமா..அப்பா..என் கிட்ட ஒரு நாய் குட்டி தான் இருக்கு. ஆனால் அவங்க கிட்ட நாலு இருக்கு.

நம்ம வீட்ல ஸ்விம்மிங் பூல், கார்டன்ல நடுவிலே இருக்கு. ஆனால் அவங்க வீட்டு பக்கத்துல அழகான ஆறு ஓடுது. நாம கலர் கலரா லைட் போட்டு, படங்கள் மாட்டி நம்ம வீட்டு அழகு படுத்தறோம். ஆனா அவங்க வீட்டுல் ரெயின்போ அழகு படுத்துது... நம்ம சுவரோட நம்ம வீட்டு எல்லை முடிஞ்சுடுது. ஆனால் அவங்களுக்கு கண்ணுக்கு எட்டுன் தூரம் வரை அவங்க எல்லை.

நாம காசு குடுத்து அரிசி வாங்குறோம். ஆனா இவங்க நம்ம கிட்ட அதை விக்கறாங்க. நம்மை பாதுக்காக்குறதுக்கு நம்மை சுற்றி சுவர் மட்டும் தான் இருக்கு... ஆனால் இவங்க பாதுகாப்புக்கு நண்பர்கள் இருக்காங்க.. அப்பா!..நாம எவ்வளவு ஏழைனு புரிய வைத்ததற்கு நன்றி அப்பானு சொன்னான். அவங்க அப்பா வாயடைச்சே போயிட்டார். அவருக்கும் இப்ப நிறைய விஷயங்கள் புரிஞ்சது.



# உழவர் திருநாள்

பாவலர் கருமலைத்தமிழாழன்

உழைக்கின்ற உழவரினை மதிக்கும் நன்னாள்
உழைக்கின்ற உழவரினை மட்டு மன்றி
உழைக்கின்ற உழவர்க்குத் தோளாய் நாளும்
உழைக்கின்ற மாடுகளை மதிக்கும் நன்னாள் !
தழைக்கின்ற வாழ்விற்கு வேராய் நின்று
தம்முழைப்பை நல்குகின்ற உழவ ரோடு
மழைபோன்று பிறருக்கே உதவு கின்ற
மாடுகளை வணங்குகின்ற நன்னாள் பொங்கல் !

கலப்பையினைத் தோள்தூக்கி விடியற் காலை
கழநியிலே உழுதுபயிர் விளைய வைத்து
நலமாக வளரநாளும் நீரைப் பாய்ச்சி
நன்றாகக் களைபிடிங்கி எருவு மிட்டு
நிலவுவரும் இரவினிலும் பகலின் போதும்
நிலைத்தகண்ணால் வரப்பிருந்து பாது காத்து
களத்துமேட்டில் மூட்டைகளாய் நெல்கு விக்கும்
கறுத்தமேனி உழவரினை போற்றும் நன்னாள் !

சோற்றினிலே நாம்கையை வைப்ப தற்குச்
சொல்லொண்ணா துயரினொடும் பசியி னோடும்
சேற்றினிலே கால்வைக்கும் உழவர் வாழ்வில்
செழிப்புவந்து பொழிவதற்கு வாழ்த்தும் நன்னாள்
ஏற்றங்கள் நமக்களிக்கும் உழவர் வாழ்வில்
ஏற்றங்கள் குவிவதற்கு வாழ்த்தும் நன்னாள்
போற்றிடுவோம் போற்றிடுவோம் நன்றி சொல்லிப்
போற்றிடுவோம் உழவரினைப் போற்று வோமே !

# சிறுவர் சங்கமம்

## மனித மனத்தின் ஆசை

இந்த உலகத்தையே ஆளுகின்ற அதிகாரம் என் ஒருவனுக்கு மட்டுமே கிடைக்கவேண்டும் என்று பேராசை கொண்டான் ஒரு மன்னன். தன் குருவிடம் சென்று அதற்கு வழியும் கூறுமாறு கேட்டான். குருஜி, மன்னனுக்கு புத்தி புகட்ட விரும்பினார். அவர் அரசனிடம், சொல்கிறேன். அதற்கு முன்பு எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டும் என்றார். அரசன் ஆவலுடன், சொல்லுங்கள்! சொல்லுங்கள்! என்றான். ஒன்றுமில்லை, இந்த செப்புக்குடுவையை உன்னால் முடிந்ததைக் கொண்டு நிரப்பித் தருவாயாக! என்றார்.

அட! இதென்ன பெரிய விஷயம் என்று எண்ணியபடியே, பணியாளரை அழைத்தான். அவரிடம், பொற்காசுகள் நிறைந்த பட்டுத்துணி மூட்டை ஒன்றைத் தந்து அந்தக் குடுவையை நிரப்பச் சொன்னான். அவரும் பொற்காசுகளை அந்தக் குடுவையில் கொட்டினர். குடுவை நிறையவேயில்லை! அது மிகவும் சிறியதுதான். போடப்போட பாதிக்குமேல் காலியாகவே இருந்தது. இன்னும் நிறையக் காசுகள் கொட்டப்பட்டன. அதுவோ நிறையாமலே இருந்தது.

குருஜி, என்ன அரசரே, இந்த சின்னக் குடுவையை நிறைக்க முடியவில்லையா? என்று கேலியாகக் கேட்டார். மன்னனுக்கு அவமானமாகிவிட்டது. கஜானாவிலிருக்கும் பொற்காசுகள், மற்றும் விலையுயர்ந்த மணிகள் எல்லாவற்றையும் கொண்டுவரச் சொன்னான். அனைத்தையும் போட்டாகிவிட்டது. அப்போதும் அந்த மாயப்பாத்திரம் நிறையவே இல்லை. கஜானாவும் காலியாகிவிட்டது. மன்னன் மனம் கலங்கினான். உடலும் உள்ளமும் ஓய்ந்து போனது.

ஐயா, இது என்ன மாயம்? என்ன பாத்திரம் இது? என் மொத்த கருவூலமும் காலியாகி விட்டதே! பாத்திரம் மட்டும் நிறையவே இல்லையே? என்று கலங்கிப்போய்க் கேட்டான். அரசே, இது மனித மனத்தின் ஆசை என்ற பொருளினால் செய்யப்பட்ட குடுவை! இதை நிரப்பவே முடியாது! ஆசைக்கு ஏது அளவு? என்றார். மன்னனுக்குப் புரிந்தது. அவன் குருவை வணங்கினான். மனம் தெளிவு பெற்றது.

# அறிவியல் அறிவோம்

ஆ.... உ..... னு கத்திக் கொண்டிருந்த வகுப்பு மாணவர்கள் ஆசிரியர் வரும் சத்தம் கேட்டதும் இன்னைக்கு என்ன சொல்ல போகிறார்கள் என்று கேட்க ஆர்வமானர்கள்.

வைகுண்டம் என்ற ஊரில் வைஷாலி பப்ளிக் ஸ்கூல் ஒன்று இருந்தது. அதில் தர்ஷன் என்ற மாணவன் ஐந்தாம் வகுப்பு படித்து வந்தான். ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கே அறிவியல் ஆசிரியர் என்றாலும் அவர் வகுப்பு என்றாலும் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

அன்றைய வகுப்புக்கு அறிவியல் ஆசிரியர் வரக் கொஞ்சம் தாமதம் ஆகிவிட்டது. அதற்குள் தர்ஷன் இன்று அறிவியல் ஆசிரியர் என்ன சொல்லப் போகிறார் என்று கனவு காண ஆரம்பித்து விட்டான். நேற்று எழுதிய தேர்வுத் தாள்களைத் திருத்தி கொண்டு வருவாரா, அல்லது நன்கு படிக்கும் மாணவனுக்குப் பரிசு தருவாரா அல்லது நமது வகுப்பு மாணவர்கள் அறிவியல் மேல் காட்டும் ஆர்வத்தைப் பாராட்டி பரிசு ஏதும் தரப் போகிறாரா, இல்லையென்றால் அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு விட்டதா, இல்லையென்றால் இன்று அவருக்குப் பதில் வேறு ஆசிரியர் வரப் போகிறாரா, இல்லை வேறு பள்ளிக்குச் சென்று விட்டாரா? என யோசித்து கொண்டே இருந்தான்.

அவன் இப்படி நினைக்க ஒரு காரணம் உள்ளது ஏனென்றால் அவன் அறிவியல் ஆசிரியர் ஒரு போதும் வகுப்புக்கு தாமதமாக வந்தது கிடையாது. அதனால் அவன் இவ்வளவு யோசிக்கிறான்.

சிறிது நேரம் கழித்து அவன் யோசனையைக் கலைக்கும் வண்ணம் அனைத்து மாணவர்களும் எழுந்து நின்று 'காலை வணக்கம் ஐயா' என்றதும் தான் பார்த்தான் வந்து இருப்பது அவன் அறிவியல் ஆசிரியர் தான்.

'ஐயா, இன்று ஏன் வகுப்புக்கு வரத் தாமதமாகி விட்டது?' என்று மாணவர்களில் ஒருவன் கேள்வி எழுப்பினான்.

அதற்கு அவர் சிறு புன்னகையுடன் 'நான் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி ஒன்று கொண்டு வந்து இருக்கிறேன். அதனால் தான் வகுப்புக்கு வரத் தாமதம் ஆகி விட்டது . அது என்ன செய்தி தெரியுமா?'

'சொல்லுங்க சார், நாங்க அதைக் கேட்க ஆர்வமாக உள்ளோம்'

என்றனர்

' நம் பள்ளியில் இருந்து ஏழு கிலோ மீட்டர் தொலைவில் ஒரு அறிவியல் கூடம் ஒன்று உள்ளது. அதில் நாளை அறிவியல் கண்காட்சி நடக்கிறது. அதற்குத்தான் நாங்கள் இங்கிருந்து உங்களை அழைத்துச் செல்லப் போகிறோம். அனைவரும் கண்டிப்பாக வர வேண்டும்' என்று சொன்னதும் மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் 'ஓ' வென்று கத்தினர்.

அடுத்த காலை அனைவரும் மிகவும் சந்தோசமாக கிளம்பினர். எல்லோரையும் விடத் தர்ஷன் மிகவும் ஆர்வமாக இருந்தான். அப்போது வகுப்பு ஆசிரியரும், அறிவியல் ஆசிரியரும் அனைத்து மாணவர்களையும் பேருந்தில் ஏற்றினர். பள்ளியில் இருந்து பேருந்து புறப்படத் தொடங்கியது. பேருந்து அறிவியல் கண்காட்சி நடந்து கொண்டிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது.

தர்ஷனுக்கு தலைகால் புரியவில்லை.

இன்று புதிதாக ஏதோ ஒன்றைக் கற்றுக்கொள்ளப் போகிறோம் என்ற ஆர்வம் அவனை தொற்றிக்கொண்டது. அவன் ஒவ்வொரு இடமாகச் சென்று பார்த்தான். அதில் ஒரு இடத்தில் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்து அதன் கீழே தண்ணீரை ஊற்றினார்கள். பின்பு அதன் மேலே ஒரு டம்ளரை கவிழ்த்து வைத்ததும் கீழே ஊற்றி இருந்த தண்ணீர் அனைத்தும் அந்த டம்ளருக்குள் சென்று விட்டது. அதைப்பார்த்து வியந்து நின்றான் தர்ஷன்.

அடுத்ததாக பூமியைச் சுற்றி இருக்கும் காந்தபுலத்தைப் பற்றி விவரமாக எடுத்துக்கூறினார்கள். அதன் பிறகு தண்ணீர் உற்பத்தி, உணவு உற்பத்தி மற்றும் விதவிதமான விலங்குகள் மற்றும் பூச்சிகள் என்று பலவற்றைத் தெரிந்து கொண்டார்கள். இதில் இருந்து அவர்களுக்கு ஒன்று புரிந்தது அறிவியல் என்பது எல்லையற்றது. அது ஒரு கடல் போன்றது என்று தெரிந்து கொண்டார்கள். மற்ற அனைத்து இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு மிகவும் சந்தோசமாகக் கிளம்பினார்கள்.

**செ. ப. கமல் சங்கர்**

செங்கல்பட்டு மாவட்டம்



# புத்தாண்டேநீ வாவா

நேற்றுடன் பகைமை எல்லாம்
நிலையற ஒழிந்து போக
காற்றென வறுமை எல்லாம்
கடந்துநம் வாழ்வில் ஓட
ஊற்றென நேசம் ஓங்கி
உலகெலாம் அன்பாய்த் தேங்கி
ஈற்றிலா மகிழ்ச்சி பொங்க
இணையிலா ஆண்டே வாவா

.

எள்ளிய நாவெல் லாமும்
இதழ்களால் போற்றி வாழ்வில்
ஒள்ளொளி அறிவாய்ப் பூக்க
ஒப்பிலா திறமை ஆக்கப்
பள்ளியில் மழலைக் கூட்டம்
படிக்கவே நிரம்பி நாளும்
அள்ளியே தமிழ்வ ளர்க்க
அகந்தனில் ஆண்டே வாவா

.

முத்திடுங் கடலைப் போல
முழுநிலா ஒளியைப் போல
வித்திடும் சிந்தை யாலே
விண்வரை வளர்ச்சி பொங்கி
எத்தனை இடர்வந் தாலும்
இதயமே பலமும் பெற்றிங்(கு)
அத்தனை இன்ன லும்போய்
ஆண்டேநீ வாவா வாவா

தமிழ்நெஞ்சம் அமின்

குழந்தைப் பாடல்

# சத்து நிறைந்த தீனி

பளபளக்கும் உறைக்குள்ளே
வட்ட வட்ட மிட்டாய்
வண்ண வண்ண மிட்டாய்
எந்த வண்ணம் யாருக்கு

ஆரஞ்சு வண்ணம் அண்ணனுக்கு
சிவப்பு நிறம் சின்னதம்பிக்கு
பச்சை வண்ணம் பாப்பாவுக்கு
மஞ்சள் வண்ணம் எனக்கு

ஆசையோடு சுவைக்கத் தான்
கையில் எடுத்துக் கொள்கையில்
கவனமாக நினைவு வந்ததே
வண்ணங் கொண்ட மிட்டாய்கள்

நல்லதல்ல நஞ்சென்று வகுப்பறையில்
ஆசான் எடுத்துச் சொன்னது
அம்மா செய்த எள்ளுருண்டை
கம்பு லட்டு கமகமக்க

ஓடிச்சென்றோம் கூடித் தின்றோம்
பாடிச் சொன்னோம் அம்மாவுக்கு நன்றி
முத்தமிட்டு அம்மா சொன்னார்
இதுவே சத்து நிறைந்த தீனி!

பி. ஹேமா
முசிறி

# யார் ஏழை?

ஒரு பணக்கார அப்பா, அவர் குழந்தைகளை கிராமத்தை சுற்றி காட்ட அழைத்துச் சென்றார். இரண்டு நாள் ஒரு குடிசையில் ஏழை விவசாயிகள் கூட இருந்தாங்க. திரும்ப வரும் போது, அப்பா கேட்டார்,

ஏழை எப்படி இருக்காங்கன்னு பார்த்தியா?... இப்ப என்ன சொல்றே? மகன் சொன்னான் ஆமா..அப்பா..என் கிட்ட ஒரு நாய் குட்டி தான் இருக்கு. ஆனால் அவங்க கிட்ட நாலு இருக்கு.

நம்ம வீட்ல ஸ்விம்மிங் பூல், கார்டன்ல நடுவிலே இருக்கு. ஆனால் அவங்க வீட்டு பக்கத்துல அழகான ஆறு ஓடுது. நாம கலர் கலரா லைட் போட்டு, படங்கள் மாட்டி நம்ம வீட்டு அழகு படுத்தறோம். ஆனா அவங்க வீட்டுல் ரெயின்போ அழகு படுத்துது... நம்ம சுவரோட நம்ம வீட்டு எல்லை முடிஞ்சுடுது. ஆனால் அவங்களுக்கு கண்ணுக்கு எட்டுன் தூரம் வரை அவங்க எல்லை.

நாம காசு குடுத்து அரிசி வாங்குறோம். ஆனா இவங்க நம்ம கிட்ட அதை விக்கறாங்க. நம்மை பாதுக்காக்குறதுக்கு நம்மை சுற்றி சுவர் மட்டும் தான் இருக்கு... ஆனால் இவங்க பாதுகாப்புக்கு நண்பர்கள் இருக்காங்க.. அப்பா!..நாம எவ்வளவு ஏழைனு புரிய வைத்ததற்கு நன்றி அப்பானு சொன்னான். அவங்க அப்பா வாயடைச்சே போயிட்டார். அவருக்கும் இப்ப நிறைய விஷயங்கள் புரிஞ்சது.

# இடம் கொடுத்து இறந்த சீலைப்பேன்

ஒரு ராஜா, அவர் பஞ்சணையில் மந்த விசர்ப்பணி என்னும் ஒரு சீலைப்பேன் நெடுநாளாக வாசம் செய்து கொண்டிருந்தது. ஒரு நாள் எப்படியோ ஒரு மூட்டுப்பூச்சி வந்து சேர்ந்தது. சீலைப்பேனுக்கு திக் கென்றது. நீ எங்கே வந்தாய்? போய்விடு என்றது சீலைப்பேன். ஏன்? ராஜாவின் பஞ்சணை உனக்கு மட்டும் தான் சொந்தமா? என்று திருப்பிக் கேட்டது மூட்டுப்பூச்சி. மகாராஜாவே மக்களுக்குச் சொந்தம். அவர் பஞ்சணை இதுக்கு மட்டும் சொந்தமா என்ன?

நீ பொல்லாதவன், முட்களைப் போன்ற பற்களினால் தூங்குவதற்கு முன்பே துடுக்காய்க் கடிப்பவன். சமயம் தெரியாதவனாதலால் ராஜாவின் படுக்கையில் இருக்கத்தக்கவனல்ல, இவ்விடம் விட்டுப் போய்விடு என்று பரபரத்தது சீலைப்பேன். ஆனால், கெட்டிக்கார மூட்டுப்பூச்சி சட்டென்று அதன் காலைப் பற்றிக்கொண்டு, நான் அப்படிச் செய்யவில்லை.

நீ சொன்னபடியே கேட்பேன் என்று கெஞ்சியது. இராஜரத்தம் கிடைப்பது லேசா? எந்த ஜென்மத்தில் நான் செய்த புண்ணியமோ, எனக்கு இப்போது இந்த வாய்ப்பு கிட்டியுள்ளது. கெஞ்சுவதற்குத் தயங்கினால் அரசனது ரத்தம் தன் வயிற்றுக்கு உணவாகுமா? காலைப் பிடித்துவிட்டதால் கண்டிப்பாகப் பேச முடியவில்லை சீலைப்பேனால்.

சரி! நீ வெடுக்கென்று கடிக்கக் கூடாது. கடிக்க மாட்டேன். நித்திரை செய்யும்போதுதான் மெத்தென்று வலிதெரியாமால் மெல்லக் கடிக்க வேண்டும். அப்படியே செய்கிறேன். கொஞ்சமாகத்தான் ரத்தம் குடிக்க வேண்டும். கொஞ்சமே போதும். சரி அப்படியானால் இரு என்றது சீலைப்பேன்.

அப்போது அரசர் களைப்போடு வந்து பஞ்சணையில் அமர்ந்தார். இரவுப்பொழுது ஆதலால் உறங்குவதற்கு பத்து நிமிடம் ஆகி இருக்காது. மூட்டுப்பூச்சி நறுக்கென்று கடிக்க ராஜா திடுக்கென்று எழுந்துகொண்டார். சேவகர்களை அழைத்து ஏதோ கடித்தது பார் என்றார். சேவகர்கள் போர்வை உள்பட அனைத்தையும் கூர்மையாகச் சோதித்தார்கள். மூட்டுப்பூச்சி கட்டிலின் இடுக்கிலே ஓடி புகுந்து கொண்டது.

ஆனால் சீலைப்பேன் சிக்கிக்கொண்டது. போர்வையோடு ஒட்டியிருந்ததால் சேவகரின் பார்வையில் பட்டுவிட்டது. அடுத்த கணம், சீலைப்பேன் நசுக்கப்பட்டு இறந்தது. அந்தச் சீலைப்பேன், மூட்டுப்பூச்சிக்கு அடைக்கலம் கொடுத்தது அதற்கே ஆபத்தாய் முடிந்தது.





பைரூஸ் அம்ஹர்
தரம் :02
அ/அல் மனார்
மு.வி
முஸ்லிம்
ஹல்மில்லாவ

# எலிகளின் கதை

## ஜீ.மைத்ரேயி

வந்தவாசி

ம்ம்ம்.... என அழுதது குட்டி எலி. அதைப் பார்த்த அம்மா எலி 'ஏன் குழந்தாய் அழுகிறாய்? பார்ப்பதற்கு நல்லாவே இல்லை' அழுது கொண்டே வந்த குட்டி எலியை பார்த்து அம்மா எலி கேட்டது.

'ஒரு பூச்சி,உணவைக் கூடப் பிடித்து சாப்பிட முடியவில்லை' என்றது குட்டி எலி.

'இதனால் உன்னை யாராவது அடித்தார்களா?' என்று அம்மா எலி கேட்டது. 'இல்லை' என தலையை ஆட்டியது குட்டி எலி.

'அப்புறம் எதுக்கு அழுகிறாய்? நான் சொல்வதைக் கேள். முதலில் எல்லோரிடமும் நட்பாகவும், ஒற்றுமையாகவும் விளையாடு' என்று சொன்னது அம்மா எலி.

அழுதபடியே விளையாடச் சென்றது குட்டி எலி. அங்கே நிறைய எலிகள் விளையாடிக் கொண்டே இருந்தன. என்னால் மட்டும் ஏன் உணவை எடுக்க முடியவில்லை? என நினைத்துக் கொண்டு இருந்தது குட்டி எலி.

'மற்ற எலிகள் உன்னை விட வேகமாக ஓடுகின்றன, சின்னச் சின்னப் பொந்துகளிலும் நுழைகின்றன. நீ அழுதால் மட்டும் உணவு கிடைத்து விடுமா? நீ பிடித்துச் சாப்பிட வேண்டும். நாம் அழும் போது ஆறுதல் மட்டுமே மற்றவர்கள் சொல்லுவார்கள்' என்ற அம்மாவின் பேச்சு ஆறுதலாக இருந்தது குட்டி எலிக்கு.

அம்மாவின் நம்பிக்கையான பேச்சு பெறும் ஆறுதலாக விளங்கியது குட்டி எலிக்கு. அன்று மாலை வீட்டிற்கு வந்த எலிகள் ஒற்றுமையோடு கதைகள் கேட்டும், விளையாடிக் கொண்டும் இருந்தன.

ஒரு சில எலிகள் உணவை எப்படி எடுப்பது என ஆராய்ச்சி செய்து கொண்டு இருந்தன. ஒற்றுமையாக செல்லாமல் தனியாகச் சென்று சாப்பிடலாமா என யோசித்துக் கொண்டே இருந்தன. அம்மா எலி அனைவருக்கும் நல்லொழுக்க கதைகளைச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அதோடு மட்டுமில்லாமல் உடலுக்குச் சத்தான உணவை எவ்வாறு எடுத்து சாப்பிடலாம் என சொல்லிக் கொடுத்தார் அம்மா எலி.

எலிக் குட்டிகள் பொறுமையுடன் அனைத்துக் கதைகளையும் கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.அன்று முதல் எலிக் குட்டிகள் அழாமல் தைரியத்துடன் செயல்பட தொடங்கின. கூட்டத்தில் சென்று இனிப்புகளைச் சாப்பிடத் தொடங்கின.



## தமிழர்களின் திருநாள்

தை மாதம் முதல் நாளாம்
பொங்கல் பண்டிகை !
தமிழர்களின் திருநாளாம்
பொங்கல் பண்டிகை !

மாவிலை தோரணங்கள்
பொங்கல் பண்டிகை !
மஞ்சள் இஞ்சி கரும்பு சேர்த்து
பொங்கல் பண்டிகை !

வண்ணக் கோலம் வாசலிலே
பொங்கல் பண்டிகை !
வானவில்லாய் அழகூட்டும்
பொங்கல் பண்டிகை !

புதுப்பானை  வாங்கி வந்து
பொங்கல் பண்டிகை !
புது அரிசி வெல்லம் சேர்த்து
பொங்கல் பண்டிகை !

பொங்கிவரும் நேரம் பார்த்து
பொங்கல் பண்டிகை !
பொங்கலோ பொங்கல் !
சொல்லி மகிழ்வோம் !
பொங்கல் பண்டிகை !

உறவுகள் சேர்ந்து மகிழும்
பொங்கல் பண்டிகை !
உழவர்களின் திருநாளாம்
பொங்கல் பண்டிகை !

பொங்கல் பண்டிகை !
எங்கள் பொங்கல் பண்டிகை !
தமிழர்களின் திருநாளாம்
பொங்கல் பண்டிகை !!!

**ஜனனி குமார்**
நாகப்பட்டினம்



# பிரவந்திகா

## தன்முனைக் கவிதைகள்

● ஒற்றைக் காலில்
தவம் இருக்கும் கொக்கு
கொக்கும் பாவம்
மீனும் பாவம்

● மிதிபட்டப் புல்
நிமிர்ந்து வளர்கிறது
தன்னம்பிக்கையின்
அடையாளம்
வேர் விடுகிறது

● க்றீச்... க்றீச் என
சத்தமிட்டு ஏதோ சொல்கிறது
சாலை விரிவுக்காக
வெட்டப்பட்ட மரம்

● காய்கறிக் குப்பைகளைக்
குழிக்குள் சேகரிக்கிறார் தாத்தா
வளரும் செடிகளுக்கு
இயற்கை உரமிட...

● பகலிலும் எரியும்
தெரு விளக்குகள்
மின்சார சிக்கனம்
தேவை இக்கணம்

● ஊறும் நத்தையிடம்
கற்றுக் கொண்டேன்
கனமான புத்தகப்பையை
முதுகில் சுமக்க...





ஸ்ரீ. ஜூணல் ரேயான்
நான்காம் வகுப்பு.



ஸ்ரீ. வித்துன் ரேயான்,
2ம் வகுப்பு
மெர்சி மழலையர் தொடக்கப்பள்ளி,
திருச்சி மாவட்டம்.







ஜீ.தேஜேஷ்









ரா.சோபிகா



ஸ்ரீ.நறுமுகை







த. ஹேமவர்தினி,- ஆம் வகுப்பு ஆர் கே ஆர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, உடுமலை





ஆ.சஹானா, ➔

12 ஆம் வகுப்பு,

ஆர் கே ஆர் மெட்ரிக்

மேல்நிலைப்பள்ளி,

உடுமலை





🡐 ஷ்.அனன்யா

வயது- 15

மாநிலம்- புதுச்சேரி

சத்யா சிறப்பு பள்ளி

# தண்டனை வருகிறது

## பரணி சுப சேகர் மதுரை 17

குழந்தைகளை சமமாக பாவிக்காத பெற்றோரும், மாணவர்களை சமமாக பாவிக்காத ஆசிரியரும், கடமை தவறியவர்கள்தான். கடமையை சரிவர செய்யும்போது மட்டுமே வாழ்வு வழி காட்டுகிறது. கடமையோடு இணைந்தது காலமும் நேரமும். 'தவிக்கும்போது தான் தண்ணீர் தேவைப்படும். இதனை உணர வேண்டும். காலம் கடந்து செய்யக்கூடிய கடமையும் கண்டனத்திற் குரியதே.

நாட்டுப்பற்றும் ஒட்டு மொத்தத்திற்கும் கடமையாகிறது. வாக்குரிமையும் அப்படியே. நல்லவர்களை தேர்வு செய்வதும் கடமை தான். அப்படித் தேர்வானவர்களின் கடமை நல்லதே செய்ய வேண்டும் என்பது தான். சுயநலம் அங்கு வந்து விட்டால் கடமை தவறிய நிலையே வந்து நிற்கும். இன்று சராசரியாக 40% வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை செலுத்துவதில்லை. சனநாயக கடமையை மறந்தவர்களுக்கு எந்தச் சலுகைகளும் வழங்கக்கூடாது. உன் கடமையை நீ சரியாக செய்யாத போது அடுத்தவனை விமர்சிக்கும் உரிமை உனக்கில்லை.

கடமையைச் செய்யவிடாமல் தடுப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். கடமைகள் ஒழுக்கத்தோடும் பண்போடும் யாருக்கும் பாதகம் இல்லாதவாறும் இருத்தல் அவசியம். 'ஒருபுல்லின் நுனியைக்கூட உருவாக்க முடியாத நமக்கு எதையும் அழிக்கவோ பாழ்படுத்தவோ உரிமையில்லை'. உரிமைகளே மறுக்கப்பட்டாலும் வன் முறையை கையிலெடுப்பது உனக்கான கடமையில்லை. மக்களுக்கு நல்ல விசயங்களை மட்டுமே எடுத்துரைக்க வேண்டும். எந்தவொரு உயிரினத்தையும் பயத்திற்கு உள்ளாக்குவது மனிதனின் கடமையல்ல. குற்றங்களை கண்டு பிடித்துச் சொல்லும் போது அதை உள்வாங்கி, திருத்திக் கொள்ள வேண்டும். மாறாக குற்றத்தை மறைக்க இன்னொரு குற்றத்தை செய்யக்கூடாது. கடமையை பயபக்தி யோடு செய்ய வேண்டும். விளம்பரத்திற்காக எதையும் செய்யக்கூடாது. வினை விதைத்தவன் வினையறுப்பான். இதை உணர்தல் வேண்டும்.

அரசின் கடமை முதலானது. மக்கள் அனைவருக்கும் நல்லது நடக்க வேண்டியே, அரசு நிர்வாகம் உழைக்க வேண்டியுள்ளது. விருப்பு வெறுப்பு பார்க்காமல் பொதுவான பார்வையுடன் தன்னை நிலைப்படுத்த வேண்டிய கடமை அரசுக்கு உண்டு. சட்டங்களை இயற்றவும், இயற்றிய சட்டங்களைக் கொண்டு மக்கள் நலன் காப்பதும், தடுக்க நினைப்போர் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவதுமான கடமை அரசுக்கு உண்டு.

பதவியை பயன்படுத்தி சுய நோக்கோடு கடமை மறந்து அரசு இயந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் அந்த அரசை தூக்கியெறியும் கடமையும் மக்களுக்கு உண்டு. ஆனால் அதை அதற்கான சனநாயக வழியில் செய்வதே கடமையாகக் கொள்ளல் வேண்டும்.

'கடமை என்பதையும் பொறுப்பு என்பதையும் குழப்பிக் கொள்ளக்கூடாது' உன் கடன் (கடமை) பணி செய்து கிடப்பதே என்றாலும் பொறுப்புணர்வு கொண்டு பணி செய்யவேண்டும். அப்போது தான் கடமைக்கு ஒரு அர்த்தம் இருக்கும்.

கடமைக்காக எந்த செயலையும் செய்யக் கூடாது. கடமையாகச் செய்ய வேண்டும். காரியத்தில் கவனம் வேண்டும். செய்யும் பணியின் முடிவு பயன் தருவதாக இருக்க வேண்டும். ஒரு சிலநேரங்களில், ஒரு சில இடங்களில், ஒரு பணியானது பகிர்ந்தளிக்கக் கூடியதாக இருக்கும். அதில் கூட்டான கடமை உணர்வு இருக்க வேண்டும். குழி தோண்டி, மரக்கன்று களை ஊன்றி, மீண்டும் குழிகளை மூடுவதற்கானப் பணியானது மூவருக்கும் ஆன பணியாக இருக்கும் போது மூவரில் ஒருவர் அதாவது மரக்கன்றினை உள்ளே வைப்பவர் வரவில்லை யென்றால் அவருக்கான பணியையும் நீங்கள் பகிர்ந்து செய்ய வேண்டும். அப்படி செய்ய முடியா தென்றால், உங்கள் வேலையை மட்டும் தான் பார்ப்பேன் என்றால் நீங்கள் செய்யப் போகும் வேலையால் ஒரு பயனும் இல்லை. குழியை வெட்டுவதும் மூடுவதுமே உங்கள் பணியென்றால், எதற்காக அந்தப்பணி மேற்கொள்ளப் படுகிறது என்ற அறிவு இல்லையென்று உணர வேண்டும். அறிவு வேலை செய்யாத இடத்தில் கடமை காணாமல் போகிறது. களத்திற்கு உதவாத கடமையால் எந்தப் பயனுமில்லை.

கடமையென்பது வாழ்வாதாரத்தைக் கொடுக்கக் கூடியது. கடமையைப் புறக்கணித்துவிட்டு யாரும் வாழ்ந்து விட முடியாது. அரசன் முதல் ஆண்டி வரை அனைவருக்கும் அவரவருக்கான கடமை உண்டு. கடமையில் இருந்து யாருக்கும் விலக்கு அளிக்க முடியாது. கடமை மறந்தவன் பிணம் தான். கடவுளின் வரமென்று நினைத்து கடமையாற்ற வேண்டும். மற்றவர் கண்ணீரைத் துடைக்கும் கடமையானது இறைபணி யாகும். மனம் மகிழ்வாய் கடமை யாற்றுவோம். மனிதத்தை நினைத்து மனம் மகிழ்வோம். கடமையே கடமை யென களம் வெல்வோம்.

# அன்பின் ஒளி

அன்னை அன்பின் ஒளி
அகவையில் ஆரம்பம்

தந்தை அன்பின் ஒளி
தலை நிமிர்கையில் ஆரம்பம்

சகோதரர்கள் அன்பின் ஒளி
சமத்துவத்தில் ஆரம்பம்

உறவினர்கள் அன்பின் ஒளி
உதவியில் ஆரம்பம்

அயலவர்கள் அன்பின் ஒளி
அனுசரிப்பில் ஆரம்பம்

நண்பர்கள் அன்பின் ஒளி
நற்பண்புகளில் ஆரம்பம்

காதலர்கள் அன்பின் ஒளி
காதலில் ஆரம்பம்

ஆசான்கள் அன்பின் ஒளி
ஆற்றுப்படுத்தலில் ஆரம்பம்

குழந்தைகள் அன்பின் ஒளி
குறும்புகளில் ஆரம்பம்

சிறுவர்கள் அன்பின் ஒளி
சிநேகங்களில் ஆரம்பம்

முதியோர் அன்பின் ஒளி
முதிர்ச்சியில் ஆரம்பம்

தலைவர்கள் அன்பின் ஒளி
தைரியத்தில் ஆரம்பம்

அகிலம் ஆளும் அன்பை
அனைவர் மனமும் வெல்ல
அருளாளன் துணை வேண்டும்
அடியார்களாய் நலம் புரிவோம்.

ஹாஸ்மியா தாஹா
(பேனா முனைக் காதலி)
இலங்கை, அனுராதபுரம்-கலாவெவ

# ஐயா மோகன்

## நேர்காணல்



01 வணக்கம் ஐயா.

“வணங்கு, வணங்க வை” என்னும் தமிழ்ப்பண்பாட்டிற்குரிய தலையாய சொல்லின் எண் வணக்கம்.

02 ஐயா மோகன் என்ற பெயர் இதுவரை கேள்விப்பட்டதில்லை. தங்கள் உண்மையான பெயர் என்னவோ?

ஒரு சிற்றூரில் ஏட்டுக்கல்வி அறிவில்லாமல் மூட நம்பிக்கையில் பற்றுக் கொண்டு வாழும் குடும்பத்தில் பிறந்த எனக்கு “மூக்கன்” என்று பெயரிட்டனர். கற்ற நண்பர்களும், பெரியவர்களும் எனக்கு “மோகன்” என்று பெயரைத் திருத்தம் செய்தார்கள். அன்றைய நிலையில் நானும் ஏற்றுக் கொண்டேன். “மோகன்” என்பது வடசொல்லாயிற்றே. பெருவாரியாக என் தந்தையின் பெயர் “அய்யாவு” என்பதில் ல்அய்யால் என்ற பகுதியை மட்டும் முன் நிறுத்தி “அய்யா.மோகன்” என்றும், யான் தமிழாசிரியராகப் பணியாற்றியக் கரணியத்தால் “புலவர் அய்யா. மோகன்” என்றும் பெயராயிற்று.

03 திருக்குறள் தங்களை கவர்ந்து இழுத்ததன் காரணம் என்ன?

மக்களாகப் பிறந்தவர் நல்லவர் ஏற்கும்படியான நல்ல வாழ்க்கை (சாதி, சமயம், மதம்) தழுவாமல் வாழவேண்டும் என்றால் அதற்கான வழிகாட்டு நூல் திருக்குறள்தான் என்று தேர்ந்தேன்.

04 1330 குறள்களில் தங்களுக்கு பிடித்த குறள் எது? ஏன்?

ஒரு வளமான மல்லிகைத் தோட்டத்தில் தூய வெண்மையும், மென்மையும், மணமும் உடைய 1330 மலர்கள் மலர்ந்துள்ள தோட்டத்தில் உள்ள மலர்களில் உங்களுக்கு எந்த ஒருமலர் பிடிக்கும் என்பது போல் இருக்கிறது.

05 “ங” போல் வளை என்பதைத்





தாங்கள் அறிவீர்கள். அப்படி என்றால் மீதமுள்ள எழுத்துக்கள் எதற்காக? இடத்தை நிரப்புவதற்காகவா?

தமிழ் நெடுங்கணக்கு 247 எழுத்துக்களின் வரலாற்றைச் சொல்வதில் ஙகர உயிர் மெய் 12 எழுத்துக்களில் " ங " என்ற முதல் உயிர்மெய் எழுத்து மட்டுமே தூய தமிழ்ச் சொற்களில் முன்னின்று அதுவும் "அ, இ, உ, எ, யா" என்னும் சுட்டு, வினா எழுத்துக்களை முன் நிறுத்தி வருகிறது. அந்த ஒரு எழுத்து மட்டுமே தன் வருக்கத்தைக் காத்துக் கொள்கிறது. "ங ப்போல் வளை" என்னும உவமைத்தொடர் உணர்த்தும் வாழ்வியல் செய்தி என்னவென்றால், பன்னிருவர் உள்ள ஒரு குடும்பத்தில் ஒருவரின் செயல்பாட்டால் மட்டுமே ஏனைய பதினொரு பேர்களும் மதிக்கப்படுகிறார்கள் என்னும் வாழ்வியல் பேருண்மைதான் "ங ப்போல் வளைல் (வளை என்பது காத்துக்கொள்)

06 என்ன வருத்தி நீ கவி செய்யினும் முன்னோர்கள் செய்ததன்றி நூதனம் ஒன்றுமில்லை என்பார்கள். அப்படி என்றால் முன்னோர்களை யாரும் மிஞ்சக் கூடாதா?

ஆழ்ந்தகன்ற அறிவையும், ஓங்கி உயர்ந்த பண்பாட்டையும் உடைமையாகக் கொண்டவர்களைத் தான் உலகோர் என்பதாம். அம்முன்னவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்வையும், வாயுறைக் கருத்துக்களையும் பின்பற்றி வாழ்வது என்பதுதான் முன்னோர் நெறி.

அந்நெறியில் கால மாற்றத்திற்கேற்ப இடத்திற்கேற்ப அவற்றின் அடிப்படைக் கருத்தினை மாற்றாமல் தேவையான மாற்றத்தைச் செய்து கொள்ளலாமே தவிர, முழுமையாகவே மாற்றிக் கொள்ளக்கூடாது. ஏனெனில் "மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

07 மற்ற அதிகாரங்களில் திருவள்ளுவர் புலவராகத் தெரிந்தாலும், காமத்துப் பாலில் கவிஞராகத் தெரிகிறார். அவரைப் புலவர் என்று சொல்வதா கவிஞர் என்று சொல்வதா?

திருவள்ளுவர் தம்முடைய திருக்குறளின் முப்பாலில் அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் செயற்கை, இயற்கைப் பொருட்களை வைத்து ல்உறுவது கூறல்ல் என்னும் தன்மையில் புனைவு இன்றி தம் பல்துறைப் புலமையின் திறத்தால் மக்களின் வாழ்வியலை சீராக்கக்கூறிய வகையில் புலவர் என்றும் (இது புறப்பொருள் செய்தி.)

இன்பத்துப்பாலில் தலைவன்,

தலைவி, தோழி, என்று சுட்டி ஒருவரின் பெயரைக் குறிப்பிடாமல் அவர்களின் உள்ளக் கருத்தினை வெளிப்படுத்துவது போல் இயற்கை நிகழ்வுகளைக் கொண்டு கவினுற புனைந்து கூறியுள்ள அகப்பொருள் தன்மையுடையது. புனைந்துரை இன்றி புலமையால் கூறப் பெற்றதால்., புலவர் என்பதும்; கவினுற புனைந்து கூறியுள்ளமையால் கவிஞர் என்பதும் வள்ளுவருக்குப் பொருந்தும் என்பது எம் கருத்து.

*08 இதுவரை திருக்குறளுக்கு எழுதிய உரைகளில் எது தங்களுக்கு பிடித்த உரை?*

கி.மு.இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் தோன்றிய திருக்குறளுக்கு 1000 ஆண்டுகள் கழித்தே 10 பேர் உரை எழுதினார்கள். பிறகு தொடர்ந்து பல அறிஞர்களும், புலவர்களும், கவிஞர்களும் உரை எழுதினார்கள். 19, 20ஆம் நூற்றாண்டுகளில் எழுதிய உரையாசிரியர்கள் வரைக்கும் யான் படித்த உரைகளின் விளக்க நிலையில் சிறுசிறு மாற்றங்களைக் கொண்டு உள்ளன. மேல்மாடிக்குச் செல்ல வேண்டுமாயின், முதல்படி, இரண்டாம் படி, மூன்றாம்படி என்று பலப்படிகள் ஏறினால் தானே மேல் நிலைக்குச் செல்லலாம். படிகளின் நிலை உயர, உயர ஏறுபவர்களின் புலன் பரப்பும் கூடும் அல்லவா? அந்த வகையில் எல்லாருடைய உரைகளும் எமக்குப் பிடித்த உரைகளே. திருவருட்பாவில் முதலாம் திருமுறை முதலாக 5ஆம் திருமுறை வரைக்கும் வள்ளலார் கூறியுள்ள செய்திகளுக்கும் ஆறாம் திருமுறையில் கூறப் பெற்றுள்ள செய்திகளுக்கும் பேரளவு மாற்றங்கள் பெற்றிருந்தாலும், முதல் ஐந்து திருமுறைகளை விட்டுவிட முடியுமா? விட்டு விடலாமா? விட்டுவிடக் கூடாது அல்லவா?

*09 இதுநாள்வரை பலரும் திருக்குறளுக்கு உரை எழுதினார்களே. அப்படி என்றால் எல்லா உரையும் பொருந்துகிறது என எடுத்துக் கொள்வதா? அல்லது பொருத்தமான உரையை இதுவரை யாரும் எழுதவில்லை என்று எடுத்துக் கொள்வதா?*

உரையாசிரியர்கள் தத்தம் காலத்திற்கேற்ப தாம் சார்ந்துள்ள கொள்கைக்கு ஏற்ப திருக்குறளின் உட்கருவை வைத்துக் கொண்டு எழுதினார்கள். எழுதிக் கொண்டும் இருக்கிறார்கள். எழுதுவார்கள். இருப்பினும் திருவள்ளுவரைப் போல் பல்துறை அறிவும், திருக்குறளின் நெறிப்படியும் எவர் ஒருவர் வாழ்வாரோ அவரால் மட்டுமே பொருத்தமான உரை எழுத இயலும்.





*10 இன்றுவரை திருக்குறளுக்கு எழுதிய உரைகளில் எதுவும் பொருந்தாமல் இருப்பது. தமிழுக்கான சாபக்கேடு என்று ஏன் சொல்லக்கூடாது?*

இன்றுவரை திருக்குறளுக்குத் தோன்றிய உரைகள் ஏதேனும் ஒரு துறையில் பொருந்துவதாகத்தான் உள்ளனவேயன்றி முற்றிலும் பொருந்தாத உரை என்று எவர் உரையும் இல்லை. பலபேர் உரையையும், திருக்குறளையும் படித்த அறிவுடையோர் தமிழில் தோன்றிய திருக்குறளுக்கு உலக அறிஞர்கள் கூட உரை எழுதியுள்ளார்கள். எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் தமிழின் சிறப்பினை உயர்த்திக் காட்டுகிறதே. தமிழுக்கு ஒருபோதும் கேடு வாரா.

*11 தமிழில் இத்துணை நூல்கள் இருக்கும்போது திருக்குறளை மட்டும் தாங்கள் பற்றியதன் காரணம் என்ன?*

தமிழில் உள்ள இலக்கியங்களில் நம்பகமில்லா தொன்மைக் கதைகளையும், தமிழ்ப் பண்பாட்டுக்கு முரணான ஒழுக்கப் பிறழ்வுகளையும், ஆறறிவு உடைய மக்கள் தம் அறிவாற்றலை விட விலங்கு, பறவை, பாம்பு, போன்ற அஃறிணை உயிர்களுக்கு உண்டு என்று நம்புவதையும், தவிர்த்துள்ள இலக்கியமாகிய திருக்குறளையே யான் பற்றியதற்குக் கரணியாகும்.

*12 தாங்கள் திருக்குறளின் வழியே வாழ்பவர் என்று கேள்விப்பட்டேன். மற்ற வாழ்க்கைக்கும் தாங்கள் வாழும் இந்த வாழ்க்கைக்கும் என்ன வித்தியாசம்?*

சினம் கொள்ளாமை, அறிவுடைமை, அன்புடைமை, அடக்கமுடைமை, அருளுடைமை, ஆள்வினை உடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணுடைமை, பண்புடைமை, பொறையுடைமை என்னும் உடைமையினைப் பெரும்பாலும் கடைப்பிடித்து வாழ்வதால் நற்றுணைவி, நன்மக்கள், நல்ல நட்பு வட்டாரங்கள், பெரியோர் துணை முதலியன் வாய்க்கப் பெற்று நிறைவாக வாழ்கிறேன்.

*13 தாங்கள் செல்லும் இந்த வழியில் மேலும் நீங்கள் சாதிக்க நினைப்பது என்ன?*

நான் திருக்குறள் நெறிப்படி வாழ்வதற்கும், மற்றையவர் வாழும் முறைக்கும் என்ன வேறுபாடு அறிந்தேன் என்றால், சமமான மாந்த நேய வாழ்க்கை வாழ்ந்து வருகிறேனே. அதுதான் என் வாழ்வியலின் வெற்றி.

*14 இதுவரை குறளுக்கு சொல்லப்படாத சிறிது மாறுபட்ட உரையை அல்லது உங்கள் கோணத்தில் ஒரு உரையை தங்களால் சொல்ல இயலுமா?*

பலபேர்களின் உரையில் மிகவும்

விரிவான விளக்கவுரை தெளிவுரை, பதவுரை, கருத்துரை என்று இருந்தும், திருவள்ளுவர் கையாண்டுள்ள சிற்றூர் பகுதியில் வாழும் மக்களின் தொழில் முறை நுணுக்கங்களை எடுத்துக் கூறாமல் உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளார்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. நான் உரை எழுதுங்கால் அவற்றைத் துள்ளியமாக எடுத்துரைப்பேன்.

*15 நீங்கள் பெற்ற பாராட்டுகள் மற்றும் விருதுகளைப் பற்றி சொல்லுங்கள்?*

தாய், தந்தைக்கு உணவளித்து பேணிக்காப்பதற்காகப் பிறர் நம்மைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்துச் செயல்படுபவனும், தமிழுக்குத் தொண்டு செய்வதற்குப் பாராட்டை எதிர்ப்பார்ப்பவனும் ஒன்றுதானே.

அந்நிலையில் வாழ்பவன் யான். இருப்பினும் சென்னை, திருச்சி, இலங்கை, தமிழகத்தின் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின், கல்லக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் போன்றவர்கள் எம்மை அழைத்துப் பாராட்டினார்கள். ல்திருக்குறள் செம்மல்ல், ல்அறநெறி அண்ணல்,ல் ல்அருள் மனச் சான்றோரர்ல், ல்சிகரம் (இதழ் ஆசிரியர்)ல், ல்திருக்குறள் நெறிபரப்பும் தகைமையாளர்ல் என்ற பாராட்டுகள்.

*16 இதுநாள்வரை திருக்குறளை பின்பற்றி தாங்கள் சாதித்தது என்ன?*

திருக்குறள் நெறியாளர், தமது செல்வாக்கால் முடியாதவர்களுக்கும் உதவும் பண்பாளர், நல்ல கொள்கையாளர், மனை விழாக்கள், பெயரக் குழந்தைகளோடு ஒரே வீட்டில் வாழும் வாழ்க்கை நிலை.

*17 இனிமேல் திருக்குறளுக்கு உரை எழுத வரும் எழுத்தாளர்களுக்கு தாங்கள் சொல்லும் அறிவுரை என்ன?*

திருக்குறளுக்கு உரை எழுத வரும் பெருமக்களுக்கு யாம் வேண்டுவது "கட்டுரை". "செய்யுள்", "உரைநடை" என்பதை மனதில் கொண்டு பிற மொழிச் சொல் கலவாமல் உரை எழுத வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

*18 திருக்குறள் போல இன்னொரு நூலாக்கம் செய்ய இப்போது உள்ள எழுத்தாளர்கள் எதைப் பின்பற்ற வேண்டும்.*

*அல்லது*

*இனிமேல் இப்படி ஒரு நூலாக்கம் வருதற்கு வாய்ப்பு இல்லையா?*

திருக்குறளின் முப்பாலிலும் உள்ள அதிகாரங்களின் பொருளறிந்து அதன்படியான வாழ்வைத்தான் பின்பற்ற வேண்டும். அப்படி எழுதுவோர்களால் நல்ல நூல் வெளிவர வாய்ப்பு உண்டு.

*19 இல்லற வாழ்வைத் துல்லியமாகக் காட்டும் ஒரு குறள் என்றால் அது எது?*

அறத்துப்பாலில் இல்லறவியலில் இல்வாழ்க்கை என்னும் 5ஆம் அதிகாரத்தில் 46ஆவது குறட்பா.

"அறத்தாற்றின் இல் வாழ்க்கை யாற்றின்
புறத்தாற்றின் போஒய்ப்பெறுவ தெவன்?"

*20 தங்களைப் பேட்டி காணும் தமிழ்நெஞ்சம் மாத இதழைப் பற்றி தங்களின் மேலான கருத்து என்ன?*

புவிகோளமாகிய மண்ணுள் வெளிப்படாதிருக்கும் தங்கத்தைக் கண்டறிந்து, அகழ்ந்தெடுத்து, அதன் சிறப்பையும், உயர்வையும், மக்களுக்கு அறிமுகப்படுத்துவது போன்ற செயலை அல்ல தொண்டினைத் "தமிழ்நெஞ்சம்ல்" என்னும் திங்கள் இதழ் தமிழ்த் தொண்டினை ஆற்றி வருகிறது. தமிழ்நெஞ்சம் "வளர வேண்டும். வாழ வேண்டும்" என்று வாழ்த்துகிறேன்.

# நிம்மதியின் குரல்



**ஏ சாந்தி பிரபு**

**தூத்துக்குடி**

எனது கடுமையான வேலைப்பளுவின் சோர்வினை ஐந்து நிமிடத்திற்குள் போக்கிவிடும் சுவையான சூடான இஞ்சி டீ கிடைக்குமிடம் திருச்செந்தூர் பேருந்து நிலையத்திற்குள் இருக்கும் 'குமரன் பேக்கரி'. தஞ்சாவூர் புறவழிப் பேருந்து இன்னும் பேருந்து நிலையத்திற்குள் வரவில்லை என்பதை உறுதி செய்து விட்டு பேக்கரிக்குள் நுழைந்தேன்.

'அண்ணே ஒரு இஞ்சி டீ.'

'இங்க ஒரு லெமன் டீ.'

'இந்த டேபிளுக்கு சர்க்கரை கம்மியா ஒரு டீ'.

'இங்க ஒரு பிளாக் டீ.'

'அப்பப்பா! டீ மாஸ்டருக்கு தான் எத்தனை நிர்ப்பந்தங்கள்!' காற்றலைகளில் மிதந்து வந்த 'எங்கே நிம்மதி' என்ற பாடலின் வரிகள் எனக்காகவே எழுதப்பட்டிருப்பதைப் போல நினைத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்,

'எனக்கென்ன பத்து கையா இருக்கு? ரெண்டு நிமிஷம் பொறுங்க' என்று லேசாகக் கடிந்து கொண்டு புன்னகைமாறாத முகத்துடன் இருந்தவருக்கு அதே பாடல் வரிகள் உற்சாகத்தை தான் அளித்தது போலும்.

குரலில் அவ்வளவு ஒரு தெளிவு. சூழ்நிலைகள் அவர் மீது தரும் அழுத்தத்தை பொறுப்படுத்தாமல் இரு கைகளுக்கும் இடையில் கிலோமீட்டர் கணக்கில் இருக்கும் தூரத்தில் ஒரு துளிக்கூட கீழே சிந்தாமல் கால்கடுக்க நின்று டீ ஆற்றிக் கொண்டிருந்த டீ மாஸ்டரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஐந்து நிமிடங்கள் கண்களை மூடி நிதானித்து ஒவ்வொரு பருகலிலும் மாஸ்டரின் உற்சாகத்தை என் மனதிலும் ஏற்றுக்கொள்ள முயற்சித்தேன்.

'ஈர்ப்பு விதி' எனப்படும் லா ஆஃப் அட்ராக்சன் பதிவுகளை நான் விரும்பி பார்ப்பதுண்டு. (பார்ப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்கிறேன்) அதில் ஒரு பதிவில், தண்ணீருக்கு நிறைய சக்தி உண்டென்றும், நீர் ஆகாரத்திற்கு முன்பு எந்த ஒரு நல்ல வாக்கியத்தை தொடர்ந்து சொல்வதனால் நம்மால் அதே மனநிலையை அடைய முடியும் என்றும் நம்மைச் சுற்றி இருப்பவர்களிடமும் அதே மனநிலை உருவாக்க முடியும் என்று பார்த்திருக்கிறேன்.

டீ மாஸ்டரின் மகிழ்ச்சியான மனநிலை தண்ணீர் மூலமாக என்னையும் ஆக்கிரமித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே செல்ல முயன்றபொழுது கை தவறி என் மொபைல் கீழே விழுந்தது. அதை எடுப்பதற்காக குனிந்த பொழுதுதான் அவரது கால்களை முதல் முறையாகக் கவனித்தேன்.

நீண்ட நேரம் நின்றுகொண்டே வேலை பார்ப்பதால் ஏற்படும் விரிசுருள் சிறை நோய் (சிலந்தி பின்னல்) எனப்படும்

வெரிகோஸில்ஸால் பாதிக்கப்பட்டிருந்தார். அப்படிப்பட்ட சூழலிலும் மகிழ்ச்சியை விரும்பும் அவரது பக்குவமான மனநிலை மீண்டும் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

அப்பொழுது 'பளிச்' லைட் வெளிச்சத்துடன் தூத்துக்குடி மதுரை மார்க்கமாக தஞ்சாவூர் செல்லும் புறவழிப் பேருந்து வேகமாக பேருந்து நிலையத்திற்குள் நுழைந்தது. பேருந்தின் பிரகாசத்தில் துளிக் கூட ஒட்டுநர் முகத்திலோ நடத்துனரின் முகத்திலோ பிரதிபலிக்கவில்லை.

'அண்ணே! ஒரு கப் டீயாவது குடிச்சிட்டு போவோம்னே. ரொம்ப பசிக்குது' என்று சோர்வான குரலில் நடத்துனர் கூறவே,

'ஏற்கனவே அஞ்சு நிமிஷம் லேட்.இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்துக்கோ மேலகரந்தையில ஒரேடியா சாப்பாடே சாப்பிட்டுருவோம்' என்று கூறிவிட்டு பேருந்தை இயக்க ஆயத்தமானபோது, பெரியவர்கள் சிறியவர்கள் நண்டு சிண்டுகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கூட்டமாக பேருந்திற்குள் ஏறினார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரின் கைகளிலும் வடை, பஜ்ஜி என பேருந்து முழுவதும் 'கம்' என வாசம் வீசியது. ஏற்கனவே பசியில் இருந்த நடத்துனர் அவரது கைகளையே பார்த்துக் கொண்டு நின்றார்.

'தாத்தா வரல.'

'ஆமா ஆமா. இன்னும் தாத்தா வரல' என்று பொடிசுகள் சத்தம் போடவே,

'இதோ வந்துட்டேன்' என்று கனத்த குரலில் ஒருவர் சூடான டீ கப்பை கைகளில் ஏந்தியவாறு பேருந்திற்குள் நுழைந்தார்.வெள்ளை வேட்டி,லேசான காபித்தூள் நிறச்சட்டை,முறுக்கிய மீசை,பஞ்சுமிட்டாய் முடி என ஒரு சினிமா பட வில்லன் போல இருந்தார்.

# பட்டமும் பலூனும்

பட்டம் பறக்குது பாருங்க!
படபடக்குது பாருங்க!
தலையாடுது பாருங்க!
வாலும் ஆடுது பாருங்க!
காத்தும் வீசும் போக்கிலே
பாத்து விடுங்க நூலையே!

பாப்பாவின் கையிலே
பலூன் இருக்குது!
பல வண்ணங்கள் அதிலே
கலந்து இருக்குது!
காத்து உள்ள பலூன்
கவர்ந்து இழுக்குது!

மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.



‘சீக்கிரம் ஏறுங்கய்யா. வண்டி ஏற்கனவே லேட்‘ என்று ஓட்டுநர் அவசரப்படுத்தவே,

‘பொறுங்கய்யா. இப்ப என்ன பஸ் முழுக்க எங்க குடும்பம் தான் இருக்கு. அது போக ரெண்டு மூனு பேர் தான். அப்புறம் ஏன் இப்படி பறக்குறீங்க?‘ என்று சிரித்துக்கொண்டு இருக்கையில் அமர, அவரது குடும்பத்தினர் அனைவரும்,‘ஹைய்யா.டீ கீழ சிந்தாம

## தற்புகழ்ச்சி

ஓரிடத்தே கூடுவோரை ஓடிடவே செய்திட
பாரிடத்தே தோன்றிடுவார் பற்றுடனே - யாரிடமும்
இல்லாதத் தன்மையென ஈர்க்குமந்தத் தற்புகழ்ச்சி
வல்லானின் பண்பதுவே வாழ்வு.

## அறிதிறன் பேசியும் நாமும்

ஒருங்கமைச் சாதனமே ஒத்ததாகப் பெற்ற
வருந்துணைக் கைத்தடியே வந்ததிதே நன்றாய்
தருகின்ற நல்லுதவி தக்கதற்கே கெள்ள
விரும்பாதச் செய்கை விலக்கு!

## இணைய உலாவலில் கவனம்

தேடுகிறாய் மின்னுலாவில் தேர்ந்திட நின்கவனம்
வீடுதனில் நீயிருந்தே வித்தையைக் கற்றிடலாம்
கேடுதனைத் தள்ளிடவே கேட்டிடுநீ நன்மொழி
பீடுடையோன் ஆகிடலாம் பேணு.



**மாலதி இராமலிங்கம்,**
புதுச்சேரி.

எடுத்துக்கிட்டு வந்துட்டாங்க. சூப்பர்‘ என்று பலமாக கைத்தட்டவே, ஓட்டுனரின் முகத்திலும் நடத்துனரின் முகத்திலும் லேசாக புன்னகை மலரத் தொடங்கியது.

‘வீரபாண்டியபட்டணத்துல நடக்கப்போற பொருட்காட்சியை பாக்க போறோமே!‘ என்று நடத்துனரிடம் கூறிக்கொண்டு ஆறு முழு டிக்கெட்டும் அஞ்சு அரை டிக்கெட்டும் எடுத்தார்.

வண்டி பேருந்து நிலையத்தை விட்டு வெளியேற ஆயத்தமானபோது,திடீரென அந்த பெரியவர், ‘ஏ ஐயா வண்டிய ஒரு ரெண்டு நிமிஷம் ஓரங்கட்டுங்க. பெரிய டிவியில நம்ம தலைவர் பாட்டு ஓடுது‘ என்று மீண்டும் கனத்த குரலில் கூறவே, நான் அவரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

‘ஏற்கனவே அஞ்சு நிமிஷம்...‘ என ஓட்டுனர் சற்று தயங்கினார்.

‘இப்படி ஓடிக்கிட்டே இருந்து என்னத்த கண்டீங்க? பெரிய பெரிய சந்தோசம்தான் கெடைக்கணும்னு காத்துக்கொண்டிருந்தோம்னா வாழ்க்கையில எப்பவும் நிம்மதியே இருக்காது. இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயத்தையும் அனுபவிக்கக் கத்துக்கோங்க. ரெண்டு நிமிசத்துல ஒன்னும் ஆகாது. என்னம்மா நான் சொல்றது கரெக்ட் தான?‘ என்று என்னை நோக்கி அந்த பெரியவர் திரும்பினார்.

நான் லேசாக புன்னகைத்து தலையசைத்தேன். ஓட்டுனரும் நடத்துனரும் அந்த குடும்பத்தினர் பகிர்ந்தளித்த வடை பஜ்ஜியை சாப்பிட்டுக் கொண்டே, அவர்களுடன் இணைந்து ‘அதோ அந்த பறவை போல வாழ வேண்டும்‘ என்று பாடிக் கொண்டிருந்தனர்.

என் மனதிலும் நிம்மதியின் குரல் மெதுவாக ஒலிக்கத் தொடங்கியது.

# ரோஜா இதழ் ராஜகுமாரி

நௌஷாத் கான்

ஹலோ மிஸ்டர் ராஜா எதுக்கு என்னை இங்க கூப்டீங்க??

இனிமே என்னை தொந்தரவு பண்ணக்கூடாதுன்னு சொல்லுறதுக்கு தான் நீங்க சொன்ன இந்த ரெஸ்டாரெண்டுக்கு வந்தேன். மத்தப்படி உங்க கூட கேப்புசினோ காபி குடிக்கவோ, நைட் கேன்டில் டின்னர் சாப்பிடவோ வரவில்லை.

ப்ளீஸ் ராஜா

இனிமே என்னை பாலோ பண்ணாதீங்க, லவ் பண்ணு, லவ் பண்ணுன்னு தொந்தரவு பண்ணாதீங்க

உங்களுக்கும் எனக்கும் ஏணி வச்சா கூட சரி சமம் ஆகாது.

உங்களுக்கான பொண்ணு நான் இல்லை ராஜா .

இங்க பாருங்க ரோஜா உங்களை எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு, ஏன் பிடிச்சு இருக்குனு கேட்டா எனக்கு சொல்ல தெரியாது??

ஏன்னா உண்மையான காதலுக்கு காரணம் இருக்காது, அப்படி காரணம் இருந்தா அது உண்மையான காதலா இருக்காது ன்னு நம்புறவன் நான்.

என்னுடைய வெள்ளை தோல், அழகு முகம், நீளமான கூந்தல் இப்படி ஏதாவது ஒரு காரணம் உங்களுக்கு பிடிச்சு இருக்கிறதால தான் நீங்க என்னை லவ் பண்ணுறீங்கன்னு நான் நினைக்குறேன்.

அப்படி நினைச்சீங்கன்னா அது உங்களுடைய அறியாமை.

ஏன்னா இந்த உடல் நாற்றம் வீசக்கூடிய மலம் - மூத்திரத்தால் ஆனது.

ஒரு நாள் குளிக்கலைன்னா கூட மற்ற உயிரினங்களை விட நம்ம மேல தான் அருவருக்கத்தக்க கெட்ட நாற்றம் வீசும். இந்த கருப்பு - வெள்ளை தோலை நீக்கிட்டா நாம்ம ஒண்ணுமே இல்லை. நாம்ம உண்ணக்கூடிய உணவு எப்படி செரிக்குதுன்னு நாம்ம கண் கூடா பார்த்தா கூட நான் என்ற ஆணவம் நம்மகிட்ட இல்லாம போயிடும் ரோஜா .

நான் விரும்புவது உங்க உடலுக்குள் இருக்கின்ற அந்த தூய உள்ளத்தை தான் நேசிக்குறேன். எத்தனையோ தடவை அனாதை ஆசிரமத்துல உங்களை பார்த்து இருக்கேன். தாய் தகப்பன் இல்லாத யாரோ பெற்ற குழந்தைகளை ஒரு தாய்க்கு தாயா, தந்தைக்கு தந்தையா அக்கறையா, அன்பா நீங்க பரிவு காட்டுற அந்த பண்புதான் உங்களை என்னை விரும்ப வச்சது.

யாரோ பெற்றவர்களின் குழந்தைகளை கூட இவ்வளவு அன்பா பார்த்துக்கிற ஒருத்தியை நான் மிஸ் பண்ணா என்னை போல ஒரு பைத்தியக்காரன் இப்பிரபஞ்சத்தில் இருக்க மாட்டான் ரோஜா

*DO YOU MARRY ME ?*

ப்ளீஸ் ராஜா நான் யாருன்னு தெரிஞ்சா விரும்புன நீங்களே என்னை வெறுத்திடுவீங்க??

நிச்சயமா மாட்டேன்.

மற்ற பெண்களை மாதிரி முழுமையான தாம்பத்திய சுகத்தை என்னாலே தர முடியாது. இவ்வளவு ஏன் என்னால குழந்தை கூட பெத்துக்க முடியாது

*BECAUSE?*

(அவள் அடுத்த வார்த்தை சொல்வதற்கு முன் அவள் வாயை பொத்துகிறான் ராஜா)

ப்ளீஸ் ரோஜா இனிமே நீ எதுவுமே சொல்லத் தேவையில்லை .மற்ற ஆண்களை போல் உடம்புக்காகவோ ,குழந்தை பெத்துக்கவோ உன்னை காதலிக்கலை .உன்னை பிடிச்சிருக்கு அவ்வளவு தான் .நீ யாருன்னு கூட எனக்கு தெரியும் ரோஜா ..

*YOU ARE THE TRANSGENDER*

*BUT ...???*

*I STILL LOVE YOU !!*

இந்த வார்த்தையை இப்ப மட்டுமில்ல எப்பவுமே சொல்லுவேன் ஏன் உன் தோல் சுருங்கி கிழவியா நான் சாகும் போது என் தலைமாட்டுல உட்கார்ந்துக்கிட்டு அழுவியே அப்ப கூட இந்த வார்த்தையை சொல்லுவேண்டி..

இப்ப சொல்லுறேன் உன் மனசுல எழுதி வச்சுக்கோ, மற்ற பெண்களை விட உன்கிட்ட தான் பெண்மையை அதிகமா உணருறேன். உன் சாயல்ல என் அம்மாவின் தாய்மையை உணருறேன். நாம்ம குழந்தை குட்டி எல்லாம் பெத்துக்க வேணாம். கடவுள் கொடுத்த எத்தனையோ செல்வங்கள் அனாதை ஆசிரமத்துல இருக்கு. அவங்கள யாரையாவது தத்து எடுத்துக்கலாம்.

நீங்க என்ன சொன்னாலும் மனசு கேட்கலை, நான், நீங்க ஏத்துக்கிட்டாலும் நம்ம காதலை இந்த சமூகம் ஏத்துக்குமா??

நம்ம உணர்வுகளை சட்டமே புரிஞ்சுக்கிட்டு ஏத்துக்கிடுச்சு ..இந்த மனுசங்க தானே நிச்சயம் ஒரு நாள் காலமாற்றத்தாலே ஏத்துக்கிடுவாங்க

*DO YOU MARRY ME ROJA ???*

ராஜா அப்படி கேட்கவும் ரோஜா இதுவரை தேக்கி வைத்திருந்த காதலை அவள் இதழ்களின் மூலம் மொத்தமாய் முத்தத்தால் பதில் சொன்னாள்!

## துளிப்பாக்கள்

நிறைந்து வழிந்தது
கோவில் உண்டியல்
மக்கள் வேண்டுதல்கள்.

குடிசைக்குள் மழை
கோணிச் சாக்கு
குடிசைவாசிக்கு குடை

முன்னும் பின்னும் போய்
தறி நூல் சோறு போடுகிறது
நெய்யும் நெசவாளிக்கு

அழகிய ரோஜா இதழ்களை
முத்தமிட்டு செல்கிறது
தென்றல்காற்று

ஓவியத்தில் கிளி
பேசிக் கொண்டிருந்தது
குழந்தையின் மனதோடு

**பூ.சுப்ரமணியன்**
பள்ளிக்கரணை,
சென்னை

# உ. பா. சிவகுமார்

கவிதைகள்

## நாணயம்

கடைகளில்
வாங்கிய பொருட்களுக்கு
பணம் தரும்போது
தவறுதலாக கணக்கிட்டு
கடைக்காரர்
மீதிப்பணத்தை
மிகையாகத்
திருப்பியளிக்கையில்
சாத்தான்
சட்டைப் பையில்
பணத்தையமுத்தி
தலைகுனிந்து
அவ்விடத்தை விட்டு
விரைவிலகலச் சொல்லும்
சாத்தானை புறந்தள்ளி
நாணயத்தைத் திருப்பித்
தருவதிலிருக்கிறது நாணயம்
அத்தருணத்தில்
கடைகாரரின் கண்களில்
காணலாம் வியத்தகு கடவுளை

## பெண்ணியம் பேசேல்

இட ஒதுக்கீட்டில்
பாதி எட்டிவிட்டது
பார்க்கும் இடமெங்கும்
பெண்மயமென
அங்கலாய்ப்பவர்களுக்குத்
தெரிவதில்லை
குக்கரில்
வெந்து கொண்டிருக்கும்
பெண்ணியமும்
குரூர விசிலடிக்கும்
ஆணாதிக்கமும்

## சுவர் கடிகாரம்

நல்ல நேரம்
பாராது
கடமையாற்றும்
உயர்ந்தவன்

## உதாசீனம்

உதாசீனப்படுத்த
முடியவில்லை
உதாசீனம் ஏற்படுத்திய
வலியை

## யதார்த்தம்

சுவரோவியம் வரையும்
ஓவியக் கலைஞர்
புத்தரை வரைகிறார்
பாதி ஓவியம்
புத்தரை கண்முன்
நிறுத்துகிறது
மறு பாதி ஓவியத்தில்
புத்தரின் கண்ணை
அவரின் தூரிகையால்
மூடவே முடியவில்லை
பாதியிலே கைவிடப்பட்ட
ஓவியம் பாராட்டுகளை
அள்ளிக் குவிக்கிறது
இவரே யதார்த்த புத்தரென்று

# நான் யார்?..

நான் யார்?..
என்ற வினா
தினம் என்னை
குடைந்து விளையாடுகிறது

காலமாற்றங்கள் போல்
தினம் மாறிக்கொள்ளும்
இயற்கை போல்
என்னுள் பல மாறுதல்கள்
சில போது பிரமிக்கிறேன்
அவ்வப்போது அயர்ந்தும் விடுகிறேன்
நான் யாரென்று
அறிய முற்படும் போதெல்லாம்

கார் மேகம்
கண்ணீர் சிந்தும் தருணங்களில்
துள்ளி விளையாடி கூச்சலிடுகிறேன்
அதே...
அடைமழை
பெரும் வெள்ளமென
உருவெடுக்கையில்
கூட்டத்தோடு கூட்டமாய் ஏசிக்கொள்கிறேன்

மீண்டும்
வெள்ளத்தில் வீடுகள்
மிதந்திடுகையில்
வெயிலை வேண்டுகிறேன்

மழையில்லா உஷ்ணங்களில்
குளிப்பாட்டும் வியர்வையை
பொரிந்தும் தள்ளுகிறேன்

இருப்பதில் திருப்தியில்லை
இல்லாமையை தேடிய பயணம்
நான் யார்?என்பதை
உணர்த்த மறுக்கிறதா?
மறக்கிறதா?
இளைப்பாறத்தான்
இங்கே வந்தேன்
இயல்பு மறந்து
நிலைஇருப்பிடம் தேடுகிறேன்

ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்
புல்மோட்டை, இலங்கை

---

# இயற்கை

தேனமுதை இறைக்கின்ற
    மாமழையோர் வரமே!!
தெம்மாங்கு இசைக்கின்ற
    பூங்குயிலின் சுரமே!!
தென்பாண்டி முத்துக்கள்
    கோர்த்தெடுத்த சரமே!!
தென்றலோடு கைகுலுக்கும்
    இளந்தென்னை மரமே!!

ஆடியாடி அசைந்து வரும்
    நந்தவனத் தேரு!!
ஆழ்கடலில் சங்கமிக்க
    ஆர்ப்பரிக்கும் ஆறு!!
புன்னகையை சிந்துவது
    பூவினத்தின் சீரு!!
மொட்டவிழும் அரும்புகளின்
    நேரம் என்ன கூறு!!

ஆகாய வீதியிலே
    நட்சத்திர கூட்டம்!!
அணியணியாய் சுடர்விட்டு
    விசித்திரம் காட்டும்!!
பருவத்தின் எழுச்சிதனை
    பௌர்ணமி கூட்டும்!!
ஏழு வண்ண உடையணிந்து
    வானவில்லின் ஆட்டம்!!

இலையுதிரும் கிளைகலெல்லாம்
மீண்டும் அங்கே துளிர்க்கும்!!
இரவினிலே புல்நுனியில்
பனித்துளிகள் சிரிக்கும்!!
விடிந்தவுடன் ஓடி ஒளிந்து
தன் முகத்தை மறைக்கும்!!
சூரியனும் சந்திரனும்
தன் கடமை முடிக்கும்!!

அலைகள்கூட கோபங்கொண்டு
கொந்தளித்து அடங்கும்!!
கருவில் வாழும் உயிர்களுக்கும்
உணவு கொண்டு வழங்கும்!!
தேனீக்கள் சேமிப்பது
மருந்தாக விளங்கும்!!
இயற்கையோட சுழற்சியிலே
உலகபந்தின் இயக்கம்!!

**லீ.லியாகத்அலி.**

# சிறு விதையின் கேள்வி?

புவிக்குள்ளே
புதைந்த பிறகும்
தொடர் போராட்டத்தைக்
கையிலெடுத்துப்
பசுந்தளிராக வெளிவரும்
சிறு விதை கேட்கிறது…
புவிக்கு
வெளியே நடமாடும்
ஆறறிவே
வாழ்க்கை பயணத்தில்
போராட
முயற்சி செய்யாமலே
வேரோடு
சாய்கிறாயேயென்று?
விடை சொல்ல முடியாமல்
வெட்கித் தலைகுனிகிறது
நம்பிக்கையில்லா
மனித மனமொன்று!

**பாக்யபாரதி** தருமபுரி

இது ஒரு அழகான, ஆழமான தமிழ் கவிதை. நீ பகிர்ந்திருப்பது ஒரு சிறு விதையின் உவமை மூலம் மனித மனத்தின் பலவீனத்தையும், போராடாத மனநிலையையும் கேள்வி கேட்கும் ஒரு சிந்தனைக்கவிதை.

இதைச் சுருக்கமாகப் புரியவைத்தால்:

♉ விதை என்ன சொல்கிறது

பூமிக்குள் புதைந்து, இருளில், அழுத்தத்தில் இருந்தும்,தன் முழு சக்தியையும் பயன்படுத்தி,போராடி, துளிராக வெளிவருகிறது.

♉ அது மனிதனை கேட்கிறது

♉ நீயோ வெளியில் சுதந்திரமாக நடமாடும் ஆறறிவுடையவன்.

அப்படியிருக்க, வாழ்க்கையில் சிறு சிரமம் வந்தாலே

ஏன் வேரோடு சாய்கிறாய்?

ஏன் முயற்சி செய்யாமல் விடுகிறாய்?”

♉ மனிதனின் நிலை

இந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல்,

நம்பிக்கையற்ற மனித மனம் வெட்கத்துடன் தலைகுனிகிறது.

இந்தக் கவிதை நம்மை நம்மேல் சிந்திக்க வைக்கிறது -

சிறு விதை கூட போராடி வளர்கிறது;

அப்படியிருக்க, நாமோ ஏன் எளிதில் கைவிடுகிறோம் என்று.

நீ விரும்பினால், இந்தக் கவிதையின் பொருள், உணர்வு, அல்லது படமாக்கும் காட்சித் தோற்றம் பற்றியும் பேசலாம்.

# அன்பு மலர்கள்

## இரஜகை நிலவன்

கணேசனும் சாவித்திரியும் இரண்டு பையன்களையும் கூட்டிக் கொண்டு நேராக வக்கில் ஆபீஸிற்கு வந்தனர். வக்கீல் ராஜையா இன்னும் வந்திருக்கவில்லை. குமாஸ்தா ராஜேந்திரன் அவர்கள் அமரச் சொல்லி டீ வாங்கித் தந்தான்.

பையன்கள் இருவரும் அலுவலக வாசலில் நின்று விளையாடிக் கொண்டிருந்தனர். சாவித்திரி வெளியே வந்து குழந்தைகளை அதட்டினாள்.

அப்போது தான் உள்ளே வந்த வக்கீல் ராஜையா, ‘ஸாரி கணேசன் கொஞ்சம் லேட்டாகி விட்டது. ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறீர்களா?‘ என்று கேட்டார்.

‘இல்லை ராஜையா இப்போது தான் வந்தோம்‘ என்றான் கணேசன்.

‘ஒரு நண்பனாக நான் சொன்ன விஷயங்களை யோசித்துப் பார்த்தாயா கணேஷ்‘ வக்கீல் பேப்பர் பார்த்துக் கொண்டே கேட்டார்.

‘ராஜையா இது பற்றி உன்னிடம் நான் நிறையப் பேசி விட் டேன். சாவித்திரியும் கூட ஓரிரு முறை சொல்லியிருக்கிறாள் என்று நினைக்கிறேன். இருவரும் விரும்பி விவாகரத்து வாங்கிக் கொள்ள விரும்பும் போது, திரும்பத் திரும்ப அறிவுரை சொல்லி என்னாகப் போகிறது‘ என்றான் கணேசன் ஜன்னலைப் பார்த்துக் கொண்டே.

வெளியே விளையாடிக் கொண்டிருந்த பையன்கள் உள்ளே ஓடி வர, ’அப்பா அண்ணன் அடிக்கிறான்’ என்று சின்னவன் புகார் சொல்ல பிடிப்பில்லாமல் ஏதோ ’டேய் வீணாகச் சண்டையிடக்கூடாது போய் வெளியே நில்லுங்கள்’ என்றாள் சாவித்திரி.

மூத்த பையன் கணேசனிடம் வந்து, ‘அப்பா ஐஸ்க்ரீம் வாங்க காசு கொடு‘ என்றான்.

கணேசன் பையிலிருந்து பணம் எடுத்துக் கொடுக்க இருவரும் ஐஸ்க்ரீம் வாங்க ஓடினார்கள்.

’நான் இருவரிடமும் தனித்தனியாக கொஞ்சம் பேசலாமா?’ என்று கேட்டார் வக்கீல் ராஜையா.

’நீங்கள் பலமுறை இவ்வாறு பேசியாகி விட்டது வக்கீல் சார். முறைப்படி விவாகரத்திற்கான வழியைப் பாருங்கள்’ என்றாள் சாவித்திரி.

’இல்லை சிஸ்டர். ஒரு குடும்பம் சிதைந்து போவதைப் பற்றி நினைக்கும்போது, அதுவும் என் நண்பன் தனித்து நிற்பதைப் குடும்பம் பார்க்க மிகவும் கஷ்டமாக இருக்கும். அதனால் தான்...’ என்று வக்கீல் ராஜையா சொல்லி முடிப்பதற்குள், ’ஏ ராஜையா வீணாகப் போட்டு உன்னையே குழப்பிக் கொள்ளாதே. ஒரு வக்கீலாக இருந்து எங்களுக்கு விவாகரத்திற்கான முடிவைக் கவனித்து கோர்ட் மூலம் ஒரு நல்ல தீர்ப்பை வாங்கி கொடு போதும்’ என்றான் கணேசன்.

’இதற்கு காரணம் தான் என்ன என்று

நான் தெரிந்து கொள்ளலாமா? என்று கேட்டார் ராஜையா. 'எத்தனை முறை தான் இதைக் கேட்பீர்கள். இருவரும் வேலை செய்கிறோம். நல்ல முறையில் சம்பாதிக்கிறோம். வாழ்க்கையில் இருவருக்குமே பிடிப்பில்லாமல் ஏதோ கடமைக்காக வாழ்கிறோம். இதிலே எதற்காக ஒருவரை எதிர்பார்த்து ஒருவர் உட்கார்ந்து கொண்டு. திடீரென்று பிந்தி வந்தால் ஒருவருக்கொருவர் சந்தேகப்பட்டும் கொண்டு எதற்காக ஜீவனில்லாமல் ஒரு வாழ்க்கை வாழ வேண்டும்'.

'ராஜையா சார். உங்களால் முடியாது என்றால் தெளிவாகச் சொல்லி விடுங்கள். நாங்கள் வேறு யாராவது நல்ல வக்கீலாகப் பார்த்துக் கொள்கிறோம்' என்றாள் சாவித்திரி.

அப்போது தான் ஐஸ்கிரீம் வாங்கிக் கொண்டு உள்ளே வந்த பையன்களை கவனித்த வக்கீல் 'ஆமாம் இவர்களப் பற்றி நினைத்துப் பார்த்தீர்களா?' என்று கேட்டார்.

'அதெல்லாம் தீர்க்கமாக முடிவு செய்தாகி விட்டது. மூத்தவன் என்னிடமும், இளையவன் சாவித்திரியிடமும் வளர வேண்டும் என முடிவாகி விட்டது' என்றான் கணேசன்.

'இந்த குழந்தைகளுக்கு உங்கள் விவாகரத்தைப் பற்றித் தெரியுமா?'

'அது அவசியமானதாகத் தெரியவில்லை' என்றாள் சாவித்திரி.

'வளரக் கூடிய குழந்தைகளுக்கு இது கண்டிப்பாக தெரிய வேண்டும். நான் வேண்டுமானால் கேட்கட்டுமா?'

'வக்கீல் சார், திரும்பத் திரும்ப நீங்கள் விவாகரத்து வேண்டாம் என்பதைத்தான் பேசுகிறீர்கள். இனி நாங்கள் வேறு வக்கீல் பார்த்துக் கொள்வது தான் நல்லது என்று தோன்றுகிறது' எழுந்தாள் சாவித்திரி.

'கொஞ்சம் பொறுமையாக இருங்கள்' என்று வக்கீல் சொல்ல ஐஸ்கிரீம் தின்று முடித்த மூத்த பையன் 'அம்மா துடைத்து விடு' என்று ஓடி வந்தான். அவனுக்கு துடைத்து விடவும் பின்னால் வந்த இளைய பையன் 'அம்மா எனக்கும் ஐஸ்கிரீம் ஒட்டியிருக்கிறது துடைத்து விடுங்கள்' என்றான்.

சாவித்திரி அவனுக்கும் துடைத்து விட திரும்பவும் இருவரும் ஓடி விளையாட ஆரம்பித்தார்கள்.

'இந்த சந்தோஷம் இந்த மகிழ்ச்சியை நீங்கள் பிரித்துக் கொண்டு போகப் பார்க்கிறீர்களா?' என்று கேட்டார் வக்கீல் ராஜையா.

'அது- வந்து- இதைப் பற்றி நான் ஒரு நாளும் யோசித்துப் பார்க்கவில்லை' என்றான் கணேசன்.

'என்ன சாவித்திரி நீங்கள் சொல்லுங்கள். இந்த இளம் பிஞ்சுகளுடைய மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் பாழாக்கித்தான் நீங்கள் விவாகரத்து வாங்கிக் கொள்ள வேண்டுமா? இவர்களுக்காகவாவது சேர்ந்து வாழக்கூடாதா?' என்றார் வக்கீல்.

'ஸாரி வக்கீல் சார். இந்தக் கோணத்தில் நான் யோசித்துப் பார்க்கவில்லை. எனக்கு கணேசன் மேல் எழுந்த வெறுப்பில் விவாகரத்து கிடைத்தால் போதும் என்று எண்ணியிருந்தேன். இனி விவாகரத்தைப் பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் வருகிறோம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் கணேசன்'.

'நீ சொன்னால் சரிதான்' என்று சொன்ன கணேசன் அவளோடு கிளம்பினான்.

வக்கீல் ராஜையா நிறைவோடு புன்னகைத்துக் கொண்டார்



# கவிதை!

கனவது மலர்ந்திடும் களமாம் கவிதை!
கருத்துடன் படைத்திடில் சிறப்பாம் உயர்வாம்!
நனவதில் நடந்திடும் விழைவாம் கவிதை!
நயமுடன் உரைத்திடில் படிப்போர் மகிழ்வர்!
மனத்தினைத் தைத்திடும் வித்தை கவிதை!
மரபுடன் கற்றிடின் சுகமே தருமே!
இனத்தினை மொழியினை இயக்கும் கவிதை!
இயல்பெனப் புரட்சியை விதைக்கும் உலகில்!

இயற்கையின் அழகினை இசைக்கும் கவிதை!
இன்பமும் துன்பமும் கலந்த கலவை!
மயக்கிடும் காதலை உணர்த்தும் கவிதை!
மடமையை எதிர்த்திடும் குரலாய் ஒலிக்கும்!
உயர்ந்திடும் மானிட வளமாம் கவிதை!
உரக்கவே கேட்டிடும் உரிமை தனையே!
செயல்திறன் ஆற்றலைத் தூண்டும் கவிதை!
சீருடன் போற்றிடும் நாட்டுப் பற்றை!

இனிமையை ஈந்திடும் எழிலாம் கவிதை
இயல்புடன் உணர்வினில் கலந்தால் நலமே!
கனியதன் சுவையுடன் திகழும் கவிதை
கனிவுடன் உளமதில் பதிந்தால் நலமே!
நனிபுகழ் விளங்கிட வழங்கும் கவிதை
நாளுமே வாழ்ந்திடும் உலகில் வளமாய்!
இனிவரும் காலமும் பாடும் கவிதை
எழுதிட முயன்றிடு திறனின் களமாய்!

ஓசூர் மணிமேகலை

# வடமுகாக்கினி



## மாத்தளை பெ.வடிவேலன்
மதிப்புறு முனைவர்
(தஞ்சை பல்கலைக்கழகம்)

கிளிநொச்சி "பட்டுப்பூச்சி முகாமிற்கு" சுப்ரமணியம் குடும்பம் அகதியாக அடைக்கலம் தேடி வந்து சேர்ந்து ஒரு மாதகாலம் ஓடிவிட்டது.

உயிர்களைப் பலி கொடுத்து குற்றுயிரும், குலையுருமாக, வீடு, வாசல் இழந்து பரிதவித்து தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு வந்து அகதிகளை மருந்து, உணவு, உடை, தங்குமிட வசதிகள் அனைத்தையும் ஆபத்பாந்த்வர்களாக இயக்கிய இளைஞர்கள் பட்டுப்பூச்சி அகதிகள் முகாமிற்கு கௌரவமாக சூட்டிய பெயர்தான் "நலன்புரி நிலையம்"

கண்ணீர் வடித்து, கதறினிற்கும் குழந்தைகளுக்கு மத்தியில் வீட்டு வேலைக்கு சிறுவன், சிறுமிகள் கிடைப்பார்களா? தோட்டத்தில் வேலை செய்ய, கமத்தில் உழைக்க வாட்டம் சாட்டமான உருப்படிகள் கிடைக்குமா? என்றெல்லாம் வெந்த புண்களில் வேலைப் பாய்ச்சி நப்பாசையில் அகதி முகாம்களை வேடிக்கை பார்க்க வந்த சுயநலமிகளின் மத்தியில் இயைஞர்கள் ஆற்றிய சேவை மனதிற்கு ஆறுதலையும், தைரியத்தையும் அளித்தது.

யாழ் ஏ-9 நெடுஞ்சாலைக்கு சமீபமாக அமைந்த இந்த அகதிகள் முகாமிற்கு இரவோடிரவாக இரண்டு காட்டு மரைகளை வேட்டையாடி விடியற் காலையிலேயே இறைச்சிகளை வழங்கி, "பாவம் நல்ல உணவு எப்போது சாப்பிட்டார்களோ?" என்று நல்ல மனதுடன் கொடுத்துவிட்டு போன இளைஞர்களை யார் எவரென்று விபரம் தெரியாது.

இருப்பினும் இந்த இளைஞர்களின் கட்டளையை மீறவல்லார்யார்?

ஆடிக் கலவரம் முடிய வவுனியா முதல் வடபகுதி எங்கும் கோயில்கள், தேவாலயங்கள் தொட்டு பழைய கட்டிடங்கள், பாடசாலை களிளெல்லாம் அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளனர். உறவினர்களை ஏற்று சுமந்து நிற்கும் குடும்பங்கள் ஏராளம்.

வந்தோரை வரவேற்று வாழவைக்கும் வன்னி நாடு வவுனியா, நலிவுற்று வந்தோருக்கும் நல்வாழ்வு அளிக்கும் கிளிநொச்சி. இல்லங்கள் இல்லாதவர்களுக்கும் நல்வழி காட்டும்

முல்லைத்தீவு. பரந்தபூமியில் மனசும் பரந்து தான் உள்ளது.

சிறகொடிந்தகிளிகளும்நிலக்கிளிகளாக சிறகு விரித்தன.

பனைகளிலும் பனி சொட்டும் விடியற் பொழுது, பெண்களும், குமரர்களும் ஒதுக்குப்புறம் போய்வந்தார்கள்.

ஏ-9 வீதியில் அகதிகளின் கூட்டம் அலைமோதி நிற்கின்றது. நூற்றி ஐம்பத்தி நான்கு பஸ் டிப்போவுக்கு பின்புறமாக அமைந்த அகதி முகாமிற்கு "பொலன்னறுவையை அடுத்து புனானையில் குடியிருந்து வந்து சேர்ந்த சுப்ரமணியத்தின் மைத்துனன் மாரிமுத்து நாலைந்து குடும்பங்களுடன் மூட்டை முடிச்சிகளுடன் செல்வது தெரிகின்றது. கிறிஸ்தவ தேவாலயத்தில் சேர்ந்துவிட வேண்டுமென்ற ஆதங்கத்தின் அவசரம் தெரிகின்றது.

தம்புள்ள கலேவெல பகுதி இவர்களது பூர்வீகமாகும். எழுபத்து ஏழில் ஏற்பட்ட தீத்தளும்புகளுடன் புனானைப் பகுதிக்கு நம்பிக்கையுடன் சென்று குளத்தையொட்டிய காட்டுப்பகுதியில் "குடில்" அமைத்து வாழ்ந்தவர்கள்.

காடுவெட்டி, கழனி திருத்தி மறு வாழ்வுப் பிறப்பை எடுத்த மனிதப் பயிர்களின் புது வாழ்வுக்கு முதல் வேட்டு வைத்தது, கூட்டம் கூட்டமாக வந்து குஞ்சரங்களின் கைவரிசை தான்.

மனிதர்களுக்குப் பயந்து காட்டுப் பகுதியை நாடி அங்கு வாழ்வைத் தேடியவர்களுக்கு இயற்கை அளித்த பரிசு இது.

பகல் பொழுது மறையும் முன்னரே, புதிதாக தலையெடுத்து நிற்கும் இந்த குடிசைகளையும், படிப்படியாக மறைந்து சேனைப்பயிர்களாக பரிண மிக்கும் காட்டுப் பகுதியையும் சுற்றி வந்து துவசம் செய்யும் யானை கூட்டத் தையும் விரட்டியடிக்க முடியாது. புனானையில் மனிதரும், யானையும் நடத்தும் போராட்டம். அறிந்தறிந்தும், "பாகனையே" கொன்று வஞ்சம் தீர்க்கும் சண்டாளமிருகம் யானையல்லவா?

வேல் எறிந்த போதும் வாலை ஆட்டும் நாயும் மிருகம் தானே! நன்றி மறவாத மிருகங்களும் உள்ளனவே!

மனிதன் மனிதனை அவன் வாழ்விடத் திலிருந்து விரட்டியடித்தால், தன் வாழ்விடத்தை அழிக்கும் மனிதனை வனராசிகள் விட்டுவைக்குமா? அவையும் துரத்தியடிக்கும்.

இதில் நியாயம் எந்தப்பக்கம்?

சுப்ரமணியத்தின் குடும்பத்திற்கு மாத்தளையைத் தவிர வேறெந்த இடமும் தெரியாது.

அவன்மூன்று தலைமுறையாக வாழும் இந்த "ஹத்தமுனகால" தோட்டமே. அவனது குடும்பத்தின் சுவர்ண பூமியும் அதுவே. அவனது பாட்டனின் புதைக்குழிக்குப் பக்கத்திலேயே அவனது தாயையும், தந்தை யையும் புதைத்த, மண்மேட்டில் சதா பூக்களை சொரியும் அலரிமரங்களை நாட்டி அடையாளப்படுத்தி வைத்தான்.

தோட்டத்து. இந்த மயான பூமியில் அரிச்சந்திரனோ, சந்திரமதியோ, லோகி தாசனோ சொந்தம் கொண்டாட முடியாது. எந்த நேரத்திலும் தோட்டம் கைமாறினால் புதிய நிர்வாகத்தில்

தரைமட்டமாக்கப்பட்டு ஏதாவது ஒரு புதிய கட்டிடம் தோன்றிவிடும்.

பரம்பரையாக தோட்டங்களில் உழைத்தவர்களுக்கு சாட்சியாக மயான காண்டம் உண்டா? இல்லையே!

தோட்டத்தைச் சுற்றி அடைத்த எட்டுப்பட்டி முட்கம்பிக்கு நடுவில் மனசை திறந்துகாட்டுவதைப் போன்று விசாலமான கறுப்பு நிறத்தில் இரும்புகேட்.

இரவு ஆறு மணிக்கு "வோச்சர்" தாழ்பாள் போட்டுவிட்டால் விடியற் காலையில்தான் தாழ்பாள் திறக்கும்.

இரவில் இடுப்புவலிகண்ட நிறைமாதப் பெண்கள் முதல், வாயை, வயிற்றை வலிக்கும் பெரியோர்கள், மாம்பிஞ்சு மரவள்ளி கிழங்குகள் என்றெல்லாம் பசிக்கு கண்டதை தின்ற வாண்டுகள் வாந்தியெடுத்து, வயிற்றுப்போக்கினால் துடிக்கும் சகலரையும் நேரம் தப்பித் தப்பி இரவில் மணியடிக்கும் காவற்காரனின் தயவுடன்தான் படங்குக்கட்டிலில் கிடத்தி, படுக்கவைத்து கேட்டுக்கு வெளியே கொண்டு செல்ல முடியும்.

நான்கு கிலோமீட்டர் தூரத்திற்கு. சாலையை கடந்துவிட்டால், ஒரு முற்சந்தியை அடையாலாம். அங்கிருந்து அரை கிலோமீட்டருக்கு அப்பால் சென்றால் ஒரு சந்திக்குடியிருப்பை சென்றடையலாம்.

"மடவலைபசார்" என்ற பெயர; பலகை சாய்ந்தும் சரியாதநிலையில் ஆட்காட்டிய நிற்கின்றது.

அதற்குப் பக்கத்தில் பி. டபில்யு. டி. என்ற கொட்டை எழுத்துடன் ஏளெட்டு கிழடு தட்டிய காம்பராக்களில் தமிழ்மொழி கொச்சையாக கேட்கும்.

மூடிய அமைப்பினைக் கொண்ட சமூகம் தோட்டத்து சமூகம் என்ற இலக்கணத்திற்கு பொருள் கூறுவது போல் அமைந்தது

"ஹத்தமுனகால தோட்டம்", தோட்டத்திலிருந்து ஒரு பிடி விளைச்சலை மட்டுமின்றி ஒரு பிடி மண்ணைக் கூட வெளியே கொண்டு செல்ல முடியாது. அத்தனை காவல்.. கட்டுக் காவல். வாழ்வோ, சாவோ அத்தனையும் தோட்டத்திற்கு உள்ளேதான்.

ஒரு "பிள்ளை மடுவம்" கூட இல்லாத தோட்டம் என்றால் வேறு என்ன வசதி தான் இந்த தோட்டத்தில் இருக்குமென்று கற்பனை செய்து பார்க்க முடியுமா?

இரண்டு வருடங்களாக எண்பது வயதில் கை, கால் வீங்கி படுத்த பாயிலேயே மூச்சை விட்ட செல்லாயி அப்பத்தா "கொக்கோ மரத்தில் தொட்டி கட்டி என் புள்ளைகளை மட்டுமல்ல ஊரான் புள்ளைகளையும் வளர்த்தேனே"



என்று பெருமை பேசி மூர்ச்சைவிட்டாளே என்றால் இந்த தோட்டத்தின் பெருமையைப் பேச வேறு ஒரு நற்சாட்சி பத்திரம்தான், வேண்டுமா?

இவ்வாறு இப்பகுதிகளில் அமைந்துள்ள தோட்டங்களில் எண், எழுத்து கற்க "ஒரு வித்தியாமாளிகை" பாடத் திட்டத்தைக் கொண்ட பிள்ளைகள் தோட்டத்துப் பயிர்பச்சை முளைகளைப் பிடுங்கி அழித்துவிடாமல் இருக்க, அடைத்துக்காக்கும் ஒரு தோட்டப் பாட சாலை கூட இல்லை.

இப்பகுதி தோட்டங்களை ஊடறுத்துப் பாயும் அம்பங்கங்கையின் நீரேந்துப்பகுதியில் அமைந்த வரலாறு கூறும் கவுடுப்பளை கிராமத்தில் ஒரு சி.சி தமிழ் வித்தியாலயம் என்ற பெயரில் அமைந்ததுதான் "சேர்ச் ஒப் சிலோன்" என்னும் கிறிஸ்தவ இயக்கம் அமைந்த தமிழ் பாடசாலையாகும்.

பாலர் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை எதுவிதமான வேதனத்தையும் வசூலிக்காமல் வேதனைகளை சுமந்து கொண்டு தோட்டத்துப் பிள்ளைகளுக்கு கல்விக்கண்ணை திறந்து பணியாற்றியது. இந்த பாடசாலையே.

சுமார் முன்னூறு பிள்ளைகள் வரை கற்கும் இப்பாடசாலையில் இரண்டு வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் நால்வரும், ஒரு தலைமை ஆசிரியரும் சொற்ப சம்பளத்தில் அருஞ் சேவையாற்றினார்.

தொழிலுக்காக சைவசமய பெயரை மாற்றி கூடுவிட்டு கூடு பாய்வதை போல தற்பாதுகாப்பைத் தேடிக்கொண்டார்.

ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்து நாலில் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்கும் வரை ஆசிரியர்களின் இந்த "அஞ்ஞானவாசம்" மௌனயுத்தமாக தொடரவே செய்தது. ஆனாலும் பெரும் பாலும் அன்று வடபகுதியிலிருந்து கடமைக்கு வந்த ஆசிரியர்கள் அக்கறை யுடனும், கண்டிப்புடனும் சேவை புரிந்தனர். கிறிஸ்தவ இயக்கத்தின் மேற்பார்வை மட்டுமல்ல கண்டிப்பும் கூடத்தான்.

இவர்கள் மத்தியில் இன்றும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் இல்லாமல் தவிக்கும் வன்செயல் காலக் குழந்தைகளிடம் வைத்திய சாலையில் குழந்தை பிறந்தவுடன் இலவசமாக வழங்கும் சுருக்க பிரதியை நிராகரித்து "பெரிய பிறப்புச்சாட்சிப் பத்திரம் கொண்டுவா. இல்லாவிட்டால் வராதே" என்று துரத்தியடிக்கும் அதிபர் களின் வரலாற்றில் "டொனேசன்" இல்லாது விட்டால் "அட்மிசன்" கிடையாது என்று இலவசக்கல்வியின் மாண்பை கல்வித்தந்தை கண்ணங்கராவின் திருவுருவப் படத் திற்கு கீழே அமர்ந்து, ஞான உபதேசம் செய்யும், கல்வியாளர்களுக்கு மத்தி யில் அளவெட்டி தியாகராஜா, நீர் கொழும்பு, முன்னக்கரை வின்சரின் பெரேரா, புங்குடுதீவு பரமானந்தம் ஆசிரியர் போன்றவர்களின் சேவை அன்று கிடைக்காமல் இருந்திருந்தால், கவுடுப்பளை பகுதியில் வாழ்ந்தவர்கள் இன்று கொழும்பு முதல் இலண்டன் வரை ஊடகவியலாளர்களும், அதிபர், ஆசிரியர்களாவும், கல்விமான்களாகவும் கொடிகட்டி பறக்க முடியுமா?

அன்று பாடசாலைகளுக்கு இலவ சமாக வழங்கிய "கெயர் மில்க்" பாலை யும், "பனிசையும்" மாலை நேர வகுப்புக்களில் பட்டினியாக கல்விகற்கும் மாணவர்களுக்கு வழங்கி பரீட்சையில்

சித்தியடையச் செய்ய அதிபர் வின்டரின் பெரேரா ஆசிரியர் மட்டுமல்ல வழி காட்டிய தெய்வமும் ஆகும்.

வாழ்க்கைச் சக்கரம் சுழன்றது.

ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்த பரமானந்தம் ஆசிரியருக்கு மாத்தளை மாவட்டத்திலுள்ள கவுடு பெலல்ல சி.சி தமிழ் வித்தியாலத்திற்கு இடமாற்றம் கிடைத்தது. அவருடைய இரண்டு பிள்ளைகளையும் தன்னுடனே கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்.

பரமானந்தம் ஆசிரியர் பாடசாலை யின் எதுவித வசதிகளும்மற்ற ஒரு ஒதுக்குப்புறத்தில் அமைந்த சிறிய வீட்டில் வசித்தார். இரண்டு ஆண் பிள்ளைகளில் மூத்தவர் அம்பிகைபாலன், கடைக்குட்டி ஜெயபாலன்.

இளையவன் ஜெயபாலன் தன் தாயை சதா நினைத்து, நினைத்து அழுது தேடிக் கொண்டிருக்கும் பிஞ்சுவயசு.

பரமானந்தம்;; ஆசிரியர் பலாலி ஆசிரியர் கலாசாலையில் கற்றுக் கொண்டி ருந்த வேளையில் இவரது மனைவிக்கு "மஞ்சள்காமாலை" நோய் ஏற்பட்டு நோயால் அவதிப்பட்டார் சிறுவர்கள்.

தற்போது சிறுவர்கள் இருவரும் பாலிய வயதை எட்டிவிட்டனர். ஆசிரியர் கலாசாலைபயிற்சியை முடித்துக்கொண்டு, வீடு திரும்பிய பரமாநந்தம் ஆசிரியருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. மனைவி மஞ்சகாமாலை நோயால் பீடிக்கப் பட்டிருந்ததால் திடீரென அன்று இறந்து விட்டாள். இரண்டு ஆண்பிள்ளை களையும் அநாதரவாக விட்டுப் பிரிந்த தாயின் கவலை பிள்ளை களுக்கு. என்ன செய்வது? சந்தோசமான குடும்பம். துக்கசாகரத்தில் மூழ்கியது.

காலப்போக்கில் பரமானந்தம், ஆசிரியரை வேறு ஒரு திருமணம் செய்துக் கொள்ளும் படி உறவினர்கள் வற்புறுத்தி னார்கள். அவர் விடாப்பிடியாக மறுத்து விட்டார். பிள்ளைகளின் நன்மைக் காகவாவது, அவர்களை பராமரிக்க மறுமணம் செய்வது அவசியமானது என்பதை எடுத்துக்கூறிய உறவினர்களின் பேச்சையும் அவர் ஏற்கவில்லை.

"ஹத்தமுனகால" தோட்டத்திலிருந்து வந்த சுப்ரமணியத்தின் இளைய மகன் நல்லதம்பி, ஐந்தாம் வகுப்பில் ஜெய பாலனின் ஒரு வகுப்பு மாணவனானான். காலப்போக்கில் நல்லதம்பியும், ஜெயபால னும் இணைபிரியா நண்பர்களாயினர்.

இக்காலப்பகுதியில் ஐம்பது ஏக்கர் காணி உச்சவரம்பு என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டு, தோட்டங்கள் துண்டாடப்பட்டன. இதனால் பெரும் தொகையாக, கூட்டமாக வாழ்ந்த தொழிலாளர்கள் தம் தொழிலை இழந்த தோடு, பல்வேறு பிரிவுகளாக பிரிக்கப் பட்டு அநாதரவாகினர். தோட்டங் களின் செல்வாக்கும் குறைந்தது. தொழிலா ளர்களின் வலிமையும், பலமும் குன்றியது.

சிறிய தோட்டங்கள் பல கூறுகளாக்கப் பட்டு அங்கு வாழ்ந்த கூலித்தொழி லாளர்கள் தம் வாழ்வாதாரத்தை இழந்து நடுத் தெருவுக்கு வரும் அவலங்களுக்கு உட்படுத்தப்பட்டனர்.

கல்வி கற்கவென பாடசாலைக்கு அனுப்பிய தம் பிள்ளைகளை, பெற்றோர் இடைநிறுத்தி கூலி வேலைகளுக்காக அனுப்பினர்.

பாலர் வகுப்பில் இருபது பிள்ளைகளு

டன் ஆரம்பித்த கல்வி எட்டாம் வகுப்பு முடியும்போது ஐந்து, நாலு பிள்ளைகளென குறைவடைந்து இடையில் கல்வியை விடும் நிலை தோன்றியது.

ஜெயபாலன் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்த "ஹத்தமுனகால" சுப்ரமணியனின் மகன் திடீரென பாடசாலைக்கு சமூக மளிக்கவில்லை. தன் சகதோழனை பிரிந்த ஜெயபாலன் அன்று முதல் உணவில் மனம் கொள்ளாது, தூக்கமின்றி தவித்தான். இவனது சோகத்தை உணர்ந்த பரமாநந்தம் ஆசிரியர் ஜெயபாலனையும் உடன் அழைத்தக் கொண்டு "ஹத்தமுனகால" தோட்டத்திற்குச் சென்று நல்லதம்பியின் தாய் தந்தையரான சுப்ரமணியம், லெட்சுமியிடம் பேசி நல்லதம்பியை தங்களோடு இருக்குப்படியும் அவனை தாமே படிக்கச்செய்வதாகவும் கூறி அழைத்துக் கொண்டு வந்தனர்.

நல்லதம்பி ஜெயபாலனோடு போட்டிப் போட்டுக் கொண்டு நன்றாக படித்தான், ஆளும் வளர்ச்சி கண்டான். மாதத்திற்கு எப்பொழுதாவது ஜெயபாலனுடன் "ஹத்தமுனகால" தோட்டத்திற்கு சென்று தாய், தந்தையரை பார்த்துவிட்டு மாலை யிலேயே திரும்பிவிடுவான்.

இன்னும் இரண்டு வருடங்களே க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு இடைவெளி இருந்தது. இந்தவேலையில் பரமானந்தம் ஆசிரியருக்கு தன் சொந்த ஊருக்கே இடமாற்றம் வந்தது. அவரும் ஜெயபாலனும் நல்லதம்பியை தங்களோடு அழைத்து செல்ல அவனின் பெற்றோரிடம் அனுமதி கேட்டனர். அவர்கள் பிள்ளையை அனுப்ப யோசித்து சொல்வதாக கூறினர். எனினும் இவர்களது வாஞ்சையான அன்பை மறுக்க முடியாமல் பிள்ளையின் கல்வியையும் கருத்திற் கொண்டு உடன்பட்டார்கள்.

பரமானந்தம் ஆசிரியரின் சகோதரன் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் படித்து புவியில் துறையில் சிறப்பு பட்டம் பெற்று அங்கேயே விரிவுரையாளராக பதவி பெற்றார்.

இதன் பின் பரமானந்தம் ஆசிரியரின் மூத்தபையன் அம்பிகைபாலவும் உயர் கல்விக்காக சிறியதந்தை தன்னுடன் பேராதெனைக்கு அழைத்துச் சென்றார்.

கடைக்குட்டியான ஜெயபாலன் மேலும் தனிமையானான், அவனுக்கு அவனுடைய தந்தை மட்டும்தான் துணை. அவர்தான் அவனின் உலகம்.

அம்மா தன்னோடு இருந்திருந்தால் தங்களுடைய வாழ்க்கை எப்படி அமைந் திருக்கும்? ஏன ஏங்கினான், தவித்தான்.

பரமானந்தம் ஆசிரியர் தாய், தந்தை யின்றி தான் வளர்த்த உடன்பிறப்பு சகோதரனான அருமை நாயகம் புவியியல் துறையில் கலாநிதி பட்டம் பெற்றதுடன், தனது தாய் மண்ணான யாழ்ப்பான தீபகத்தை ஆய்வு செய்து, யாழ்ப்பாணம் ஒரு தனி புவியியல் பிரதேசமாகும் என்பதை தனது ஆய்வுகளில் நிறுவினார், என்பதையிட்டு பெருமைகொள்ளும் வேளையில் எதிர்பாராமல் ஏற்பட்ட வாகன விபத்தில் அருமை நாயகம் அவர்கள் இறந்துவிட்டார். குடும்பத்தை காலன் மீண்டும் வாட்டி வதைக்கும் அவலம் ஏற்பட்டது.

பரமானந்தம் ஆசிரியர் கிளிநொச்சி வட்டக்கச்சி வித்தியாத்தில் தனது ஆசிரிய சேவையை முடித்து ஓய்வு பெற்றார். இவ்வேளையில் தான் நாட்டில் எண்பத்து மூன்றில இன வன்செயல் ஏற்பட்டு தென்னிலங்கையில் தமிழர்கள் உயிரையும், உடமைகளையும், சொந்தங்களையும்,

உடன் பிறப்புக்களையும் இழந்து வட பகுதிக்கு அநாதைகளாக துரத்தி யடிக்கப் பட்டனர்.

பரமானந்தம் ஆசிரியரும் ஜெயபால னும் கிளிநொச்சிக்கு அகதிகளாக வந்து சேர்ந்தோரை ஆதரித்தது மட்டுமன்றி, மாத்தளை கவுடுபெலல்லையில் தம்மோடு வாழ்ந்தவர்களையும் சிநேகிதர்களையும் பல நாள்களாக தேடி அழைந்தனர்.

கடைசியில் ஒரு நாள் "பட்டுப் பூச்சிக் கேம்பிற்கு செல்ல" அங்கு நல்லத் தம்பியையும், அவனது குடும்பத்தவர்களை யும் கண்டார்.

ஜெயபாலனுக்கு தன் நண்பன் நல்லதம்பியை கண்ட மகிழ்ச்சியில் திளைத்தான். அகதிமுகாம் வாழ்க்கையில் பலர் நோயுற்றனர் பழக்கமில்லாத சூழல், கவலை, பிரிவு என்பன அவர்களுக்கு பெரும் சவாலாக அமைந்தது.

சந்திப்பின் பின்னர் பரமானந்தம் ஆசிரியர் சுப்ரமணியம் குடும்பத்திற்கு தனக்கு நெருக்கமான ஒருவரிடம் வாடகைக்கு ஒரு வீட்டையும், வேலை செய்ய கமத்தையும், வளர்க்க பால் பசுக்களையும் வாங்கிக் கொடுத்து அங்கேயே குடியமர்த்தினார்.

ஜெயபாலனுடன் வட்டக்கச்சியில் தங்கிய நல்லதம்பியும் ஒன்று சேர்ந்து பல இடங்களுக்கும் சைக்கிளில் சுற்றித்திரிந்து மகிழ்ந்தனர்.

ஆசிரியருக்கு சமீபகாலமாக பல நோய்கள் ஏற்பட்டு துன்பப்பட்டார். நீரிழிவு, இரத்தழுத்தம், மூச்சுத்திணறல் என பல நோய்கள் அவரை வறுத்தியது.

எந்த நோய் அவருக்கு உண்டு என்பதை விட எந்த நோய் அவருக்கு இல்லை என கேட்கும் நிலை ஏற்பட்டது. இன்றோ... நாளையோ என படுக்கையில் சாய்ந்துவிட்டார். எந்த நிமிடம் உயிர்பிரியுமோ என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

தான் இறக்கும் முன்னர் தன் கடைக் குட்டி ஜெயபாலன் திருமணம் செய்து வாழ வேண்டுமென ஆசைப்பட்டார். இதனிடையில் இலண்டனிலிருந்து வந்த நிருபம் ஜெயபாலனை திருமணத்திற்காக உடனே புறப்பட்டு வரும்படி அழைப்பு விடுத்திருந்தது.

அன்றைய நிலையில் வடபகுதி எல்லைக் கோட்டைத்தாண்டி ஒருவர் அதுவும் இளைஞன் இலகுவில் செல்ல முடியுமா? எத்தனை கெடுபிடிகள், எல்லாவற்றுக்கும் முகம் கொடுத்து சமாளிக்க வேண்டுமே! தனக்கு தாயாக, தந்தையாக, ஏன் தன் உலகமாக எல்லாவற்றுக்கும் மேலான தெய்வமாக தனக்காக இளமைக்காலத்தில் மறுமணம் கூட செய்து கொள்ளாமல் காலம் காலமாக கஷ்டப்பட்ட தந்தையின் இறுதி ஆசையையாவது நிறைவேற்ற அவன் கடமைப்பட்டுள்ளான் அல்லவா?

இந்த இக்கட்டான சூழ்நிலையில் வெளிநாடு செல்வது எப்படி? படுக்கையில் சாய்ந்து விட்ட அப்பா. நல்லதம்பியும், ஜெயபாலனும் ஆர அமர யோசித்தார்கள், "நீங்கள் அப்பாவின் ஆசையை மறுக்க வேண்டாம், புறப்படுங்கள். நான் அப்பாவை பார்த்துக்கொள்கின்றேன். உயிர் போனாலும் அவரை விட்டு பிரியமாட்டேன். இது சத்தியம். நான் உங்களுக்காக பிணை நிற்கின்றேன். என்னை பிணையாக வைத்துவிட்டு, "பாஸ்" எடுத்து நீங்கள் இலண்டனுக்கு போங்கள். அப்பாவின் சகோதரியின் மகள் உங்களுக்காக காத்திருக்கிறாள்,

புறப்படுங்கள்" என்றான்.

இதன்பின்பு அவசரமாக நிறைவேற்ற வேண்டிய வேலைகள் அனைத்தும் துரித கதியில் நடைபெற்றன.

"பாஸ்போர்ட்", "வீசா" எல்லாம் பணம் பணம் என்று பார்க்காமல் விட்டெறிய நாள் மாதங்களென இழுத்தடிக்காமல் கையில் வந்து சேர்ந்தன.

ஜெயபாலனுக்காக தன்னை அடையாளம் காட்டி பிணை நின்றான் நல்லதம்பி. ஜெயபாலன் இலண்டன் போய் சேர்ந்து தன் திருமணப்படத்தை அனுப்பிவைத்தான். இதனைப் பார்த்து மகிழ்ச்சியில் பரமாநந்தம் ஆசிரியர் கண்களை மூடிவிட்டார். நல்லதம்பி பிள்ளையாக நின்று இறுதிக் கிரியைகள் முதல் முப்பது நாள்கள் வரை வருட காரியங்களையும், சடங்குகளையும் நிறைவேற்றினான்.

ஜெயபாலன் இல்லாத குறைதான். அந்தக்குறையும் அல்லாமல் நல்லதம்பி பிள்ளைக்கு பிள்ளையாக எல்லா காரியங்களையும் செய்து முடித்தான்.

இலண்டனிலிருந்து இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பார்த்த ஜெயபாலனும், அம்பிகை பாலனும், உறவினர்களும் கவலையிலும் திருப்தி அடைந்தார்கள். நல்லத்தம்பி வாக்குறுதி தவறவில்லை.

நாளுக்கு நாள் நாட்டு நிலமை மோசமடைந்து கொண்டே வந்தது. வடபகுதி யுத்த மேகங்களால் சூழ, எரிகணைகள் மழையாகப் பொழிந்தன. இரு சாராரும் ஏவிய எரிசரங்கள் வடமுகாக்கினியை கக்கிக் கொண்டு வானத்து விண் மீன்களையும் உதிரச்செய்தன.

எஃக்குப் பறவைகள் இரைதேடி சின்னஞ் சிறுசுகளின் உயிரைக்கூட குடித்து கொப்பளித்தன.

இருபக்கமும் பலந்த சேதங்கள், உயிர்பலிகள். சொந்த மண்ணிலேயே அகதிகளாகி உயிர்க்காக "பங்கர் பதுங்கு குழிகளில்" நாளும், பொழுதும் மறைந்து வாழும் கொடுமை.

என்று முடியும் இந்த போர்க்களம்? என்று எங்கித் தவிக்கும் உள்ளங்கள்.

ஒரு நாள் சில இளைஞர்கள் சைக்கிளில் வந்து நல்லதம்பியை ஏற்றிக் கொண்டு சென்றார்கள். அவன் தன்னைவிட்டு வெளிநாடு செல்லும் போது ஜெயபாலன் நினைவு பரிசாகக் கொடுத்த வெள்ளிச் சங்கிலியோடு கூடிய ஒரு பதக்கத்தையும் வலது கையில் அணிந்திருந்தான். அந்த பதக்கத்தில் "நட்பின பரிசு" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

சில வருடங்கள் பல ஓடி மறைந்தன, யுத்த மேகங்கள் களைந்தன, வடக்கு, கிழக்கு எங்கும் பாதைகள் சீரடைந்தன, இலண்டனிலிருந்து குடும்பத்தோடு திரும்பிய ஜெயபாலன் கிளிநொச்சி முதல் வடபகுதியெங்கும் நல்லதம்பியையும் அவன் குடும்பத்தையும் தேடினான். கனகராயன் குளத்தில் அவர்களது உறவினர் இல்லத்தில் ஒப்படைத்த நல்லதம்பியின் குடும்பத்தினர் யுத்தத்தில் உயிர் தப்பி பிழைத்தோர் தமிழகம் சென்றதாக தகவல் கிடைத்தது.

ஜெயபாலன் புதுக்குடியிருப்பு உமையாள்புரம் ஓட்டிசுட்டான், மாங்குளம், ஓமந்தை, மன்னார் அத்துடன் சவகிடங்குகள் தோண்டும் இடங்கள் எங்கும் தேடினான். தானும் தனியே பள்ளங்கள், பதுங்கு குழிகள்

ஆழமான இடங்களை தோண்டித் தோண்டி தேடினான். எங்கெல்லாம் புதைகுழிகள் தென்டப்பட்டனவோ அங்கெள்ளாம் சென்று நண்பரை தேடி அழுதான். ம்…..ம்.. எப்படி காண்பது? தடையம் என்ன?

ஒருநாள் நந்திக்கடல் பகுதியில் ஒரு பள்ளத்தில் தோண்டிப்பார்க்க வேண்டு மென்ற ஆவல் ஏற்பட்டது. தோண்டினால் நல்ல தம்பி கிடைப்பானா?

தான் கண்ட அந்த குழியை விடா முயற்சியாகத் தோண்டினான். சில அடிகள் தோண்டினான். முழங்கால் ஆழத்துக்கு பின்னே எலும்புகள், மண்டையோடுகள் தெரிந்தன. களைப்படையாமல் தோண்டி னான் வியர்வை முத்துக்கள் சிந்தின. சிதலமடைந்த மண்டையோடுகள், எலும்புகள் முறிந்து எரிந்து கிடந்தன. பலபேர்களின் எலும்புக்கூடுகளாக இருக்கலாம்.

மீண்டும் நல்லதம்பியை தேடினான். ஜெயபாலன் கண்ணீர் சொரிந்தபடியே பள்ளத்தைத் தோண்டி மண்ணைக் கிளறினான். அழுதபடியே தொடர்ந்தும் தோண்டினான். ஆம் பல எலும்புகளுக்கு மத்தியில் முன்கை எலும்புகள் ஒடிந்து நொறுங்கியிருந்தன. அந்த மணிக்கட்டில் வெள்ளி செயினும் அவன் நல்லதம்பிக்கு நினைவு பரிசாகக் கொடுத்த பதக்கமும் கருகிப்போய் இருந்தது. அவன் கையில் எடுத்து ஒற்றிக் கொண்டான். அவன் கண்கள் பனித்தன.

அவன் கையில் எடுத்து அந்த பதக்கத்தி லுள்ள கரியை தேய்த்து நீக்கிய போது “நட்பின்பரிசு” என்ற வாசகம் தெளிவாகத் தெரிந்தது. நல்லத்தம்பியின் உள்ளமும் அதில் ஸ்படிமமாகப் புலப்பட்டது.

தன்முனைச் சரம்

# தலைவன்

கொக்கரிக்கும் தலைவன்
சொக்க வைக்கும் ஆட்டம்
கொந்தளிக்கும் தொண்டன்
ஆட்டு மந்தை கூட்டம்

கூத்தாடி ஆட்டம்
கூடிவரும் கூட்டம்
என்னவானாலும் ஆகட்டும்
தலைவனை பார்த்தே ஆகவேண்டும்

தலைவனைக் கண்டதும்
உற்சாக அலை
தங்கரிப்பார் எவருமின்றி
ஓங்கரிக்கும் கூட்டம்

எண்ணம் எதுவுமின்றி
எண்ணாதது எல்லாம் நடந்தது
தன் போக்கில்
தொண்டன் மடிந்ததும்

மயக்கம் முடிந்தது
தயக்கம் வந்தது
பயம் வந்தது.
மரணம் வென்றது

நடக்காது இது
இனி ஒரு போதும்
மனிதர்க்கு வேண்டாமா
தன் புத்தி

சசிகலா விஸ்வநாதன்

# இதுதாண்டா காதல்

லி .நௌஷாத் கான்



டே மச்சான் பிரியா உன்கிட்ட முக்கிய மான விஷயம் பேசணும்னு கூப்பிட்டு இருக்கா போலிருக்கே என்னவா இருக்கும் யோசிச்சியா ?

அட போடா இவ வேற என்ன சொல்லப்போறா ?

வசந்த் நம்ம காதல் எங்க அம்மா ,அப்பாவுக்கு தெரிஞ்சு போச்சு, என்னை உன் வீட்டு ஆளுங்களை கொண்டு வந்து முறைப்படி பொண்ணு கேட்டு கல்யாணம் பண்ணிக்கோன்னு மத்த பொண்ணுங்க மாதிரி கூவ போறா

இது எனக்கென்ன புதுசா,மத்த பொண்ணுங்களுக்கு டிமிக்கி கொடுத்து டாட்டா காட்டுன மாதிரி இவளுக்கும் டாட்டாகாட்டிட்டு அல்வா கொடுத்திட்டு என் வேலைய பார்த்துக்கிட்டு போயிட வேண்டியது தான் .

டே மச்சான் பிரியா மத்த பொண்ணுங்க மாதிரி இல்லடா, உன் மேல ரொம்ப உசுரா இருக்கா, மத்த பொண்ணுங்க மாதிரி இந்த காதல் விஷயத்தை கேஷுவலா எடுத்துக்கிட்டு போவ மாட்டா ..

கண்டிப்பா என்னை கல்யாணம் பண்ணிக்கோன்னு உனக்கு நிச்சயம் நெருக்கடி கொடுப்பா

அட போடா, எந்தெந்த விசயத்துக்கு எப்படி ரியாக்ட் பண்ணனும்னு எனக்கு தெரியும். நான் என்ன அவளோட ரூம் போட்டு மேட்டர் முடிச்சேனா .ஜஸ்ட் டைம் பாஸுக்கு லவ்வுன்னு பிட்டை போட்டேன். மிஞ்சி மிஞ்சி போனா தியேட்டர் அழைச்சிட்டு போய் மேல கை போட்டு இருப்பேன். அவ கிஸ்ஸு அடிக்க கூட விடலை மச்சான், எது செய்ய போனாலும் கல்யாணத்துக்கு அப்புறம், அப்புறம்ன்னு செம சீன் போடுவா, இதுக்காக எல்லாம் நான் கல்யாணம் பண்ணனும்னா நானெல்லாம் எத்தனை கல்யாணம் பண்ணனும் மச்சான்.

டே வசந்த் எனக்கென்னவோ நீ தப்பு பண்ணுறியோன்னு தோணுது மச்சான். ஒரு பொண்ணோட உடம்பை கெடுக்குறது மட்டும் பாவமல்ல, மனசை கெடுக்குறதும் பாவம் தான் .

டே, டே மச்சான் ஓவரா நீயும் சீன் போட்டு பேசாதே, நாமெல்லாம் அரிச்சந்திரன் வீட்டுக்கு பக்கத்துலயா குடி இருக்கோம். இப்படி நல்லவன் மாதிரி

பேசுறதுக்கு .நான் பார்த்துக்கிறேன்டா. அவகிட்ட எப்படி பேசணும், எப்படி கழட்டி விடணும்னு எனக்கு தெரியும்.

நான் பார்த்துக்கிறேன் என்று சொல்லி பிரியாவை பார்க்க சென்றான் வசந்த்.

வசந்த் வீட்டுல ரொம்ப நெருக்கடி கொடுக்குறாங்க, படிச்சதெல்லாம் போதும் நீ நினைச்ச மாதிரியே P.G யும் முடிச்சிட்ட, இதுக்கப்புறமும் படிப்பு, படிப்புன்னு உன் கல்யாணத்தை தள்ளி போட வேணாம்மா, பொம்பள புள்ளைய வேலைக்கு அனுப்பி சாப்பிடுற எண்ணமும் எங்களுக்கு இல்லை. இப்போதைக்கு எங்களோட ஒரே கடமை உனக்கு நல்ல படியா கல்யாணம் பண்ணி வைக்குறதுன்னு சொல்றாங்கடா

டே வசந்த் உன்ன தாண்டா மலை போல நம்பி இருக்கேன். உங்க அப்பா, அம்மா கிட்ட சொல்லி சம்மதம் வாங்கி முறைப்படி எங்க வீட்டுல வந்து பேசுடா ..

இங்க பாரு பிரியா எங்க அப்பா ஹார்ட் பேஷண்ட், நம்ம காதல் விஷயத்தை அவர் உடம்பு இருக்கிற இந்த நிலைமையில சொன்னா கண்டிப்பா அவருக்கு ஏதாவது ஆயிடும். உனக்கு அவசரம்ன்னா உங்க வீட்டுல பார்க்கிற பையனை பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ, எந்த நிலைமை யிலும் உன்னை வந்து டிஸ்டார்ப் பண்ண மாட்டேன். எத்தனை லவ் பண்ணுற காதலர்கள் நிஜ வாழ்க்கையில் சேர்ந்து இருக்காங்க சொல்லுங்க. இங்கே முக்கால்வாசி பேருடைய காதல் தோத்து தான் போகுது. இப்போதைக்கு நடக்காத விஷயத்துக்காக பீல் பண்ணி நம்ம குடும்பத்தோட நிலைமையை நாமளே சீரழிக்க வேண்டாம் பிரியா .

காதல் கல்யாணத்துல முடியனும்னு ஒன்னும் அவசியமில்லை..

நீ படிச்ச பொண்ணு பிராக்டிக்கலா முடிவு பண்ணு.

இங்க பாரு வசந்த், உன்னை லவ் பண்ணும் போதே நீ தான் என் புருஷன்னு முடிவு பண்ணிட்டேன். சில பொண்ணுங்க மாதிரி மனசை ஒருத்தன்கிட்டயும் ,உடம்ப ஒருத்தன்கிட்டயும் கொடுக்க மாட்டேன். என் மனசு, உடம்பு எல்லாமும் உனக்கு தான் சொந்தம். நல்ல முடிவா சொல்லு.

உனக்காக இன்னும் ஒரு வாரம் காத்திருப்பேன், சரியான முடிவை நீ சொல்லலைன்னா எனக்கான முடிவை நானே தேர்ந்தெடுத்துப்பேன்.

ஒகே வசந்த்.. நீ நல்ல பதிலை சொல்லு வேன்னு நம்புறேன் என்று சொல்லி விட்டு சென்றாள் பிரியா.

ட்ரிங் ட்ரிங்

டே மச்சான் நான் தாண்டா வசந்த், நான் நல்ல பதிலை சொல்லலேன்னா இவ தற்கொலை பண்ணிப்பாளாம் அதுவும் எனக்கு எந்த விதத்துலயும் கெட்ட பேர் வராத மாதிரி செத்து போவாளாம். எவ்வளவு பேரை பார்த்திருப்பேன் மச்சான். ஸிம்பதிக் ஏற்படுத்தி கல்யாணம் பண்ணலாம்னு நினைக்குறா சதிகாரி, என்கிட்டே நடக்குமா என்ன ?

டே மச்சான் பாவம்டா அந்த பொண்ணு கல்யாணம் பண்ணிக்கோ, உன்னை உண்மையா லவ் பண்ணுறா அவளை கட்டிக்கிட்டா உன் வாழ்க்கை நல்லா இருக்கும் .

அப்போது அவன் அம்மாவிடம் இருந்து அழைப்பு வந்தது டே மச்சான்

அம்மா போன் பண்றாங்க அவங்ககிட்ட பேசிட்டு அப்புறமா போன் செய்யுறேன் என்று சொல்லி நண்பனின் அழைப்பை கட் செய்து விட்டு அம்மாவின் தொலைபேசி அழைப்பை எடுத்தான்.

அம்மா

டே வசந்த் அப்பா நெஞ்சை பிடிச்சுக் கிட்டு வலிக்குதுன்னு கத்திக்கிட்டே கீழே மயங்கி விழுந்துட்டாருடா ,அவசரத்துக்கு பக்கத்து வீட்டு கேசவன் தம்பிய துணைக்கு அழைச்சுக்கிட்டு வந்து அன்பு ஹாஸ்பிட்டல்ல சேர்த்து இருக்கோம்ப்பா, நீ சீக்கிரம் ஹாஸ்பிட்டலுக்கு வாப்பா என்று சொல்லி அம்மா போனை வைத்தாள்.

பைக்கை ஸ்டார்ட் செய்து வேகமாக ஒரு வழியாக ஹாஸ்பிட்டலுக்கு வந்தடைந்தேன்.

அம்மாவை அழுத கண்களோடு அந்த நிலையில் பார்க்கவும் மனசு ஒரு மாதிரி இருந்தது.

டே வசந்த் அப்பாவ போய் பாருடா, எப்ப பாரு துறு துறுன்னு இருந்த மனுஷன் இப்படி ஐ. சி. யு ல மூக்குல டியூப் சொருகி பார்க்கிறப்ப என் உசுரே நின்னு போற மாதிரி இருக்குடா, என் உசுர எடுத்துக்கிட்டாவது அந்த கண்ணு இல்லாத ஆண்டவன் அந்த மனுஷனுக்கு நீண்ட ஆயுசை தரணும்.

அம்மா அழாதம்மா, அப்பாவுக்கு ஒண்ணும் ஆவாது. நான் போய் பார்த்திட்டு வர்றேன். நீ முதல்ல போய் சாப்பிடு, ஏன்னா நீ பசி தாங்க மாட்ட.

அந்த மனுஷன் இந்த நிலைமையில இருக்கிறப்ப எனக்கு சாப்பாடு ஒரு கேடு, அவரு நல்ல படியா எழுந்து வந்தா தான் இந்த தொண்டையில பச்சை தண்ணி கூட இறங்கும்.

சரிம்மா மனசை போட்டு குழப்பிக்காத அப்பாவுக்கு ஒண்ணும் ஆகாது. நான் போய் பார்த்திட்டு வந்திடுறேன். நீ இங்கேயே இருன்னு சொல்லிட்டு மருத்துவரை பார்க்க சென்றான் வசந்த்.

டாக்டர் எங்க அப்பா ராமசாமி எப்படி இருக்கார்.

மைல்டா அட்டாக் வந்து இருக்கு, வயசானவர்ல அதான் அவர் உடல்நிலை ரொம்ப வீக்காக்கி மயங்கி விழுந்து இருக்கார் இப்ப ஆபத்து கட்டத்தை எல்லாம் தாண்டி நல்ல இருக்கார், இருந்தாலும் ரெண்டு நாளைக்கு அவர் ஐ.சி.யு ல தான் இருக்கணும். கண் முழிச்சதும் போய் பாருங்க, நான் எழுதி கொடுக்கிற மாத்திரைய வேலாவேலைக்கு கொடுங்க என்று சொல்லி விட்டு டாக்டர் சென்றார்.

மருத்துவர் மற்றும் நர்ஸ் அனுமதியுடன் ஐ.சி.யு க்கு சென்றேன். உள்ளே சென்ற நான் அப்பா என்றேன் என் குரல் கேட்டதும் கண் விழிக்க கூட தெம்பு இல்லாமல் ரொம்ப ஸ்ட்ரைன் செய்து கண் விழித்து பார்த்தார். அந்த அரை குறை பார்வையிலும் ஒரு மூக்கில் டியூப் சொருக பட்ட நிலையிலும் குளறி, குளறி பேச தொடங்கினார்.

டே வசந்த் அம்மா பசி தாங்க மாட், வேளாவேளைக்கு சாப்பிடலைன்னா அவளுக்கு மயக்கம் வேற வரும் லோ பிரஷர் வேற இருக்கு. முதல்ல அவளுக்கு சாப்பாட்டை வாங்கி கொடுத்து, அவள கூட இருந்து சாப்பிட வச்சு மாத்திரையை கொடுத்திட்டு வான்னு சொன்னார்.

அங்குள்ள நர்ஸ் சார் ரொம்ப ஸ்ட்ரைன் பண்ணி பேசாதீங்க. ப்ளீஸ் சீக்கிரம் இங்கேயிருந்து போங்க அவர் ஸ்ட்ரைன் பண்ணி பேசுன்னா அவர் உடல்நிலைக்கு ஆகாது என்று சொல்லி அவனை வெளியே அனுப்பினர்.

இந்த தள்ளாத வயதிலும் அப்பா, அம்மாவின் உண்மை யான காதலை உணர்ந்தான் வசந்த். இப்படி பட்ட அப்பா, அம்மாவுக்கு மகனாய் பிறந்த நாம் இப்படி செய்யலாமா என்று முதன் முதலாய் மனம் வருந்தினான்.

மூன்று தினங்களுக்கு பிறகு

ட்ரிங்.. ட்ரிங்

ஹலோ பிரியா நான் வசந்த் பேசுறேன்.. அப்பா, அம்மாவுக்கு நம்ம காதலை சொல்லிட்டேன் அவங்களும் ஓகே சொல்லிட்டாங்க. நாளைக்கு புதன் கிழமையாம், பொண்ணு கிடைச்சாலும் புதன் கிடைக்காதாம் ரொம்ப நல்ல நாள் வேறயாம் அதனால நாளைக்கு உன்னை பொண்ணு பார்க்க வர்றோம் உங்க வீட்டிலும் சொல்லிடுன்னு போனை வைத்தான் ..

# மனதோடு உறவாடும் துளிப்பாக்கள் !

● இது யார் போட்டப் பாதை
வளைந்து நெளிந்தாலும்
ஊருக்கு வழிகாட்டுகிறது

● கிழக்கு நோக்கி ஓடும் நதிக்குள்
ரகசியமாய் ஓர் அரவணைப்பு
கடலின் கைகள்



● மனதில் யார் யாரோ
ஊஞ்சல் கட்டி ஆடுகிறார்கள்
கோயில் திருவிழாவில்

● கை மீது கோலமிடும்
சித்திரம் வரையத் தேடுகிறேன்
‘ சவ்வு மிட்டாய் ‘ விற்பவன்

● தடயம் கூட இல்லை
நினைவுகள் மட்டும் அப்படியே
எனது ஆரம்பப் பள்ளி

● செல்லரித்த சின்னாளப்பட்டிச் சேலை
இன்றும் இரும்புப் பெட்டிக்குள்
அம்மாவின் நினைவுகளோடு

.

கா.ந.கல்யாணசுந்தரம்

டாக்டர் ந. சந்திர மோகன்
MBBS, MD, DPH



# நலம் தரும் மருத்துவம்

## இரத்த சோகை

மானிட உடலில் இரும்புச்சத்துக் குறைபாட்டால் ஏற்படுவது இரத்த சோகை. உடல் முழுவதும் ஆக்ஸிஜனை எடுத்துச் செல்லும் ஆரோக்கிய மாசிவப்பு இரத்த அணுக்கள் குறைவாக இருந்தால் உருவாகும் இந்த இரத்தசோகை நோய்.

இதன் அறிகுறிகளாக இருப்பவை உடல் சோர்வு பலவீனம் மூச்சுத்திணறல், கைகால் வலி, காது இரைச்சல், அடிக்கடி கிருமித் தொற்று ஏற்படுவது, இதயப் பாதிப்பு போன்றவையே.

இதன் வகைகள்

1. பிறவியிலேயே இருப்பது
2. படிப்படியாக உருவாகி வளர்வது

காரணங்கள்

இரும்புச்சத்துக் குறைவு உணவுகள் உணவு எடுக்க முடியாத வறுமை. பட்டினி, குடல் நோய்கள், கல்லீரல் பிரச்சினை, தைராய்டு கோளாறு, சிறுநீரக வியாதிகள், புற்றுநோய்கள்

தினசரி தேவை ...

வளரிளம் பருவம்
- 11 மி.கி ... ஆண்
- 15 மி.கி... பெண்

பெரியவர்கள்
- 8 மி.கி... ஆண்
- 18 மி.கி... பெண்

கர்ப்பிணிகள்
- 27 மி.கி... தினமும்

கண்டுபிடிக்கும் முறை

இரத்த பரிசோதனைகள் செய்ய வேண்டும்

1. Hb பரிசோதனை...
   இரத்த சிகப்பு அணுவின் பெரும்பங்கு இது
2. சிகப்பு அணுக்கள் எண்ணிக்கை
3. முழு இரத்த எண்ணிக்கை (cbc)
4. இரத்த தடவல் முறை (smear)
   நுண்ணோக்கி மூலம் அளவு வடிவம் பார்ப்பது
5. ரெட்டிகுளோசைட் எண்ணிக்கை சிகப்பு
   அணுக்களின் வளராத அணுக்கள் இவை

9 மிகி கீழே Hb இருந்தால் மோசமான இரத்த சோகை. இது தான் மிகவும் கவனித்து சரிசெய்ய வேண்டியது

இரத்த சோகை சரிசெய்ய...

இரும்பு சத்து நிறைந்த உணவுகள், இரும்பு சத்து மாத்திரைகள், ஊசிகள், மோசமான நிலையில் இரத்தம் ஏற்ற வேண்டும்.

இரும்பு சத்து உணவுகள்

அசைவம் ...

இறைச்சி... கோழி, ஆடு, மாடு,
கடல் உணவுகள், கல்லீரல், மண்ணீரல்

சைவம்

காய்கறிகள். எந்த காயை அரிந்தால் கருப்பாக இருக்குமோ அவற்றை உண்ண வேண்டும்.
வாழைக்காய், வாழைத் தண்டு, வாழைப்பூ, கத்திரிக்காய், சுண்டக்காய் போன்றவை.
பச்சை இலை, காய்கறிகள், கீரை வகைகள், முருங்கைக்கீரை, கரிசலாங்கண்ணி கீரை, பொன்னாங்கண்ணி கீரை முளைக்கீரை, அரைக்கீரை, அகத்திக்கீரை போன்றவை

பழங்கள்...

ஆரஞ்சு, எலுமிச்சை, தக்காளி, பெர்ரி பழங்கள், கிவிப்பழம்,

உலர்ந்த பழங்கள்

பேரீச்சம் பழம், அத்திப்பழம், கொட்டைகள், விதைகள் போன்றவை

உணவு சாப்பிட்டதும் காபி டீ ஒயின் போன்றவை குடித்தால் இரும்பு சத்து உறிஞ்சப்படுவதை தடுக்கும்.

மீண்டும் சந்திப்போம் வேறு ஒரு தலைப்பில்

## சிறு விதையின் கேள்வி?

புவிக்குள்ளே
புதைந்த பிறகும்
தொடர் போராட்டத்தைக்
கையிலெடுத்துப்
பசுந்தளிராக வெளிவரும்
சிறு விதை கேட்கிறது...
புவிக்கு
வெளியே நடமாடும்
ஆறறிவே
வாழ்க்கை பயணத்தில்
போராட
முயற்சி செய்யாமலே
வேரோடு
சாய்கிறாயேயென்று?
விடை சொல்ல முடியாமல்
வெட்கித் தலைகுனிகிறது
நம்பிக்கையில்லா
மனித மனமொன்று!

பாக்யபாரதி
தருமபுரி



# கண்ணாடி விம்பங்கள்

**சஹ்னாஸ் பேகம்**
**முதலைப்பாளி, புத்தளம்**

அது காலை நேரம்

குளிர் காற்றில் கூந்தல் கலைந்து, முகத்தில் மோத ,யன்னல் இருக்கையில் இருந்து, தன்னை கடந்து போகும் கட்டிடங்கள், மரங்கள், மனிதர்கள் என வேடிக்கை பார்த்து வந்தாள். சிநேகா! அவள் தோளில் சாய்ந்து பேருந்தில் உள்ளவர்களை வேடிக்கை பார்த்து வந்தாள், நேகா! இவர்களின் இருக்கைக்கு இரண்டு இருக்கை தாண்டி ஒரு சிறுமி இவர்களையே குறுகுறுவென வேடிக்கை பார்த்திருந்தாள் ஒவ்வொரு இருக்கையையும் வேடிக்கை பார்த்து கடைசியாய் அச் சிறுமியை நோக்கிய நேஹா

கண் இமை தூக்கி ‘என்ன?‘

என கேட்டதும் மழலையும் பயத்துடன் தாயின் தோளில் சாய்ந்து விட அதன் செய்கை மங்கைக்கு உற்சாகம் தந்ததும்

எங்கோ! பார்ப்பது போல திரும்பியதும் இவளை பார்த்தாள் மழலை சட்டென்று திரும்பிய நேஹாவை கண்டு எதிர்பாராததால் மழலை

அரண்டு நின்றுவிட

நேஹா! சப்தமாக சிரித்துவிட

சிநேஹா திரும்பி இவளை ஒரு மார்க்கமாக பார்த்துவிட

அக்காவின் தலையை திருப்பி அந்த சிறுமியை பார்க்க வைத்தாள் சிநேஹாவும் அம்மழலை தங்களை குறுகுறுவென ஆராய்ச்சி

பார்வை பார்ப்பதை கண்டு சிரித்துவிட்டாள்.

சிநேஹா! நேஹா! இருவருமே ஒரே உருவ தோற்றம் கொண்டவர்கள் ஒன்று போல இருப்பவர்களை கண்ணாடி விம்பமா? என சந்தேகித்து பார்த்ததோ மழலை

அதில் சில பயணிகளும் இவர்களையே ஆச்சரியமாக பார்த்தார்கள்

இருவருக்கும் மூன்று வருட இடைவெளி இருந்தது

ஆனால் இரட்டையர்களைப் போலவே இருந்தார்கள்

மழலை இறங்கும் இடமும் வந்தது போல அம்மழலையை தூக்கிக்கொண்டு பெண்ணொருவர் இறங்கும் போது இவர்களுக்கு கை அசைத்து சென்றாள் மழலை.

சிநேஹா! நேஹா! சிரித்துக்கொண்டார்கள்

சற்று தொலைவில் அவர்களும் இறங்கிக்கொண்டார்கள்

நேஹா நாளை கெம்பஸ் போவதால் இன்று அவளுக்கு திங்ஸ் கொஞ்சம் எடுத்து போக சொப்பிங் வந்தவர்கள்தான்

தேவையானதுகளை நேஹாவும்,

சிநேஹா! வீட்டுக்கு தேவையானவைகளையும் எடுத்துக்கொண்டாள்.

இருவரும் தேவையானவைகளை எடுத்துக்கொண்டு பக்கத்து பார்க்கில் இருந்து போவது வழக்கம் அதனால் அன்றும் அங்கே செல்ல தயாரானார்கள்

உள்ளே சென்றவர்கள்

எங்கு இருக்கலாமென கண்களால் தேடிட

நேஹா ஒரு இடத்தை கைக்காட்ட

அங்கே சென்று அமர நினைத்த போது அவ்விடத்திற்கு வந்திருந்தார்கள் பர்ஹானாவும் ஜாஸ்மினும்.

'அடி நேஹா!'

'அட பரு!'

என இருவர் சப்தத்தில்

மற்றவர்கள் அவர்களையே பார்த்தார்கள்.

ஜாஸ்மின்

'மா இது என் பிரண்ட் நேஹா'

சிநேஹாக்கா

'இது என் பிரண்ட் பர்ஹானா'

'இவங்க ஜாஸ்மின்'

'இது ஜாஸ்மினின் அம்மா'

'நேஹா உன் அக்காவும் உன்ன போல இருக்காங்களே!'

'என் கண்ணையே நம்ப முடியல!'என்றாள் பர்ஹானா.

'அடி போடி!'

'இதையே எல்லாரும் சொல்லி சொல்லி அழுத்தாச்சு!'

என ஏதேதோ பேசி சிரித்த போது

பர்ஹானா சிநேஹாவை நேஹா என்றும் நேஹாவை சிநேஹா என்றும் பெயர் உரைத்துவிட,

ஜாஸ்மின் மட்டும் பிழையற்றுப் பேசினாள்.

'எப்படி?'

என்று கேட்டபோது

'நேஹா சிரிச்சா கன்னம் குழி விழுது'

'சிநேஹா சிரிச்சா கண்கள் சுருங்குது'

'பேசும் போது நேஹா கை அதிகம் அசைவுகள் தருது'

என சொல்லிவிட

நேஹா சிநேஹா இருவரும்

'என்ன!'

'எங்களாலே எங்க அடையாளத்தை கண்டுக்கொள்ள முடியல!'

'நீங்க கிரேட்!'

என்றார்கள்.

நாம் பேசுற ஒவ்வொரு மனிதருக்கும் முக்கியத்துவம் தந்தாலே போதும். ஆள் அடையாள தொனி மொழி அசைவுகள் என்று எல்லாம் நம்முள் பதிச்சுடும் என்றாள் ஜாஸ்மின்.

சந்திப்பின் தொடக்கத்தில் எதிலோ தொட்டு எதிலோ தொடங்கி எதிலோ நீண்டு முடிவது தானே பேச்சு.

அதன்படி பேச்சுகளில் திருமணத்தை பற்றி பேச்சு தொடங்கியது

சிநேஹாக்கு சொல்வதை புரியாதது போல திணிக்க நினைத்தால் முகத்தில் அடித்தார் போல பேசிவிடுவாள்.

'ஒரு நாள் திடீரென பொண்ணு பார்க்க வந்திருந்தார்கள்'

'பெற்றோருடன் இருப்பது போலவும் தூரமாக இல்லாத மாப்பிள்ளை கேட்டிருந்தேன்'

'பணக்கார மாப்பிள்ளையை கூட்டி வந்ததால் கோபம் வந்தது!'

'ஏழையாயினும் உழைத்து திண்ணும் வாழ்க்கை துணை கிடைத்தால் போதும்'

'அப்படி இல்லை என்றால் துணை வேண்டாமே!'

'இவ்வாறே இருக்கிறேன்!'

'விட்டுவிடுங்கள்!'

என குரல் உயர்த்தி பேசினதற்கு

‘வாயாடி பெண்!‘

என சொல்லி போய்விட்டார்கள்.

நேஹாவோ சொல்ல தொடங்கினாள்.

‘நான் வீட்டுக்கு வந்து அலிப்பில் தூங்கிருந்தேன்‘

‘தூக்கம் களைத்து அம்மா வந்து மாப்பிள் வீட்டிலிருந்து வந்ததாக சொன்னார்‘

‘முகம் கழுவி தலை சீவி நல்ல ட்ரஸ் போட்டு வா!‘

என சொல்ல

நானும் போனேன்.

திடீரென ஒருவர் கேள்வி கேட்டு வைக்க அதற்கு மலங்க மலங்க முழித்தேன் என்று,

‘பெண் ஊமையோ?‘

‘கோழையோ?‘

என சொல்லி போய்விட்டார்கள்.

சிறிது நேரம் மௌனம் தொடர்ந்தது.

அந்த மௌனத்தில் தான் உண்மை தெளிவாகத் தெரிந்தது.

ஒரு பெண் சிரித்தாலும் குறை.

மௌனமாக இருந்தாலும் குறை.

உறுதியாய் பேசினாலும் குறை.

தடுமாறினாலும் குறை.

மனிதர்கள் கண்ணாடியைப் பார்த்து பிம்பம் தேடுவது போல,

பெண்களில் குறைகளைத் தேடிக்கொண்டே இருக்கிறார்கள்.

சிநேகா மெதுவாக சொன்னாள்.

“நம்ம முகம் ஒரே மாதிரி.

ஆனா வாழ்க்கை தேர்ந்தெடுக்குற உரிமையும் நம்ம கிட்ட ஒரே மாதிரியா இருக்கணும்.”

நேஹா அவள் தோளில் சாய்ந்து சிரித்தாள். பார்க்கின் மரங்கள்,

அவர்கள் சிரிப்பை பார்த்துக்கொண்டே நிசப்தமாக இருந்தன.

‘மனிதர்கள் என்ன செய்தாலும் குறை கண்டுபிடிப்பவர்கள் தான்!‘

என விடைபெற்றுக்கொண்டார்கள்.



# கழுவாய்

சுந்தரிமணியன், புதூர்

மாலைவெயிலின் அழகு இளம் மஞ்சளாகவும் பொன் நிறத்தோடும் ஜொலித்துக் கொண்டிருந்தது. குயில்களும் மைனாக்களும் அந்த மருத்துவமனையைச் சுற்றியுள்ள மரங்களின் ஊடே நடைபயின்று கொண்டிருந்தன. மருத்துவமனையின் பின்னாலிருந்த மருத்துவர் ஜெயகார்த்திகாவின் வீட்டில் அவளின் கணவர் “மெதுவா வாக்கிங் போம்மா”என்றார்.

“சரிங்க” என்று கூறிக்கொண்டே எழ முயன்ற ஜெயகார்த்திகாவின் இடது கைள் நடுங்க ஆரம்பித்தன. இருப்பினும் பிரயத்தனப்பட்டு எழுந்த ஜெயகார்த்திகாவுக்கு கைகள் இரண்டும் சுயநினைவிழந்த குழந்தை போல் ஆடின. மெதுவாக நடக்க ஆரம்பித்தாள். அவளது நினைவுகள் முன்னோக்கிப் பறந்து கொண்டிருந்தன. இளம் வயதில் அந்த மருத்துவமனையின் முக்கிய மருத்துவராக வலம்வந்த ஜெயகார்த்திகாவின் எலுமிச்சை நிறத்தின் அழகுக்கு ஏற்ப கறுப்புநிறத்தில் காட்டன் சேலையும் அதற்கு ஏற்றாற்போன்ற தோடும் அணிந்து தேவதையாய் ஜொலித்த அவள் வேகமாய் நடைபயின்று கொண்டிருந்தாள். நர்சுகளை விரைவாய் வேலைவாங்கியதோடு வந்திருக்கும் அந்தக் கல்லூரி மாணவியான பேஷண்டை உள்ளே கூப்பிட்டாள். வந்தவள் அமர்ந்தவுடன்,

“ஏன்பா கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருக்கக்கூடாது. நாலுமாசம் ஆச்சு போலருக்கே. அபார்ஷன்தான் பண்ணனும். மாத்திரையில ஒண்ணும் பண்ணமுடியாது”என்றவுடன் வந்தவளின் முகம் அஷ்டகோணலாய் ஆனது.

“எப்ப மேம் பண்ணலாம்” என்றவுடன்,

“இன்னிக்கே அட்மிட் ஆகுங்க. பண்ணிவிடலாம் ஒரு மணிநேரம்தான். முடிஞ்சதும் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் போய்டலாம். போகும்போது என்னப் பாத்துட்டுப் போய்டுங்க” என்றவுடன், பயத்துடன் எழுந்த மாணவியை நர்சு வந்து பக்கத்து அறைக்கு அழைத்துப்போனாள். கையில் க்ளவுசுடன் பக்கத்து அறைக்கதவைத் திறந்து கொண்டு ஜெயகார்த்திகா உள்ளே போனாள். அன்று மாலை அவளைப் பார்க்க தம்பி விக்னேஷ் வந்திருந்தான்.

“வாடா எப்ப வந்த” என்று அவனைப் பார்த்துச் சிரித்த ஜெயகார்த்திகாவைப் பார்த்து முறைத்தான்.

“உங்கிட்ட எத்தன தடவ சொல்லியிருக்கேன். அபார்ஷன்லாம்



பண்ணாதன்னு. அது நல்லது இல்லக்கா. கருவுலேயே பணத்துக்காக குழந்தைய அழிக்கிறது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா? நீ டாக்டர்கிறதுக்காக என்னவேணா பண்ணுவியா?'' கேள்வி கேட்டவனை நிமிர்ந்து பார்த்த ஜெயா,

"சரிடா இனிமே பண்ணல"

"அப்ப இதுவரைக்கும் பண்ணதெல்லாம் பாவமில்லையா?" என்றவனை விழிவிரியப் பார்த்தவள்,

''சாமிக்கு வேணா அந்தக் காச கொண்டுபோய் உண்டியல்ல போட்டுடவா?" என்றவளை முறைத்தவன் விரைவாய் எழுந்து கோபமாய் வெளியேறிப்போனான்.

ஜெயகார்த்திகாவுக்குப் பழைய நினைவுகளின் சாயலில் மனது ஒரு பக்கம் வலித்தாலும் பழையபடி உற்சாகம் குறைந்துபோன தனது உடலையும் தொய்ந்தநிலையில் தொங்கிய தன் கைகளையும் பார்த்தபோது மனதில் இருந்த சுமை மேலும் அதிகமாவதுபோல் உணர்ந்தாள். தான் செய்த பாவங்களின் விளைவுதான் தனக்கு நரம்புத்தளர்ச்சியால் இப்போதே கைகளை இயக்கமுடியாமல் போனதோ என்ற வலி ஒரு பக்கம் என்றால் பேரனைப் பற்றிய நினைவுகள் எழுந்து மனதின் பாரத்தை மேலும் அதிகமாக்கின.

அவளது மகன் மணிமொழியன் மருத்துவப்படிப்பை முடித்து மருத்துவராகி நல்ல குடும்ப வாழ்க்கையில் அடியெடுத்து வைத்திருந்தான். ஓராண்டுகளுக்குப் பிறகு மருமகள் கருவுற்று ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

குழந்தை பிறந்து ஓராண்டுகள் கடந்த நிலையிலும் குழந்தை பேசவில்லை என்பதால் அவன் அப்பாவைப்போல் ஒன்றரை வயதிலோ, இரண்டு வயதிலோ பேசுவான் என்று இருந்தனர். அதற்குப் பிறகும் பேரப்பிள்ளை வைணவ் ஆ, ஊ என்று சத்தமிட்டானே ஒழிய வாயில் வார்த்தைகள் ஒழுங்குடன் வெளிவரவில்லை. அக்கம்பக்கத்தார்,

"என்ன வீட்ல ரெண்டு டாக்டர் இருந்தும் பயனில்லையே. புள்ளைய பேசவைக்க முடியலையே" என்று பேச ஆரம்பித்தனர். பையனைத் தனக்குத் தெரிந்த குழந்தைகள் டாக்டரிடம் காண்பித்தபோது,

''மணி பையனுக்கு எந்தப் பிரச்சனையும் இல்ல. தானாவே பேசுவான். பொறுமையா இருங்க, பேரண்ட்ஸ் லேட்டா பேசியிருப்பீங்க அதனால கூட இருக்கலாம்"என்றார் மருத்துவர்.

அவன் மூன்று வயதுக்குப் பிறகும் பேசாமல் இருப்பதைப் பார்த்தவுடன் ஜெயகார்த்திகாவும் அவள் கணவன் சரவணனும் நொறுங்கிப்போயினர். ஜெயகார்த்திகாவுக்குத் தான் செய்த பாவத்தின் விளைவுதான் தனது பேரப்பிள்ளை பேசாமல் இயல்பான குழந்தை போல் இல்லையோ என்ற பயம் அடிவயிற்றைப் பிசையச்செய்தது. தனது பேரனைப் பார்க்கும்போதெல்லாம் கருவிலேயே அழிந்து போன சிசுக்களின் உருவங்கள் எல்லாம் கனவுகளில் வந்து போனது மட்டுமல்லாது அவளது மனதின் அமைதியைக் குலைத்துக்கொண்டிருந்தன.

வைணவுக்கு ஐந்து வயதானபோது குழந்தையை எல்.கே.ஜி சேர்க்கவேண்டும் என முயன்றபோது இயல்பான குழந்தைகள் போல் பேசாமல் இருந்தவனைப் பள்ளியில் எப்படிச் சேர்ப்பார்கள் என குழம்பிக் கொண்டிருந்தனர். சரி முயற்சி செய்வோம் என பள்ளிக்கு அழைத்துச் சென்றபோது,



“டெஸ்ட் வைக்கவேண்டும். குழந்தைக்கு ஆனா, ஆவண்ணா தெரியுமா? ஏபிசிடி சொல்வானா?” என்றனர்.

ஒண்ணும் பேசமுடியாமல் கையைப் பிசைந்துகொண்டே வந்த மருமகளின் முகத்தைப் பார்த்தபோது, அவர்களின் துன்பத்திற்குத் தான்தான் காரணமோ என்ற பயம் ஜெயகார்த்திகாவின் மனதில் உதித்தது. இந்த நிலையைப் பார்க்கவா தனது மகன் மணிமொழியனை மருத்துவம் படிக்கவைத்து, திருமணம் செய்து வைத்துப் பேரக்குழந்தையைப் பார்த்தாயிற்று என நிம்மதிப் பெருமூச்சுவிட்டோம் என்றிருந்தது. தனது மகன் மணியின் கவலைதோய்ந்த முகமும் பேரனின் கபடமில்லாத முகமும் அவள் தூக்கத்தைக் கெடுத்தன.

“ஏன்பா நான் ஏன் உயிரோட இருக்கணும்? நம் பிள்ளையும் பேரனும் படுற கஷ்டத்த பாக்கவா? இவ்வளவு பணம் சம்பாத்தியம் பண்ணி என்ன பிரயோசனம்? நிம்மதியான வாழ்க்கை இல்லையே?” என்றபோது அவளது கண்களின் கண்ணீர் கன்னங்களில் இறங்கி வழிந்தது.

“ஜெயா அழாத. பண்ணுனது தப்புதான். இப்படியெல்லாம் நடக்கும்னு நினைச்சா பண்ண. நம்ம தலையெழுத்து இப்படியிருக்கு. அழுதாப்பல எல்லாம் சரியாயிடுமா? வேணும்னா அதற்குப் பரிகாரமா நாம ஏதாவது அநாதைக் குழந்தைகள தத்தெடுத்துப் படிக்கவைப்போமா?” என்றவனைப் பார்த்தவள், முகத்தின் கருமை மறைந்து புதிய வெளிச்சம் படர நிமிர்ந்தவள்,

“நீங்க சொல்றதும் சரிதாம்பா. நாளைக்கே நாம ஏதாவது ஆசிரமம் போகலாம்” என்றவளை ஆச்சரியமாகப் பார்த்த சரவணன்,

“நான் சாதரணமாகத்தான் சொன்னேன். இந்த ஐடியா உனக்குப் பிடிச்சிருக்கா? இன்னிக்கே என்னோட நண்பர் பிரசாத் கிட்ட கேட்கிறேன். நாம போய் குழந்தைகளப் பார்த்து அவங்க படிப்பு, உணவு, துணிமணி கூட வாங்கிக் கொடுப்போம். இதனால் உனக்கு மனநிம்மதியும் நம்ம பேரனுக்குப் பேச்சும் வந்தா எல்லோருக்கும் நிம்மதிதானே” என்றவனைப் பார்த்துப் புன்னகைத்த ஜெயகார்த்திகா,

“நம்ம சொத்தே போனாலும் பரவாயில்லப்பா. போய் அந்தக் குழந்தைகளப் பார்த்தா நமக்கு நிம்மதி வரும்பா” என்றவளைப் பார்த்துச் சரியென்பதுபோல் புன்னகைத்தான்.

ஜெயகார்த்திகாவின் மனதிலிருந்த பாரம் கொஞ்சம் குறைந்து மனம் லேசாவதுபோல் உணர்ந்தாள். இந்தப் புண்ணியத்தால் தனது பேரனின் நிலை மாறும் என்று நம்புவோம் என மனதில் நினைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். ■

# வெண்பாப் போட்டி (பயணம்) 49

**போட்டியின் கால அளவு ஜனவரி 01 முதல் 12 வரை 2026**

இம்மாதப் போட்டி....

.

**தலைப்பு : -**

பண்டிகையின் முக்கியத்துவம்

உப தலைப்புகள் : --

1. மனித நேயம் வளர்க்க
2. ஒற்றுமையை நிலைநாட்ட
3. பண்பாட்டை நினைவுகொள்ள
4. கொண்டாடி மகிழ

அல்லது

5. வேறு காரணங்கள்...

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

.

அசத்துங்கள் கவிஞர்களே...

.

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...

**தளர்வுகள் :-** தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

நன்றி🙏

**பொதுவான விதிகள் :-** ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.

வெண்பாவிற்குக் கீழ் எழுதியவர்கள் தங்கள் பெயரினை தமிழில் எழுதுதல் அவசியம்.

என்றும் தமிழுடன்....

**தமிழ்நெஞ்சம் ஆசிரியர்**

மற்றும்

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

# சிறகுகள் சிறைபடுவதில்லை



குயில்.மு.இர்சியா பேகம்

## 21. சிறகு விரித்தக் கயல்

அதே பெண்ணிடம் அவளுக்கு பதிலும் வந்தது...

கயல் மனதில் புயல் வீசியது.வீட்டில் எல்லோரையும் ஏக்கத்துடன் பார்த்தாள்.இன்று கடைசிநாள்.

தான் பிறந்த ,வளர்ந்த, விளையாடிய இடங்களில் எல்லாம் அமர்ந்தாள் ஏக்கத்துடன். கண்ணீரை கண்ணுக்குள் அடைப்பது அவ்வளவு சுலபமல்ல....

அன்று புதன் கிழமை அம்மாவிடம் நான் வாய்காலில் குளிக்கப்போவதாகச் சொல்லி,தனது நகைகள் அனைத்தையும் கழட்டி தாலித்தவிர ,அகல் வைக்கும் பின்ன மாடத்தில் வைத்துவிட்டு,வாய்க்காலின் படித்துறையில் அமர்ந்தாள்.மீண்டும் மீன்களுடன் பேசினாள் கண்ணில் நீரோடக் கயல்

அந்தப் பெண் வாசுகி வாய்க்காலில் இறங்கி கயலை நோக்கி வந்தாள். கயலின் கையைப்பிடித்து அழைத்துப் போனாள்...

கரைதாண்டி, படி தாண்டிக் கரையேறினாள் கயல்.

காரொன்று காத்திருந்தது.வாழ்நாளில்

கயல் காரில் ஏறியதேயில்லை.தன் வீடு,பாட்டி வீடு, அத்தை வீடு தவிர்த்து எங்கும்



போனதில்லை.காரில் பெரியண்ணி, வாசுகி கயல் மூவரும் பின்சீட்டில்.முன்னால் சந்திரன் டிரைவருடன்....

கயல் அழுதபடி வந்தாள் அண்ணி ஆறுதலுக்காக தட்டிக் கொடுத்தவண்ணம் வந்தார்கள்.

கார் தஞ்சை நோக்கிப் பறந்தது.அது சார்பதிவாளர் அலுவலகத்தில் நின்றது.

சந்திரன் வக்கீல் அல்லவா பால்ய விவாகம் செல்லாது என்றும் தெரியும்.அதனால் தனது திருமணத்தை முறைப்படி ரெஜிஸ்டர் செய்தார்.

கயலின் மாமியார் வீடு எதிர்த்த வீடென்பதால் தேவையில்லாத பதட்டத்தை



நீக்க,பக்கத்தூரில் இருக்கும் தனது அக்காவீட்டிற்கு கயலை அழைத்துப் போக...

அக்கா இல்லை யென்றாலும், அக்காவின் பெண்பிள்ளைகள் மிகவும் அருமையாக கயலைப் பார்த்துக் கொண்டார்கள்.

சந்திரன் மிக மென்மையாக நடந்துக்கொண்டார்.

ஒரு நல்ல நாள் குறித்து எல்லா சடங்குகளும் முறைப்படி நடந்தது.

## 22. சிறியப் பண்ணை

சேதி தெரிந்த சிறியப் பண்ணை சிதறிப் போனார்.

பெரியப் பண்ணை செய்த இரணமே இன்னும் ஆறவில்லை ...

இதனிடையில் தன் இரத்தமே முதுகில் குத்துமென அவர் நினைக்கவில்லை.. துடித்துப் போனார்..

அங்கே நிலைமை இழவு நடந்ததுப் போல் இறுக்கமானது ...

கயல் என்ற பெண் தனக்கு பிறந்ததையே மறக்கமுயன்றனர்..

வீட்டில் அனைவரும் சேர்ந்து கயலை மிக எளிதாக கைக்கழுவிவிட்டனர்.

## 23.முதலிரவு

ஒரு நல்ல நாளில் மூமுடித்து அலங்காரங்கள் எல்லாம் அதி அமர்க்களமாக செய்து பானுமாமி முன் நிறுத்தினர் சந்திரனின் அக்கா மகள்கள்.திருஷ்டி கழித்த மாமி கயலைக் கட்டிக் கொண்டு நெஞ்சு வெடிக்கும் வண்ணம் அழுதார்.

அவங்களுக்கு தம்பின்னா அவ்வளவு பிடிக்கும். தம்பிக்காக தன் கணவரிடம் பேசுவதையே நிறுத்தி விட்டார்.

எப்படி நடந்து இருக்கவேண்டிய சடங்கு இப்படி நடக்கிறதே என்று நினைக்கும் போது அவர்களுக்கு துக்கம் தாங்கவில்லை.

பின்னர் எல்லோரும் சமாதானப் படுத்த கயல் முதலிரவு அறைக்குள் தள்ளப்பட்டாள்..

அங்கு சந்திரன் அவளை அணைத்து அழைத்துச் செல்ல....

அவள் உடம்பில் நடுக்கமும் அழுகையும் அன்னியத் தன்மையும் உணர்ந்த சந்திரன்.நாம் பேசிக் கொண்டு இருப்போமா? என்று சொல்லி அவளிடம் பேச்சுக் கொடுத்து நார்மலாக்க முயன்றார்..

கயல் மிகுந்த துக்கத்திற்கு பிறகு

உங்களை கோவிலில் சந்திக்கும் முன்வரை தங்களையே சுற்றிய மனம் அதற்கு பிறகு ஒரு மாதிரி பேதலித்து விட்டது.இன்று தாங்க முடியாத குற்ற உணர்வு என்னை பிழிந்துக் கொண்டு இருக்கிறது...

எங்கள் வீட்டில் எல்லோரும் சாவு விழுந்ததைப் போன்று அழுது கொண்டு இருப்பார்கள்...

எனக்கு புரிகிறது உன் மனம் சாந்தம் படும்வரை நமக்குள் எதுவும் வேண்டாம் சரியா என்றார்..

கயல் தலையாட்டினாள்.

ஒரு வாரம் கழித்து ஒருநாள் சந்திரன் நாளை நாம் திருக்காட்டுப் பள்ளியில் நடக்கும் மேரேஜ் ரிசப்ஷனுக்குப் போக வேண்டும் தயாராக இரு என்றார்.

கயலும் தயாரானாள்....

பெரிய பந்தல் அழகிய நாகரீக நாரிமணிகள்...

நுனி நாக்கில் ஆங்கிலம் நடமாட பேசினார்கள்.

கயல் தன்னையும் தனது உடையையும் மிக குறைவாக நினைத்து ஒடுங்கினாள்..

அப்போது சந்திரன் ஒரு பெண்ணை அறிமுக படுத்தினார். கயல் இவங்க பேர் நளினா என்னுடன் சட்டம் படித்தவர்.

நீ மாட்டேன் என்று சொல்லி இருந்தால் இவரைத்தான் கைப்பிடித்து இருப்பேன் என்று சொல்லி நகைக்க .. கயல் மனதில் எரிமலை ஒன்று வெடித்துச் சிதறியது..

காரில் திரும்பும் போது சந்திரன் கயல் ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்? என்றார்.

நீங்கள் அந்த நளினாவையே திருமண முடித்து இருக்கலாம்.அவர் எல்லா வகையிலும் தங்களுக்கு பொருத்தமானவர்.

கயல் உனக்குத் தெரியுமா? எனக்கு ஒப்பனைகள் பிடிப்பதில்லை : ஒரிஜினாலிட்டி தான் பிடிக்கும்.

மேலும் எனக்கு குடும்பம் நடத்தத்தான் மனைவி வேண்டும். நாடகமாட இல்லை.

எனக்கு நடிக்க தெரியாது, என்னை உன்னிடமெது கட்டிப் போட்டதென்று சொல்லத் தெரியவில்லை.உனது நீண்ட கூந்தல் முகத்தில் அடிக்க ஓடினாய் அல்லவா கோவிலில்..

அந்த பின்னலால் என்னை உன்னுடன் பிணைத்துவிட்டாய்.. கள்ளி என்று நகைக்க.. கயல் கண்மூடி அவர் தோளில் சாய்ந்தாள்.

## 23.கயலின் குடும்பம்

சந்திரன் ஒரு இளம் வழங்குரைங்கர்,இன்னும் தொழிலில் காலூண்டவில்லை. பெரியப்பண்ணையார் என்றாலும் அது அண்ணன் கையில் இருந்தது.

அண்ணன் ஆனந்தன் சட்டம் படித்துவிட்டு மேஜிஸ்ரேட் ஆகிவிட்டார். அரசு உத்தியோகம் என்பதால் ஊர் ஊராகப் போய்க்கொண்டிருந்தார்.

சந்திரன் நிரந்தரச் சம்பாத்தியத்திற்கு வழித்தேட வேண்டும். ஓகோ என்றில்லையானாலும்

ஓரளவு வருமானம் வக்கில் தொழிலில் வரத்தான் செய்தது.

பானு தன் மருமகளை மகளாகப் பார்த்தார். ஒன்றுமில்லாமல் வந்த மருமகளுக்கு தான் சேர்த்துவைத்த சிறுவாட்டில் சிறுக சிறுக நகை செய்துப் போட்டார்.

மற்ற மருமகள்கள் எல்லாம் பெரிய இடத்து பெண்கள், நிறைய சீதனத்துடன் வந்திருந்தார்கள்..சுற்றி உள்ளவர்கள் தூபம் போட, பிரச்சனைகள் பெரிதானது,பிரிவு வந்தது.

## 24.கயலின் ஏக்கம்

சந்திரன் கேஸ் கேஸ் என்று அலைய



ஆரம்பித்துவிட்டார். சில நாட்கள் வெளியூரில் தங்க ஆரம்பித்தார்.

கயல் மிகவும் தனிமைப் படுத்தப்பட்டாள். எதிர்த்த வீட்டில் பெற்றோர்கள் இருந்தும் அவளைப் பேணவில்லை. மாமியார் தவிர்த்து அன்பானவர்கள் யாருமில்லை கயலுக்கு!

கயலுக்கு தன்வீட்டாரைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கம் திங்க ஆரம்பித்தது.

கயலுக்கு ஞாபகம் பின்னோக்கிப் போனது.,வாய்க்காலும்,மீன்களும்,தம்பித் தங்கைகள், கூட்டாஞ் சோறு எல்லாம் அவளைத் துரத்த ஆரம்பித்தது.

அந்தக்கால கூட்டுக் குடும்பத்தில் சந்திரனை இரவில் மட்டுமே கயலால் சந்திக்க முடிந்தது.

அந்த சந்திரனும் இரவில்தான் வருவார் இந்தச் சந்திரனும் அப்படித்தான்.

சிலநாள் வெளியூரில் சந்திரனுக்குத் தங்க நேர்ந்தது.அன்றெல்லாம் கயலுக்கு அமாவாசை இருட்டுத்தான்.

கயலுக்கு நாட்கள் தள்ளிப் போனது....

கர்ப்பமான கயல் அம்மா கேள்விப்பட்டுத் தன்னை வந்துப் பார்ப்பார் என்று நினைத்தாள்... எதிர்பார்த்தாள்... ஏமாந்தாள்....

ஏக்கம் ஏகாந்தம் ஏற்றிய சுமை ஏந்திழையை ஏகமாக காயமடைந்த வைத்தது.

தாளமுடியாத மன அழுத்தத்திற்கு தன்னறியாமல் ஆளானாள் கயல்.

ஊருக்கு உபதேசம் செய்தக் கயல் தன்னிலை என்னவென்று புரியாமல்..... பிறழ்ந்தாள்.

தொடரும்..



தொடர் : 09

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

ரஸ்னா ரம்ஸான்
இலங்கை , அக்குறணை

ஹோட்டலின் பிரம்மாண்டமான சரவிளக்குகள் (ளீஜ¬ழிஜ ளயிஷ்ளஷெவி) ஒவ்வொன்றும் நீலநிற ஒளியைப் பாய்ச்சி அந்த இடத்தையே ஒரு மிக அழகாகமாற்றியிருந்தது. ஐஸ்வர்யா தனது சேலையை சரிசெய்து கொண்டு, வேகவேகமாகத் அங்கிருந்து கிளம்புவதற்கும், அஷ்வின் தனது நண்பன் கவினுடன் அந்தப் பகுதிக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. ஒரு நொடி... ஒரே ஒரு நொடிதான், அஷ்வின் திரும்பியிருந்தால் ஐஸ்வர்யாவின் முகத்தைப் பார்த்திருக்கக்கூடும். ஆனால், அவளது வேகமான நடை அவளைக் கூட்டத்திற்குள் மறைத்துவிட்டது.

‘அண்ணா! இதோ இவங்கதான்...‘ என்று உற்சாகமாகக் கையை நீட்டிய சாலினியின் விரல் நுனியில்யிற்கு நேரே நிறைய பேர் இருந்தனர்

அஷ்வின் புருவத்தை உயர்த்தி, ‘யாரைச் சொல்ற சாலினி? இங்கே நிறைய பேர் இருக்காங்களே?‘ என்றான் மெல்லிய புன்னகையுடன்.

‘அய்யோ அண்ணா, ஜஸ்ட் மிஸ்! இப்பதான் அவங்க போனாங்க. அவங்க தான் ராகினியோட அக்கா... அவங்களுக்கு ஏதோ முக்கியமான போன் கால் வந்ததாம், அதான் அவசரமா போயிட்டாங்க. உங்களை அறிமுகப்படுத்தி வைக்கலாம்னு

பார்த்தா இப்படி ஆயிடுச்சு,' எனச் சாலினி சற்றே ஏமாற்றத்துடன் கூறினாள்.

அஷ்வின் லேசாகச் சிரித்தான். 'விடு சாலினி, அதுக்கென்ன... இன்னைக்கு இவ்வளவு பெரிய ஈவென்ட் நடக்குது. அவங்கதான் இன்னைக்கு மெயின் டிஷ்ஷை ஸ்பெஷலா செஞ்சிருக்காங்கன்னு மஹிரா சிஸ்டர் சொன்னாங்க. கண்டிப்பா அப்புறமா ஒருநாள் பார்க்கலாம்.'

அவன் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அவனது கண்கள் அந்தத் திசையையே பார்த்தன. ஏனோ தெரியவில்லை, அவள் யாரென்று தெரியாமல் இருப்பினும் ஒரு புது உணர்வு ஏற்பட்டு அவனது இதயத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒரு சிறிய அதிர்வு ஏற்பட்டது. ஆனால், அதை அவன் ஒரு தொழில்முறை ஆர்வமாக மட்டுமே கருதினான்.

அஷ்வினுக்கு ராகினியின் முக ஜாடையில் ஏதோ ஒன்று அஷ்வினுக்கு மிகவும் பரிச்சயமானதாகத் தோன்றியது.

'ஹலோ ராகினி... உங்க அக்கா ரொம்ப நல்லா சமைப்பாங்கன்னு கேள்விப்பட்டேன். என்றான் அஷ்வின் மரியாதையுடன்.

ராகினி சிரித்துக்கொண்டே, 'நிச்சயமா சார், எங்க அக்கா சமைச்சா அதுல ஒரு தனி ருசி இருக்கும். ஆனா அவங்க ரொம்ப அமைதியானவங்க.

அஷ்வின் தலையாட்டிவிட்டு அங்கிருந்து நகர முற்பட்டான். ஆனால் அவன் மனம் அந்தச் சமையலறையை நோக்கியே இழுத்தது. அவனுக்குள் இருந்த அந்தச் சிறந்த செஃப் (ளீஜுளக்ஷு), அந்த முகமறியா பெண் செய்த உணவை ருசித்துப் பார்க்கத் துடித்தான்.

அஷ்வின் நேராகச் சமையலறைக்குச் சென்றான். அங்கே மஹிரா மிகுந்த பரபரப்புடன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அஷ்வினைக் கண்டதும் அவர் மரியாதையுடன் எழுந்தார்.

'வாங்க சார், எல்லாம் தயாரா இருக்கு. நீங்க கேட்ட அந்த ஸ்பெஷல் சிக்கன் டிஷ் இதோ...' என்று ஒரு சிறிய தட்டில் வைத்து அவனிடம் நீட்டினார்.

அஷ்வின் அந்த உணவின் மணத்தை முதலில் நுகர்ந்தான். அந்த மணம் அவனது மூளைக்குள் இருந்த ஏதோ ஒரு பழைய நினைவுகளைத் தூண்டியது. அவன் மெதுவாக ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் வைத்தான்.

அடுத்த நொடி... அவன் உலகையே மறந்தான்.

அந்த உணவில் இருந்த காரம், புளிப்பு, மற்றும் அந்தத் தனித்துவமான மசாலா மணமும்... அது வெறும் சமையல் அல்ல. அது ஒரு அவனுக்கு பழக்கப்பட்ட உணர்வு. பல ஆண்டுகளுக்கு முன்னால், அவனது வாழ்க்கையின் முக்குயமான ஒரு பெண் அவனுக்காக இதே போன்ற ஒரு சுவையில் சமைத்து அவனுக்கு கொடுத்து இருக்கிறாள். அதே மணம்! அதே நேர்த்தி!

அஷ்வினின் கைகள் லேசாக நடுங்கின. 'மஹிரா சிஸ்டர்... இதைச் செஞ்சது யாரு ?'

மஹிரா 'சேர் நா வேர்க் பன்ற ஹோட்டல் சேர்வன்டா வேர்க் பன்ற ஒரு பெண் தான் சமச்சாங்க

அஷ்விட் 'வாட் சேர்வன்டா?

மஹிரா' ஆமா ஏன் சார், டேஸ்ட் சரியில்லையா?' என்று மஹிரா பதற்றத்துடன் கேட்டார்.

அஷ்வின் பதிலே சொல்லவில்லை. அவன் கண்கள் கலங்குவதைப் பிறர் பார்த்துவிடக் கூடாது என்பதற்காகத் திரும்பிக் கொண்டான். 'இல்லை...

இது அவளாக இருக்க முடியாது. அவள் இப்போது எங்கோ... இல்லை, இது வெறும் தற்செயலாக இருக்கலாம்' என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டான். ஆனாலும், அந்த ருசி அவனை விடவில்லை.

'மஹிரா சிஸ்டர், அந்தப் பொண்ணு பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? அவங்க எங்கிருந்து வர்றாங்க?' என்று அஷ்வின் கேட்டான்.

'அவ ஏதோ கிராமத்த சேரந்த பொண்ணு இப்போ புதிசா தான் சென்னைக்கு வந்திருக்கா ரொம்ப கஷ்டப்படுற குடும்பம்னு நினைக்கிறேன். ஆனா ரொம்பக் கௌரவமானவங்க. அவளுக்கு ராகினி னு ஒரு தங்கச்சி இருக்கா சேர் தனக்குள்ள சமையல் திறமைகள் நிறைய இருந்தும் அத வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்காததால் சேர்வன்ட்டா வேர்க் பன்றா

அஷ்வின் ஒரு நீண்ட பெருமூச்சை விட்டுவிட்டு, 'சரி, வேலையைப் பாருங்க' என்று கூறிவிட்டு வெளியே வந்தான். ஆனால் அவனது மனம் மட்டும் அந்த உணவின் சுவையிலேயே லயித்திருந்தது.

ஐஸ்வர்யா ஒரு ஆட்டோவைப் பிடித்து அவசரமாக பஸ் ஸ்டாப்பிற்கு வந்து சேர்ந்தாள். அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. ஒரு பக்கம் ஹோட்டலில் தோன்றிய புது உணர்வு இன்னொரு பக்கம் தன் அன்புத் தோழியை இரண்டு ஆண்டுகள் கழித்து சந்திக்கப்போகும் மகிழ்ச்சி

பஸ் ஸ்டாப்பில் ஒரு பெண் தனது லக்கேஜுடன் நின்று கொண்டிருந்தாள். அது ஆனிஷா தான்! ஐஸ்வர்யாவைக் கண்டதும் ஓடி வந்து அவளைக் கட்டிக்கொண்டாள்.

'ஐஸ்! நிஜமாவே நீ தானா இது? என்னடி இப்படி ஆகிட்ட? அந்தத் துள்ளல் கலகலப்பு எல்லாம் எங்க போச்சு?' என்று ஆனிஷா ஆதங்கத்துடன் கேட்டாள்.

ஐஸ்வர்யா மெலிதாகச் சிரித்தாள். 'காலம் எல்லாவற்றையும் மாத்திடும் ஆனிஷா. நீ எப்படி இருக்க? இரண்டு வருஷமா எங்க போன?

ஆனிஷா அவளை ஆழமாகப் பார்த்தாள். ' அந்த கதைய வீட்டுக்கு போய் மெதுவா சொல்றன் சரி உன்னோட ஆளு எங்க டி அவரு ஒன்ன தனியா இப்டி அனுப்பா மாட்டாரே

'ஐஸ்வர்யாவின் முகம் வெளிறிப் போனது. 'ஆனிஷா... ப்ளீஸ்! அந்த கதைய இப்போதைக்கு எடுக்காதே. என்றாள்.

ஆனிஷா' யேன்டி என்னாச்சு உனக்கு

ஐஸ்வர்யா' ஆனிஷா அது என் கடந்த காலம் அவர் என் வாழ்க்கைல இல்ல

அந்த காதல், அந்தத் துரோகம்... இனி வேணாம்

ஆனிஷா ' வாட் துரோகமா என்னடி சொல்ற

ஐஸ்வர்யா' ஹம் நீ இப்ப தான் வந்திருக்க வா முதல்ல வீட்டுக்கு போய் ப்ரஷ் ஆகு பிறகு ரிலாக்ஸா பேசலாம்

ஆனா ஒன்னு

ராகினிக்கு இதெல்லாம் தெரியாது. என் கடந்த காலம், ஒன்று இருந்ததே அவளுக்குத்.. தெரியாது. அவளைப் பொறுத்தவரை நான் அவளோட அன்பு அக்கா, அவ்வளவுதான்.'

ஆனிஷா' ஆனா ஐஸ், உண்மையை



எவ்வளவு நாளைக்குத் தான் மறைப்ப

'இல்ல என் கடந்த காலத்தோட சம்பந்தப்பட்ட அந்த நபர நா இன்னும் மீண்டும் சந்திக்கல அப்டி ஒரு சந்திப்பும் தேவல இனி என்னோட தங்கச்சிக்காக தான் எல்லாம் என கூறி அவளை அழைத்துச் சென்றாள் ஐஸ்வர்யா

ஹோட்டலில் இப்போது வரவேற்பு விழா உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது. மேள தாளங்கள் முழங்க, மணமக்கள் மேடைக்கு வந்தனர். அஷ்வின் மேலோட்டமாய் அனைத்தையும் கவனித்து கொண்டிருந்தான்.

அவினாஷ் அவனிடம் வந்து, 'டேய் அஷ்வின், என்னடா ஒரு மாதிரியா இருக்க?

அஷ்வின்' அந்த ராகினியோட அக்கா அதான் அந்த பொண்ணு செய்ய டிஷ்ஷ டேஸ்ட் பன்னேன். ஆனா

ஏதோ ஒரு ஞாபகம். அந்தப் பொண்ணு செஞ்ச சமையல் அப்படியே அவளை ஞாபகப்படுத்துதுடா,' என்றான் அஷ்வின் சோகமாக.

அவினாஷ்க்கு அஷ்வின் காதலிச்ச பெண் யாருனு தெரியாது ஆனா நடந்த விடயங்கள் கவின் மூலமாக கேள்விப் பட்டிருக்கான் அஷ்வின் மனதில் இருப்பதை தெரிந்து கொள்ள திட்டமிட்டான்.

' டேய் டேயேந் மறுபடியும் ஆரம்பிச்சிட்டியா? அவதான் உன்னை விட்டுட்டுப் போயிட்டால்ல? அப்புறம் ஏன் இன்னும் அவளையே நினைச்சுட்டு இருக்க? இன்னைக்கு உனக்கு எவ்வளவு பெரிய அந்தஸ்து இருக்குன்னு பாரு. இதையெல்லாம் அனுபவிக்க அவளுக்குக் குடுத்து வைக்கல, அவ்வளவுதான்,' என்றான் அவினாஷ்.

அஷ்வின் அமைதியாக இருந்தான். அவினாஷ் அவனையே சந்தேகத்தோடு பார்க்கிறான்.

அப்போது ரிஷாந்த் அங்கே வந்தான். 'என்ன மச்சான்... அந்தச் சின்னப் பொண்ணு ராகினி எங்கே? அவகிட்ட இன்னும் கொஞ்சம் வம்பு வளர்க்கலாம்னு பார்த்தேன்,' என்றான் சிரித்துக் கொண்டே.

'அவ அவங்க பிரண்ட்ஸ் கூட இருப்பா. நீ அவளை ரொம்பத் தொந்தரவு பண்ணாத ரிஷாந்த். அவ பாவம்,' என்றான் அவினாஷ்.

விழாவில் நடனம், பாட்டு என அந்த இடமே கலகலப்பாக இருந்தது. ஆனால் அஷ்வினின் கண்கள் மட்டும் கூட்டத்தில் எதையோ தேடிக் கொண்டிருந்தன. ஐஸ்வர்யா கிளம்பிவிட்டாள் என்று தெரிந்தும், அவள் மீண்டும் வரமாட்டாளா என்ற ஒரு ஏக்கம் அவனுக்குள் இருந்தது. அது அவள் தான் என்று தெரியாமலே



அவளை பார்க்கத் துடித்தான்.

விழா முடிந்து அனைவரும் கிளம்பத் தொடங்கினர். ராகினியும் அவளது நண்பர்களும் அஷ்வினிடம் விடைபெற்றனர்.

‘தேங்க்ஸ் அண்ணா, ரொம்ப நல்லா இருந்தது,‘ என்றாள் சாலினி.

‘ராகினி, உங்க அக்காகிட்ட நான் கேட்டதா சொல்லுங்க. அவங்க சமையல் ரொம்பப் பிரமாதம். முடிஞ்சா இன்னொரு நாள் ஹோட்டலுக்கு வரச் சொல்லுங்க. நான் நேர்ல பேசணும்,‘ என்றான் அஷ்வின்.

ராகினி சிரித்துக்கொண்டே, ‘நிச்சயமா சார்,‘ என்று கூறிவிட்டுத் தனது நண்பர்களுடன் கிளம்பினாள்.

அவர்கள் சென்ற பிறகு, அஷ்வின் தனியாக அந்தப் பெரிய ஹாலில் நின்றிருந்தான். வேலையாட்கள் மீதமுள்ள அலங்காரங்களைப் கலைத்துக் கொண்டிருந்தனர். அப்போது தரையில் ஒரு சிறிய செயின் கிடப்பதைக் கண்டான். அதை எடுத்துப் பார்த்தபோது, அதில் ஒரு சிறிய டாலர் (ஊளஜ ழிஜமி) இருந்தது.

அந்த டாலரில் ஒரு பாதியளவு இதயம் இருந்தது. அதைப் பார்த்ததும் அஷ்வினுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. ஏனெனில், அந்த இதயத்தின் மறுபாதி அவனது கழுத்தில் இப்போதும் இருந்தது!

‘ஐஸ்வர்யா...!‘ என்று அவனது வாய் மெதுவாக உச்சரித்தது.

அவள் இங்கேதான் இருந்திருக்கிறாள். அவள் தான் ஐஸ்வர்யாவா? அஷ்வினின் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. அவன் உடனடியாக ஹோட்டல் வாசலை நோக்கி ஓடினான். ஆனால் அங்கே இருள் மட்டுமே படர்ந்திருந்தது.

(நேசம் தொடரும்...)

# என் காதல் தேவதை....!!!

நீ கெஞ்சிக் கேட்டும்
சொல்லத் தயங்கினேன்
என் முதல் கவிதை
உன் பெயரென்று.....!!!
என் முதல் காதல் நீ
அது உனக்குத் தெரியாது
என் கடைசிக் காதலும் நீதான்
அதுவும் உனக்குத் தெரியாது.....!!!
எழுத் தைரியமுண்டு
மனம்தான் இல்லை
நான் விழுந்து கிடப்பது
உன் கன்னக் குழியில்.....!!!
புற்கள் மீதும் பூவாய் தெரிய
என்னவளால் மட்டுமே முடியும்.....!!!
உன் கொள்ளை முகத்தை
நினைவூட்ட வந்தது
வெள்ளை நிலா......!!!
மனைமாட்சி இல்லாள் கண்
இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்
என்பாள் என் மனையாள்......!!!
நானின்றி அவளில்லை
அவளின்றி நானில்லை
ஆகமொத்தத்தில்
நாமின்றி நாமில்லலை
அவள் என் காதல் தேவதை.....!!!!

ரிஃப்கா அன்ஸார்

# பிறப்புரிமை

1.சுயராஜ்ஜியம் பிறப்புரிமை
பால கங்காதர திலகர் முழக்கம்
சுதந்திரப் போர் எழுந்தது
இந்தியாவும் சுதந்திரம் பெற்றது

2.வெள்ளையனே வெளியேறு
சுதந்திரப் போராட்ட வீரர்கள்
ஒட்டுமொத்த குரலும் ஒலித்தன
சுதந்திர இந்தியா ஆனது

3.குருதி சிந்தினார்
குண்டடி பட்டனர்
வெள்ளையரை எதிர்த்தனர்
உயர்த்தி யாகம் செய்தனர்

4.அந்நாளில் தேசத் தலைவர்கள்
அரும்பாடு பட்டு பெற்றனர்
இந்திய சுதந்திரமிது
பேணிக் காப்பது கடமை

5.தலை குனிந்து வாசிப்பு
தலை நிமிர்ந்து வாழ்தல்
படித்ததைபிறருக்கு கற்பி
படித்தவை நினைவில் நிற்கும்

6.தாயின் அன்பு
பிள்ளைகளைத் தாங்கும்
சாதிக்க முடியுமென்று
தன்னம்பிக்கை பெற்றவள்

7.மழலையின் சிரிப்பில்
தாயின் முகம் மலர்ந்திடும்
பிணைப்பும் அதிகரிக்கும்
தொப்புள் கொடி உறவாகும்

8.தாய்மை பெரு
பெண்களின் வரம்
அளவான பிள்ளை
ஆனந்தமான வாழ்வு

9.கருவறையில் சிசு
பத்து மாதங்கள் சுமக்கிறாள்
தாய்மை பதவி பெறுகிறாள்
பெற்றதை சீருடன் வளர்ப்பாள்

10பிள்ளைகளுக்கு
உணவளிப்பாள்
மீதமுள்ள உணவை
சாப்பிடுவாள்
பிறர் நலம் காத்திடுவாள்
தன்னலம் கருதாத தாய்மை

11.பிள்ளையின் படிப்பு
தாயின் கரிசனம்
தங்க நகைகள் அடகு
மனதில் மகிழ்ச்சி

12.பெருகிடும் கருத்தரிப்பு
வியாபார தந்திரம்
தாய்மை பேரு என்பது
இறைவனின் அருட்கொடை

13.பிள்ளைப் பெற்றாள்
உரியவரிடம் ஒப்படைத்தாள்
ஊதியம் பெற்றாள்
ஊருக்கு புறப்பட்டாள்

14.தமிழரைக் கண்டால்
மொழிப்போற்று வருகிறது
பேசும் மொழி இனிதாகிறது
உறவுகளும் இணைகின்றன

15.தமிழைப் படி
வாழ்க்கை புரியும்
பொது நலனில்
அக்கறை பிறக்கும்

16.தமிழன் ஆட்சி
வாழ்வை வளமாக்கிடும்
துன்பங்கள் அகலும்
நல்வழிகள் பிறக்கும்

17.அயலகம் சென்றேன்
தமிழில் பேச சொல்லி கேட்டேன்
தமிழர்கள் உறவுகளாயினர்
இதுவே தமிழின் சிறப்பு

18.காந்தப் பார்வையில்
ஈர்த்திடச் செய்தக் காதலி
இரும்பு துண்டாக
ஈர்த்திடச் செய்வது காதல்

19.காதல் கடிதங்கள் சேமிப்பு
பழைய தாள்களில் நிரம்பின
பருவ வயதில் தாக்கம்
காதலி நினைவு தொடர்கிறது

20.காதல் செய்யவே
ஒரு கன்னியும் காணோம்
தேடிக் கொண்டிருக்கிறேன்
முப்பொழுது வேளையிலும்

21.காதல் மொழிப் பேசினால்
நானும் உற்றுக் கவனித்தேன்
உதட்டசைவில் புரிந்து கொண்டேன்
தமிழ்க் காதலி கிடைத்தாள்

22.மூன்று சொற்களில்
முடிவுப் பெறாத காதல்
தொடர்ந்து கொண்டே போனது
அலைபேசி உரையாடல்

23.காலங்கள் ஓடினாலும்
காதல் அழிவதில்லை
பொய்யான காதல்
அழிவது நிச்சயம்

24.காதலை அடைவதற்கு
தேவை முயற்சி
வெற்றி அடைந்திட
செய்வோம் பயிற்சி

25.கடலின் ஆழம்
பெண்ணின் மனசு
அமைதியாய் இருக்கும்
கண்டறிதல் கடினம்

26.இளமைப் பருவம்
காதலும் இனித்தது
வயோதிகப் பருவம்
காதலும் கசக்கிறது

27.காதலில் வென்றார்கள்
சாதியத்தில் பிணமானார்கள்
கிராமங்களில் அவலங்கள்
தொடர்கதை யாகின்றன

28.சாதி மதங்கள் இல்லை
பதிவுத் திருமணங்கள்
சிக்கனமாக நடக்கின்றன
காதலர்கள் மனமகிழ்ச்சி

29.காதல் தம்பதியர்கள்
புரிதலும் விட்டுக் கொடுத்தாலும்
இணைபிரியாத வாழ்க்கை
பொன்விழாவை எட்டுகிறது

30.மொழிப்பெற்றுக்கொண்டவர்கள்
தமிழை கண்ணெனக் காத்தனர்
மொழி வளர்ப்பதற்கு எழுதினர்
செம்மொழித் தகுதியும் பெற்றனர்

கவிஞர்
இரா. சீ. பாலகுமார்.M.A.,
சந்தோஷபுரம். சென்னை - 600073.



## எதிர்காலத்திற்கான தொடக்கம்

வெற்றி வேண்டுமெனில்
இலக்கை தீர்மானி
முயற்சி செய்து
பயிற்சியை பெருக்கு
உழைப்பே உயர்த்துமென்று
உணர்ந்து வாழத்தொடங்கு
இன்பம் துன்பமென்ற
இரண்டையும் எதிர்நோக்கி
கனவெல்லாம் ஒருநாள்
நனவாக மாற்றிடு
நம்பிக்கை ஒன்றே
நமக்கு துணையாகும்
என்பதை உந்தன்
இதயத்திடம் சொல்லு
நல்லதொரு வாய்ப்போடு
நானிலத்தில் நிலைத்துநிற்க
எண்ணியதை அறிந்து
எப்போதும் காத்திருக்கும்
உனக்காக தொடங்கும்
இனிமேல் எதிர்காலத்திற்கான
தொடக்கம்

ப.வெங்கட்ரமணன்

# நம்பிக்கை

இங்கு ஒன்றை செய்து முடிக்கும் வரை
உன்னை யாரும் நம்ப போவதில்லை
இது எழுதாத விதி

இங்கு தொடக்கத்திலேயே துண்டிக்க
நினைப்பவர்கள் அதிகம்
வேண்டுமானால் நீங்கள் ஒன்றை
செய்யப்போவதாக வெளியே
சொல்லிப்பாருங்கள்
வரிசையாக வருவார்கள்
இது எதுக்கு
இதெல்லாம் நடக்குற காரியமா
அவங்கெல்லாம் எவ்வளவு பெரிய ஆளு
அவங்களே சும்மா இருக்காங்க
தகுதிக்கு தகுந்த மாதிரி சிந்தி
இது உனக்கே அதிகமா தெரியலயாஇ
இதுவரைக்கும் இதுமாதிரி யாரும் நம்
குடும்பத்தில் செய்யவில்லை
நீயா?
உன்னால முடியுமா?
இப்டிதான் நானும் சொல்லிக்கொண்டு
இருந்தேன் ஆனால் முடியல என்று
இன்னும் பல கோணத்தில் சொல்வார்கள்
எதுவும் செய்யாதவர்கள்

இதுவே நீங்கள் நேர்மறையாக
சிந்திப்பவர்களிடம் சொல்லிப்
பாருங்கள்இபல வெற்றி பெற்றவர்களை
உதாரணம் காட்டுவார்கள்
ம்ம் செய் என்பார்கள்
அனுபவமாவது கிட்டும் என்பார்கள்
முதலில் இறங்கு என்பார்கள்
எந்த தீர்மானமும் இல்லாமல் செய் என
வாழ்த்து சொல்லுவார்கள்

நம்மை சுற்றி சுற்றி பார்த்தால்
ஒன்றை செய்பவர்கள் செய்து
கொண்டுதான் இருக்கிறார்கள்
வெட்டியாக குட்டு சுவர் மேல் அமர்ந்து
பேசுபவர்கள் பேசிக் கெட்டு தான்
இருக்கிறார்கள்

இதில் நான் யார் என்பதை
நீங்களே உங்களை கேட்டுக்கொள்ளுங்கள்

உங்களுக்குள் ஒன்றின் மீது பற்றிருக்கும்
அது எதுவென தெரிந்து
எடுத்து செய்யும் பொழுது
அடுத்தது என்ன செய்ய
வேண்டுமென்பது விளங்கும்

படிப்பு என்பது கூட பால்வாடியில்
தொடங்கியது தான்
இங்கு எல்லாமும் அப்படித்தான்
சில காரியங்கள் உடனே நடக்கும்
சில காரியங்கள் காலம் எடுக்கும்

செய்யத்தொடங்கும் போது கேலி வரும்
கண்டு கொள்ளாதீர்கள்
அதை நான் அதிகம் கண்டுள்ளேன்
ஒருவரின் நிறம்இ உயரம்இ படிப்பு
குடும்பம்இ பின்புலம் இவைகளை வைத்து
எடை போடுவது
இவள் எதை சொல்லிவிடப் போகிறாள்
இவளுக்கு என்ன தெரியும்
இவள் எழுதினால் இதைத்தான் எழுதுவார்

இவள் பேசினால் இதைத்தான்  பேசுவார்
இவள் இப்படித்தான்
இதைப்போல் இவள் என்னுமிடத்தில்
இவன் என்று போட்டுக்கொள்ளுக்கள்
ஆணுக்கும் அதே விதி தான்
அடுத்தவர்களை கணிப்பதிலேயே
காலம் நடத்தினால்
அவரவர் செய்யப்பொவதென்ன
இங்கு யாரும் வீணாய் பிறக்கவில்லை
அவரவருக்கும்  பிறப்பின் நோக்கமொன்று
ஒன்று உள்ளது
அதில் அவர்கள்
வல்லவர்களாக இருப்பார்கள்
இன்றைய தோற்றத்தை வைத்து எந்த
முடிவுக்கும் போகக்கூடாது

மற்றவர்களை காட்டிலும்
தன்னுள் இருக்கும் நம்பிக்கையே
முதன்மையானது
யாரென்ன சொன்னால் என்ன  என்று
எதையும் காதில் வாங்காமல்
தன்னுடைய காரியத்தில் மட்டும்
உறுதியாய் இருந்தால்
நிச்சயம் வெற்றி கிட்டும்
நானும் அதற்கான செயல்களை தான்
செய்து வருகிறேன்.
ஒருவர் குடிசையில் இருக்கலாம்
ஒருவர் அரண்மனையில் இருக்கலாம்
ஆனால் எல்லோரும்
பூமியின் மேல்தான் இருக்கின்றோம்
இங்கு எல்லோருக்கும்
சுவாசம் ஒன்றுதான.
மீண்டும் சந்திப்போம் மகிழ்ச்சி.


**நாகேஸ்வரி**
திரைத்துறை
சென்னை தமிழ்நாடு.




# கடல் கவிதை

சுனாமி வந்த அந்த காலை,
கடலும் கருணை மறந்த வேளை
மணலும் மனித சுவாசமும்
அலையில் மிதந்திட்ட சோகம்

வீடுகள் கண்ணீரால் உருகின,
பாடுகள்பலனின்றிச் சிதறின.
கேடுகள் யாவும் சூழ்ந்தன
பாடுகள் படும் மீனவர் வாழ்வில்

தாய்மார்களின் சாக்குரல்
தந்தையரின்  கூக்குரல்
தெருவெங்கும் ஒடி
காற்றைத் தாண்டி
விண்ணைத் தொட்டது அந்தோ…

குழந்தைச் சிரிப்புகள்
நினைவாக மட்டும் மிஞ்சின.
குடும்பங்களின் வறுமையும் சேர்ந்து
கோரத்தாண்டவம் ஆடின
மீனவரின் வலைகளில்
இன்று சிக்கியிருக்கிறது
இந்தநாள் நினைவுகள்

இழப்பின் எடையில் காலம்
எப்படியோ மெதுவாக  தேறிவிட்டது
ஆனாலும் சாம்பலில் இருந்து
மனிதம் மீண்டும் எழுந்தது.

மானுடச் சமுத்திரம் நாமென
சங்குகள் முழங்கிட
நினைவுதினம் சொல்லுகிறது
மறக்காதே, மீள்க.
கடலை மதித்து வாழ்,
உயிர்களைக் காக்க ஒன்றிணை.

முனைவர்.
பெண்ணியம் செல்வக்குமாரி,
புதுச்சேரி.

# அன்பின் பாலம்

## ஸில்மா ஹிதாாயத்துல்லா

**பகுதி - 09**



உனக்குள் நீயும் எனக்குள் நானும்

என்று தானே ஒப்பந்தம் போட்டோம்...

தப்பாகிப் போனால் என்னவாகும் என் உயிரும்...??

ஹிஸ்னாவுக்கு ஒன்றும் புரியவில்லை, புலப்படவும் இல்லை. ஏதோ இனம் புரியாத இடத்தில் தன்னந்தனியே விடுபட்டவள் போலத்தான் தன்னை உணர்ந்து கொண்டாள்.

'மச்சான் ஏன் இப்படி செய்கிறார்..?' என்பது அவளுக்குப் புதிராகவே இருந்தது. இதுநாள் வரையில், கல்யாணம் முடித்து இத்தனை வருடங்களில், மச்சான் இப்படி நடப்பது இதுதான் முதல் தடவை என்றே அவளுக்குத் தோன்றியது.

பிள்ளைகளைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு கொஞ்சம் வேகமாக நடந்தாள்.

கணவனுக்கு என்ன நடந்திருக்கும் என்று அவள் பெண் மனம் ஒருபுறம் தவிக்க, ஒன்றும் இருக்காது என்று மறுபுறம் வாதாடித் தள்ளியது.

நிமிடங்கள் நகர நகர, அவள் முன் வாசலின் அருகில் வந்து விட்டாள்.

அங்கே...

அவள் கண்ட காட்சி...

அவளைத் தலைகீழாய்த் திருப்பித் தாக்கியது.

ஒரு ஆணை எம்பியுளன்ஸில் இருந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள். உள்ளே அந்த நோயாளியுடன் வந்திருந்த பெண்மணி, அருகில் வேறு ஒருத்தியைக் கண்டதும் சத்தம் போட்டுச் சண்டையிட ஆரம்பித்தாள். பதிலுக்கு மற்றவளும் சேர்ந்து கூப்பாடு போடவே அங்கு பெரும் களேபரம் உருவானது.

போகிறவர்கள், வருகிறவர்கள் எல்லோரும் அதையே பார்த்த வண்ணம் இருந்தனர். ஹிஸ்னாவுக்கு சற்று முன் தான் நினைத்த காட்சியைப் படமாய் நேரில்

காண்பது போலவே இருந்தது.

“இதப்போல இவரும் எவளையாவது இழுத்துட்டு வரப் போறோ...? அதுக்குத்தான் மச்சான் இப்படி செய்றோ...”

வார்த்தைகள் அவளை அறியாமல் மெல்லிய ராகத்தில் வெளியே வந்தது.

அஸ்மா சொன்ன எதிர்வீட்டு சபீஹாவின் கதையையும், இன்னும் கதையில் மற்றும் திரைப்படங்களில் வந்த அத்தனை கதைகளையும் நினைத்துத் தவித்துப் போனாள்.

தன் வாழ்வு இன்றோடு முடிந்து விடுமோ....

பிள்ளைகளோடு இப்பொழுது நிற்பது போல....

நிர்க்கதியாக நிற்க வேண்டி வருமோ...

பலவாறு யோசனை சென்றது.

ஏன் அவளுக்கு அவன் மேல் சந்தேகம் வரவேண்டும்..? என்று ஒரு கணம் ஆராய்ந்தாள்.

எதுவும் தோதாய் காரணம் அமையவில்லை.

ஆனால், உள் மனம் சொல்லியது இப்படியும் நடக்கலாம் என்று.

ஒருவேளை குழந்தைகளை எடுத்துக்கொண்டு...

என்னை மட்டும் போகச் சொல்லிவிட்டால்....?

அவரும் இல்லாமல்.....

குழந்தைகளும் இல்லாமல்....

எப்படி நான் வாழ்வேன்.....?

என் உலகமே அவர்கள் தானே.....

‘என்ன யோசனை இது?

அவர் அப்படிச் செய்வாரா...’

என்று முற்றும் போடத் தொடங்கிய மனது,

‘செய்யக்கூடியவர் தான்’

என்று குற்றப் பத்திரிகையும் வாசித்தது.

வாயிலின் அருகில் காத்திருக்கும் இந்த ஐந்து நிமிடத்தில் 500 யோசனைகள் அவளின் உள்ளே துளித்துளியாகச் சேர ஆரம்பித்திருந்தன.

‘நடப்பது நடக்கட்டும்....

எது நடந்தாலும் பார்த்துக் கொள்வோம்....

படைச்ச ரப்பு ஈக்கிறான்...

யாரு கை உட்டாலும் அவன் கையுட மாட்டான்...‘

புதுவித தைரியம் துளிர்விட்டது...

மூன்று பிள்ளைகளின் கைகளையும் ஒரு சேரத் தன் ஒற்றைக் கையால் பிடித்துக் கொண்டாள்.

“உம்மா... அங்க பாருங்க... சாச்சா வார....”

மூத்த மகன் சந்தோஷத்தில் கத்தியதும், அவள் பார்வை அவன் கைகாட்டிய திசையை நோக்கி வீசியது.

மச்சானைக் கண்டதும் நவாஸ் எங்கே என்று அவள் விழிகள் துலாவத் தொடங்கின.

நவாஸ் அகப்படவே இல்லை...

நவாஸ் என்ன செய்யப் போகிறான்...?

அன்பின் பாலம் தொடரும்....




புத்தக வடிவமைப்பு மற்றும் அச்சக வேலைகள்
அனைத்திற்கும் அனுகவும்
குறிப்பிட்ட காலத்தில் கால தாமதமின்றி
குறைந்த கட்டணத்தில் செய்துத் தருகிறோம்

# 2026

## HAPPY NEW YEAR

## புத்தாண்டு வாழ்த்துகள்

வந்தது புத்தாண்டு வாழ்வில் வசந்தங்கள்
தந்தே இனிதாகத் தங்கட்டும் - சொந்தங்கள்
பந்தங்கள் ஒன்றாகிப் பாரெங்கும் கைகோர்க்கத்
தந்தேன்பூச் செண்டுத் தமிழ்

# தமிழ்நெஞ்சம்

